427

427
I-58

இராஜ சிற்பி.

ஆசிரியர்கள்:
அ நடராசன்
து. பாண்டியன்.
பாகனேரி

வெளியீடு
அண்ணா படிப்பகம்,
அலவாக்கோட்டை.
இராமநாதபுர மாவட்டம்
தமிழ்நாடு.

O.,2N,R
N58
103766

அண்ணா படிப்பக வெளியீடு - க.

உரிமை ஆசிரியர்களுக்கே

விலை ரூபாய் ஒன்று.

இராஜ சிற்பி.

ஆசிரியர்கள்:

அ. நடராசன்

து. பாண்டியன்.

பாகனேரி

வெளியீடு

அண்ணா படிப்பகம்,

அலவாக்கோட்டை.

இராமநாதபுர மாவட்டம்

தமிழ்நாடு.

அண்ணு படிப்பக வெளியீடு - க.

உரிமை ஆசிரியர்களுக்கே

விலை ரூபாய் ஒன்று.

வணக்கம்.

எங்கள் படிப்பகத்தின் முதல் வெளியீடாக "இராஜ சிற்பி" என்னும் இந்நூலை நாட்டிற்கு அளிப்பதை எங்கள் கடமைகளில் ஒன்ருகக் கருதுகின்ரேம்.

சிக்கிச் சீரழிந்த சமுதாயத்தைச் சீர்படுத்த முனைந்திருக்கும் நண்பர்கள் **அ நடராசன்** அவர்களும் **து. பாண்டியன்** அவர்களும் எழுதிய இந்நூலை வெளியிட நாங்கள் பெரிதும் மகிழ்கிரேம்.

இந் நூலுக்கென முகவுரை தந்துதவிய நண்பர் பாகனேரி உ. பில்லப்பன் B.A. Hons. அவர்களுக்கு எங்களது இதயம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிரேம்.

இதனை அச்சிட்டுத் தந்த 'உமையாள் அச்சகத்தின்' உரிமையாளர் திரு. கண. நா. சுப்பிரமணியம் அவர்களுக்கும், இப் புத்தகம் வெளிவர பல்லாற்ருனும் உதவி தந்த தோழர் குப. சுந்தரம் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி, வணக்கம்.

இதனை வரவேற்று எப்போதும் ஆதரவளிக்கும் உங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

வணக்கம்.
பழ. சொ. பழனியப்பன்,
செயலாளர்.

முகவுரை.

"**நாடகம்**" நல்லதோர் கலைப் படைப்பு. மேலும் மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிடும் ஒரு சிறந்த பொழுதுபோக்கு. இதுதான் பொதுவான நோக்கு.

இன்றோ எனில் அது நாட்டின் நிலைமையை மாற்றப் பெரிதும் பயன்படும் ஆற்றல் மிக்க ஒரு சக்தி. அன்று ஆரியம் புகுந்தபின் அதன் பிடி பலப்பட வழியேறியது நாடகமே சான்று. கிருஷ்ணலீலா போன்று பலப்பல கடவுள்கள் நடித்த நாடகங்கள்.

இந்நிலையிலே ஒரு திருப்பந்தான் நாடகக் கலையின் மறுமலர்ச்சி ரஷ்யா போன்ற நாடுகள் தன் விடுதலையை நிலைக்கச் செய்து நிலையை உயர்த்தப் பெரிதும் துணை நின்றது நாடகமே.

என்? நம் நாட்டில் விழிப்புணர்ச்சி ஏற்பட நல்லவர்கள் கையாளும் ஆயுதமே அதுதான். "நாம்" வைத்திருப்பவைகளில் ஒன்று அது.

இவ்வகையில் தோழர்கள் **அ. நடராஜன் து. பாண்டியன்** இவர்களது முயற்சி ஒருநல்ல ஏற்பாடு. கதையில் விறுவிறுப்பு இருக்கிறது. மூளை பழையதானாலும் அதன் பலன் இன்று தேவைப்படும். சீர்திருத்தத்திற்கேற்ப அமைந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. நல்லவர்கள் வேடத்தில் பொல்லாதவர் புகுந்து சமுதாயத்தைச் சீர்கேடாகச்செய்யும் நிலையை ஓரளவிற்கு விளக்குகிறது.

வளர்ப்பானேன். தோழர்களின் புது முயற்சி மேலும் நிறைய வளர்வதற்கான முன் அறிவிப்பாக அமைந்துள்ளது. வாழ்க அவர்கள் முயற்சி வளர்க அவர்கள் தம் ஊக்கமும் திறனும்.

உ. பில்லப்பன் B. A. (Hons)

படிக்கு முன்........................!

'இராஜ சிற்பியை' உருவாக்கிய எங்களிடமிருந்து, உங்களுக்குச் சில சொற்கள் !

வீரன் யாராயிருந்தாலும், அவனது வீரம் சிறிது காலம் மறைக்கப்பட்டே, பின் வெளியாகிறது. காரணம் சூழ்நிலை. மதிக்கமுடியா வீரன் - தினகர் அவனுந்தான் வாழ வேண்டியிருந்தது சிற்பியின் உருவிலே சிலகாலம் !

பகைவனல் துரத்தப்பட்டு, பகைமைகொண்டிருக்கும் பழைய உறவினரிடம் பணியாளாக இருந்து, பகைவன் வளர்த்த பசுங்கிளியைத் தன் தோள்களில் தொத்தவிட்டு வந்தானே அந்த வீரன் !

காலம் சும்மாவா இருந்தது ! ஓடியது ! ஓடியது !! அதன் ஓட்டத்தில் உயிரிழந்தனர் உன்மத்தர்கள் ! வாழ் விழந்தனர் ! வகையற்ருேராயினர் ! உண்மை வெளிப்பட் டது ! உறவு பலப்பட்டது !! பின்............!

வாருங்கள், 'இராஜ சிற்பியை'க் கேட்போம் மற்றவையை.

வணக்கம்.

"இராஜ சிற்பி"

நாடக உறுப்பினர்கள்.

★ தினகர்:- இரத்தினபுரி இளவரசன் (சிற்பி)

★ சந்தர்:- இளவரசன் நண்பன் (சேனாதிபதியின் மகன்)

★ விக்கிரமன்:- இரத்தினபுரி மன்னன்
ராணி, மற்றும் பலர்.

★ நிரும்பன்:- மகேந்திரபுரி மன்னன்.

★ திராட்சை:- கேசல நாட்டு இராணி,
மந்திரி, ஒற்றன், மற்றும் பலர்.

★ மாமல்லன்:- மச்சநாட்டு மன்னன்.

★ பத்மா:- இளவரசி.

★ சாரதா:- இளவரசியின் தோழி.

★ சோமநாதன்:- மந்திரி, (கொள்ளையர் தலைவன்)
தளபதி, காவலன், மற்றும் பலர்.

காட்சி 1.

நேரம்: **காலை.** உறுப்பினர்: **அரசன் நிகும்பன் அமைச்சர்கள், தளபதி,** மற்றவர்.

[மகேந்திரபுரி அரசன் நிகும்பன் நாட்டாசை பிடித்தவன் அகில உலகையும் ஆளும் எண்ணங்கொண்டவன்.]

அரசன்: மந்திரிகளே! படைத் தலைவர்களே! நமது நாட்டின் வெற்றி முரசம் எட்டுத் திக்குகளிலும் இடி முழக்கம் செய்கிறது! சீறிவந்த சிற்றரசர்கள் எல்லாம் சீரழிந்துவிட்டனர் களத்தில்! இன்னும் நமக்கு அடிமையாகாது இருக்கும் நாடுகள் நாலைந்துதான். பார்ப்போம் அவையும்! பணிய வைப்போம் தலைதுனிய வைப்போம் அத்தருக்கர்களை!........... மன்னர் மன்னனாக நான் விளங்க வேண்டும்! இம் மண்ணுலகே என்கையிற் கிட்டவேண்டும்!

அமைச்சர்: மங்காப் புகழ்பெற்ற மகேந்திரபுரியை யாரும் இதுவரை அசைத்ததுமில்லை இனி அசைக்கப் போவதுமில்லை. வெற்றியை நமக்களித்த தளபதிகளுக்கும், படை வீரர்களுக்கும் அவர்கள் பணியின் சிறப்பிற்காக உற்ற உதவியான வெற்றி விருதுகளை, வீரச் சின்னங்களை அரசர் தம் கையாலேயே வழங்கவேண்டும்.

அரசன்: நடக்கட்டும் அமைச்சரின் அவாப்போல்!

தளபதி: அரசருக்கும் அமைச்சருக்கும் எனது ஒரு வேண்டுகோள். கெங்கா நாட்டிற்கு இடையிலே இருக்கும் இரத்தினபுரியை முதலில் கைப்பற்ற வேண்டும். அவர்களின் ஆணவத்தை அடக்க வேண்டும் விக்கிரமனின் ஆட்சியை ஒழிக்கவேண்டும் இளவரசன் தினகருடையவீரத்தைத் தாழ்த்த வேண்டும். சேனாதிபதி மகன் சந்தருடைய கொட்டத்தை அடக்கவேண்டும்! இரத்தினபுரியின் ஆட்சியையும், வீரத்தையும் போற்றிப் புகழ்கின்றனர் அந்நாட்டு மக்கள்!

அரசன்: அப்படியானால், நாளைக்கே இரத்தினபுரிமேல் போருக்குப் புறப்படட்டும் நம் படைகள்.

அமைச்சர்: அரசே! முதலில் ஒற்றன் ஒருவனை அனுப்பி அந் நாட்டின் சிறப்புகளையும் அவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் பார்த்துவரச் சொல்லுவோம். அதற்குப்பின் போருக்குப் புறப் படுவோம்.

அரசன்: அப்படியே ஒற்றனை அனுப்பிவையுங்கள்!

அமைச்சர்: யார் அங்கே? [ஒற்றன் வருதல்]

அமைச்சர்: இரத்தினபுரிக்குச்சென்று அங்குள்ள நிலைமையை அறிந்து வா!

ஒற்றன்: அப்படியே! [ஒற்றன் போதல் பரிசுகள் வழங்கல்]

[அரசன் எதையோ நினைத்தவண்ணமாக இருக்கிறான்! அவனால் சிறையில் அடைக்கப்பட்ட, அழகு நங்கை கேசளநாட்டு இராணியின் நினைவு வரவே............]

அரசன்: கேசளநாட்டு இராணியை எங்கே வைத்திருக்கிறீர்கள்?

[அரசன் எழுந்து நின்று பிறகு வேகமாக அந்தப்புறம் நோக்கிப் போகிறான்].

காட்சி 2.

நேரம்: காலை. **இடம்: நிகும்பனின் அந்தப்புரம்**

உறுப்பினர்: நிகும்பன், திராக்ஷை, தோழிகள்.

[கேசளநாட்டின் இராணி திராக்ஷையைச் சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள் அவளுக்குத் தக்க தோழியரைக் காவல் வைத்திருக்கிறான் நிகும்பன். அன்ன ஆகாரமின்றி இராணி அழுது கொண்டிருக்கிறாள். நிகும்பன் வருகிறான் தோழியர் வெளியேறுகின்றனர். அவள் இருக்கும் பஞ்சணையின் பக்கமாக நெருங்குகிறான். அவள் எழுந்து நிற்கிறாள்.]

நிரும்பன்: அன்னநடை மாதே...! அசைந்தாடும் கொடியே! வண்ணமலர்ச்சோலையின் வாகுள்ளபெண்மயிலே திராட்சைக்கொடியே! தெவிட்டாத தேன்பாகே! இதோ! இந்த அரண்மனை, ஆடம்பரம் அத்தனை ஆட்களுக்கும் நீ இராணி! எங்கே உன் சிவந்த மலர் முகத்தில் சிரிப்புப் பொங்கட்டும்....! உன் காதலால் வாடும் என் இதயத்தில் களிப்புப் பொங்கட்டும்! கற்கண்டே!

திராக்ஷை: வேண்டாம்! அரசே வேண்டாம்!! அன்னியனின் மனைவி நான் எங்கள் நாட்டைத்தான் உங்கள் வேட்டைக் காடாக்கிக்கொண்டீர்கள். என் கணவனைக் கொன்றீர்கள் அதோடு சேர்த்து என்னையும் எமனுலகத்திற்கு அனுப்பிவையுங்கள். நேர்மை உள்ளவரென்றால் இவ்விடத்தை விட்டகன்று விடுங்கள்! அரசே! போய்விடுங்கள்!

நிரும்பன்: இரும்பிடம்தான் எறும்பு நெருங்காது! கரும்பையுமா விட்டு வைக்கும்! காதற் கிழத்தியாயிரு! இல்லையேல் சாதற்குத் துணி! உன்னை விட்டு என்னைப் போகச் சொல்கிறாயா? எப்படி முடியும் கண்ணே! பலநாள் பாடுபட்டு படைவீரர் பலரை வீழ்த்திக் காணிக்கையாக்கி உன்னைக் கொண்டு வந்திருப்பது, வைத்தழகு பார்க்கும் எண்ணத்தி லல்ல! வண்ணச்சிலையே! இனிமேலாவது புரிந்து கொள்! கனிஇதழ் சாறுதா! அது இனிக்கிறதா என்று பார்க்கிறேன்! கையைக் கொடு! காந்தானை விட மென்மையானதா என்று ஆராய்கிறேன்! எங்கே ஒரு சிரிப்பு.... முத்தாரமா என்று பார்ப்போம் அந்தச் சிரிப்பு.

திராக்ஷை: உமக்குப் பித்தம் மெத்தவும் பிடித்து விட்டது சத்தம் போடக்கூட சக்தியில்லை என்னிடம்! போய்விடுங்கள்! உங்களுக்குப் புண்ணியம்உண்டு

நிரும்பன்: நித்தம் நித்தம் உன் ஏக்கத்தால் வாடிய எனக்குப் பித்தம் பிடிக்காமல் என்ன செய்யும்! கொடு எனக்கொரு முத்தம்! தீர்ந்துவிடும் இந்தப்பித்தம்

திராட்சை: இப்போது நீர் எல்லையைத் தாண்டுகிறீர்! தொல்லைதான் கிடைக்கும் பரிசாக! போய்விடுங்கள்.

நிகும்பன்: போய் விடுங்கள்....போய்விடுங்கள் என்று வாய் கிழிய கத்தாதே! தேனை உண்ண வந்த வண்டு வண்ணமலரை விட்டுப் போகுமா? வலை போட வந்த வேடன் மானைப் பிடிக்காது தான் போய் விடுவானா? ஓநாயை விரட்டிய வேங்கை வெற்றி யடையாமலா போகும்!

[நெருங்குகிறான் திராட்சையை அணைக்கிறான் அவள் உதறித்தள்ளி யோடுகிறாள் மூலைக்கு தொடர்கிறான் நிகும்பன்.]

திராட்சை: அரசே! என்னைத் தொடாதீர்கள் உங்கள் கால்களைப் பிடித்துக் கெஞ்சிக் கேட்கிறேன் (கால்களில் விழுகிறாள்) நாட்டையாளும் மகாராஜா வாகிய தாங்களா இந்த எண்ணம் கொள்வது? செங்கோல் பிடித்து நீதியை நிலைநாட்டி, நேர்மையை அனுசரித்து, கடமையைக் கைக்கொண்டு ஆளவேண்டிய நீங்கள் கேவலம் விதைவையான என் கற்பைச் சூறையாட நினைப்பது நியாயம் அல்ல என்னை விட்டுவிடுங்கள்! மறந்து விடுங்கள் நீங்கள் இப்படிச் செய்வதைப் பார்த்துத்தான அமைச்சரிலிருந்து, ஆண்டி வரை அணங்குகளை வலைபோட்டு பிடிக்கும் அர்பர்களாகின்றனர்! அரசன் எவ்வழி.... அவ்வழி குடிகள்! புண்ணியத்தை புறக்கணித்துவிட்டு, பாவத்தை விலை கொடுத்து வாங்காதீர்.... கண்களை விற்றுச் சித்திரம் கொள்ளாதீர்கள்.

நிகும்பன்: ஹஹஹ.... ஹஹஹ.... ஹஹஹ புண்ணியம்.... சொர்க்கம்.... பாவம்... நரகம் இவையெல்லாம் கையால் ஆகாதவனுக்கு அல்லவா வேண்டும்! எனக்குத் தேவை இந்தத் திராட்சைதான்!

[என்று திராட்சையை அணைக்கிறான் நிகும்பன்....திராட்சை நிகும்பனின் இடையில் இருக்கும் கத்தியை எடுத்துக்கொண்டு]

திராட்சை: நில் அப்படியே! அருகில் வந்தால் சொருகி விடுவேன் கத்தியை! என்னுயிர் உள்ளவரைக்கும் என் கற்புக்குக் களங்கம் கற்பிக்க விடமாட்டேன் பெண்ணாசை பிடித்த பேயே! பெண்களைக் கசக்கி நுகரும் கயவனே! காம வெறிபிடித்த காதகா! திராட்சையைத் தின்றுவிடலாம் என்று எண்ணாதே! என்னிலைமையில் இருந்தாவது தெரிந்து கொள்! திருந்த முடியாது என்றால் நான் இறந்ததும் என் உடலை எடுத்துக் கொள்! ஆனந்தமாக அனுபவித்துக்கொள்!

நிரும்பன்: ஹஹஹா.......... ஹஹஹா............

[திராட்சை திடீரென்று கத்தியைத் தன் மார்பில் குத்திக்கொண்டு கீழே விழுந்திறக்கிறாள்....]

நிரும்பன்: ஆ.... மலர் தானே கருகிவிட்டது! திராட்சை தானே அழுகிவிட்டது! இன்பத்தின் எல்லையைக் காணவந்தால்.... துன்பத்தின் தொல்லை இன்னும் விட்டபாடில்லை (கையைத் தட்டி) யார் அங்கே?

(சேவகன் வருதல்)

இவளைத் தூக்கி அப்புறப்படுத்துங்கள் அகங்காரி! இவள் பெண்ணல்ல! பேய்!! (தனக்குள்) இணங்க மறுத்துவிட்டாளே! இன்பக் கோட்டையைத் தூளாக்கி விட்டாளே!! [திரை]

காட்சி 3.

நேரம்: மாலை. **இடம்: தெரு.**

உறுப்பினர்: தினகர், சந்தர், ஒற்றன், நகர மாந்தர்.

[இரத்தினபுரிக் கோட்டைக்குள்ளிருந்து இளவரசன் தினகரும், சேனாதிபதியின் மகன் சந்தரும் குதிரைகளில் வந்துகொண்டிருக்கிறார்கள் நகரைப் பார்வையிட்டு ஆற்றங்கரைச் சாலை வழியாக மெதுவாக வந்துகொண்டிருக்கிறார்கள்.]

தினகர்: சந்தர்! இருமருங்கிலும் கரைபுரண்டோடிவரும் நம் உயிரான ஆற்றின் வெள்ளத்தைப் பார்த்தாயா

நம்மைக் களிப்பில் ஆழ்த்துகிறது சுற்றிலும் சூழ்ந்து நிற்கும் சோலையின் தண்மை நம்மைக் குதூகலிக்கச் செய்கிறது.

சந்தர்: ஆம் தினகர்! மிதந்துவருந் தென்றல் உளத்திற்கு இதந் தருகிறது அதோ பார்! வானத்தை எட்டிப் பார்த்து இயற்கையைத் தாழ்த்த நினைக்கும் செயற்கைக் கோபுரங்கள். அதில் சிற்பியின் சிலைகளோ புன்சிரிப்புத் தவழும் பூமுகத்துடன் நம்மை வரவேற்கத் தயாராக இருக்கின்றன. அதோ! குளத்தில் நீர் எடுத்த குடத்தை இடுப்பி லே கொண்டு, ஒயிலாக நடந்து செல்வதைப் பார்! அலையோடு அலைமோதி ஆடிக்கொண்டிருக்கும் பளிங்கு நீரைப் பார்! இயற்கைக் காட்சிகளை எடுத்துக் காட்டுகிறது நம் நாடு நம் நாட்டை மிகக் கவனமாய்க் காக்கவேண்டும்!

தினகர்: ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? நமக்கு எதிரிகள் யாராகிலும் உண்டா? இருந்தாலதான் என்ன?

சந்தர்: இல்லை தினகர் எதிரிகள் இல்லை இருந்தபோதிலும் நாம் விழிப்பாய் இருக்கவேண்டும் அல்லவா! மகேந்திரபுரி மன்னன் நிகும்பன் அயர்ந்தநேரம் பார்த்து நாடுபிடிக்கும் அயோக்கியனும் ஐந்தாறு நாடுகளுக்குமேல் பிடித்து விட்டான் நம்மை ஒரு மீன் என்று நினைத்து, தூண்டில் போட்டு எளி தில் பிடித்து விடலாம் என்று நினைத்தான் போலும்! இது மீன் அல்லப்பா! திமிங்கிலம் என்று நிரூபிக்கவேண்டும் அந்த அரக்கனுக்கு!

தினகர்: அவ்வளவு துணிச்சலா அந்த அற்பனுக்கு! பெற்ற தாயினும் சிறந்த, நாம் பிறந்த பொன் னாட்டை விட்டுக்கொடுக்க நாம் என்ன பேடிகளா கற்ற வாள் வீச்சையும், வைத்த குறியில் பாயும் ஈட்டி வீச்சையும் எடுத்துக் காட்டுவோம் அவ னுக்கு! நாட்டாசை பிடித்த நயவஞ்சகர்கள் இப் படித்தான் நசுங்கிப் போவார்கள் என்பதை அறி

ஆட்டுவோம்! மகேந்திரபுரி மன்னன் மண்ணோடு மண்ணாக மறைந்துவிட்டான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிப்போம்! சூழ்ச்சியால் நாட்டைச் சூறையாடும் துன்மார்க்கர்கள் தூக்கிலே தொங்கினன் என்பதை உலகுக்கு அறிவுறுத்துவோம்! இரத்தினபுரியில் பிறந்த ஆட்டுக்குட்டிக்கும் ஆர்வமும், ஆனவமும் மானமும் உண்டென்பதை உணரவைப்போம்! மகேந்திரபுரியாம்................ நிகும்பனும்!........ பார்ப்போம் அவனையும்........!

[பேசிக்கொண்டே செல்கின்றனர் அப்போது மகேந்திரபுரி மன்னன் நிகும்பனல் அனுப்பப்பட்ட ஒற்றன் குதிரையில் வருகிறான். நாட்டின் வளத்தைப் பார்த்து வியக்கிறான் விண்ணைமுட்டும் மரங்கள்! ஒழுங்கான சாலைகள்! உல்லாசமான ஓடைகள்! உயர்ந்த வீடுகள்! வற்றாத ஆறுகள்! வளமான குன்றுகள்! மக்கள் கூட்டம் நிறைந்த கடைத்தெருவில் வருகிறான் அப்போது வழிப்போக்கர் இருவர் தங்கள் இளவரசனைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

கருப்பன்: வேலா! இளவரசர் தினகரும், சேனாதிபதியின் மகன் சந்தரும் போவதைப் பார்த்தாயா! குதிரையில் போகும் போது கூட அவர்களது வீரமும் தீரமும் எப்படி விளங்குகின்றன.

வேலன்: சந்தேகம் என்னடா அதிலே வாளேந்திப் புறப்பட்டால் வையகமே நடுங்குமடா!

கருப்பன்: அவரை இளவரசராக அடைய நாம் என்ன புண்ணியம் செய்தோமோ?.... நான் வருகிறேன்.

[இதையெல்லாம் ஒற்றன் கேட்டுக்கொண்டு வீதியில் வந்துகொண்டிருக்கிறான் திடீரென்று பறைசாற்றும் ஒலி கேட்கிறது.]

பறை சாற்றுபவன்: இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் இன்று மாலை அரண்மனைக்

கோட்டைக்குள் இளவரசன் தினகருக்கும் சேனதிபதி மகன சந்தருக்கும் வாட் பயிற்சி நடக்கும் எல்லோரும் வந்து பார்க்கலாம் இது அரசாங்கத்தின் உத்திரவு....டம்....டம்....டம்....

காட்சி 4.

நேரம்: மாலே உறுப்பினர்: தினகர், சந்தர் அரசர் அரசி
இடம்: அரண்மனே விளேயாட்டு மைதானம் மக்கள.

[அரசர், அரசி, அமைச்சர், மககள் எல்லோரும் கூடியிருக்கிறார்கள். தினகரும், சந்தரும் ஆளுக்கொரு வாள் எடுத்து, அரசரை வணங்கி, சண்டையை ஆரம்பிச்கின்றனர். வீச்சின் ஒலி காதைத் துளேக்கிறது மாலே. ஒளியில் வாட்களின் சுழற்சியில் மின்னலொத்த வெண்ணிறவொளி கண்களேப் பறிக்கிறது மக்கள் யாவரும் திண்தோள வீரரின் வாள் வீச்சைக் கண்டதில்லே என்று வியக்கின்றனர். பயிற்சி முடிந்ததும் கூட தளர்ச்சியின்றி நின்ற வீரர்கள் இருவரும் அரசனே வணங்குகின்றனர்].

விக்கிரமன்: தினகர்! நீயும் சந்தரும் இணேபிரியாத நண்பர்களாகவே இருங்கள் வருங்கால உலகில் வெற்றி வீரர்களாயுலவுங்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இவைகளேக் கைக்கொள்ளுங்கள் பொறுமை, வஞ்சகம், சூது இவைகளேப் புறக்கணியுங்கள் ஏழைகளின் மீது இரக்கம் கொள்ளுங்கள் எதிரிகளுக்குமட்டும் இடம் கொடுக்காதீர்கள்.

தினகர்: அப்பா! தாங்கள் காட்டிய வழியைவிட்டகலமாட்டோம்.

அரசி: தினகர்! அப்பா சொல்வதைக் கேட்டுக்கொண்டாயா!

தினகர்: கேட்டுக்கொண்டேன் அம்மா! அப்பா! நாங்கள் வருகிறோம்.

மக்கள்: இளவரசன் தினகர்..................வாழ்க

சேனாதிபதி மகன் சந்தர்............வாழ்க
விக்கிரம மகாராஜா.....................வாழ்க
தினகருக்கு............ஜே
சந்தருக்கு............ஜே

[இருவரும் அரண்மனை அந்தப்புரம் வழியாகச் செல்கின்றனர் தன் தாயைப் பார்த்துவிட்டு வரலாமென்ற நோக்கத்துடன்]

தினகர்: சந்தர்! நாம் சண்டைசெய்யும் பொழுது அம்மாவைப் பார்த்தாயா? எவ்வளவு சந்தோஷப் பட்டார்கள் அம்மாவைப் பார்த்துவிட்டு வருவோம்.

சந்தர்: சரி! போவோம்!

[அந்தப்புரத்திற்குப் போகின்றனர்]

[இராணி அந்தப்புரத்தில் தனது பஞ்சணையில் கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கிருள் அப்பொழுது இளவரசன் தினகரும், சந்தரும் உள்ளே வருகின்றனர்]

தினகர்: ஏனம்மா! ஒருமாதிரி இருக்கிறீர்கள்! என்ன கவலை உங்களுக்கு?

அரசி: குழந்தாய்! உன் தந்தைக்கோ வயதாகிவிட்டது இனிமேல் நீதான் நாட்டையாளவேண்டும். எல்லாப் பொறுப்பும் உனக்கேதான்.

தினகர்: இதற்காகவா அம்மா கவலைப்படுகிறீர்கள் நீங்கள் அஞ்சவேண்டாம். நாங்க்ள் இருவரும் இருக்கும் வரையில் எந்த மன்னருக்கும் இரத்தினபுரியில் காலெடுத்து வைக்கத் துணிவு பிறக்காது அம்மா

சந்தர்: நாங்கள் இருவரும் ஒருயிரும் ஈருடலும் போல் வாழ்வோம் தாயே! என் உயிர் உடல், பொருள் எல்லாம் தினகருக்காகவேதான்!

அரசி: உன் நட்பின் மகிமையை மெச்சினேன். நீங்கள் இருவரும் இணைபிரியாமல் வாழுங்கள்.

தினகர்: ஒரு செய்தி தெரியுமா அம்மா உங்களுக்கு! நம்மை எதிர்ப்பதற்கு நிகும்பன் சூழ்ச்சி செய்கிருனும் நாட்டாசை பிடித்த மடையன்! சந்தர்! நேரமாகிவிட்டது போகலாமா?

அரசி: கவனமாக போய்வாருங்களப்பா.

தினகர்: சரி அம்மா அப்படியே ஆகட்டும்.

[இருவரும் செல்கின்றனர்].

காட்சி 5.

இடம்: **அரண்மனே.** உறுப்பினர்: **அரசன், ஒற்றன்,**
நேரம்: **காலே.** **அமைச்சன், காவலாள்.**

[இரத்தினபுரியைப் பற்றிய செய்தியை அறிந்து கொணடு ஒற்றன் மசேந்திரபுரி வந்தடைகிருன் காவலாளியிடம் தன் வரவை மன்னனுக்குத் தெரிவிககச் சொல்கிருன்.... ...]

ஒற்றன்: இரத்தினபுரி சென்ற ஒற்றன் வெற்றியுடன் வந்திருப்பதாய் அரசரிடம் உரை.

காவலன்: உரைக்கிறேன் உம் விருப்பப்படி!

[அரசன் இருக்கைக்குச் செல்கிருன் காவலன்]

காவலன்: வாழிய மாநிலம்! வாழிய வேந்தே!! இரத்தினபுரி சென்ற ஒற்றர் தங்களைக் காண விழைகிருர்.

அரசன்: வந்தாஞ ஒற்றன்! வரச்சொல் உள்ளே!!

[ஒற்றன் வருகல்]

ஒற்றன்: வாழிய மாநில்ம்! வாழிய வேந்தே!! வளர்க நின் நெறி முறை!!!

அரசன்: (ஆவலாய்) வாழ்த்துவது போதும்! வந்ததைச் சொல்!

ஒற்றன்: அரசே! அகிலும் தேக்கும் அழியாக் குன்றும்! நீர்வளமுள்ள சோலைகள்! பார்புகழும் சாலைகள்!! காணவொண்ணு காகதாரம் வயல்கள்! வரப்புகள்! மயில்கள் ஆடும் மாமுகிலேக் கண்டதர்!

குயில்கள் கூவும் குளிர் தென்றல் வந்ததும்! பயிலாத வித்தைதனைப் பயில்கின்றார் காதலர்கள் கனிவுடன் அச்சோலைகளில்! மக்களைப் பற்றி உரைக்கிறேன் மன்னவா! ஒற்றுமை பற்றி வளர்கிறது மக்கள் உளத்தில்! ஆண்டான் இல்லை அடிமை இல்லை உழைப்போர் உயர்ந்தோர்! அவர் வாழ்வு தழைக்கத் தடையேதுமில்லை. கல்வி கற்றோர் கணக்கற்றோர்! செல்வம் பெற்றோர் சேர இருக்கின்றனர்! படை பெரிது! அதனால் பறை சாற்றுகிறது இரத்தினபுரி இறுமாப்போடு எந்த நாடும் எமக்கீடாமோ! தன்னாட்டைப் பேணத் தடையேதுமில்லை!! பொன் பெரிதல்ல! எந்தாய் மண் பெரிது!! மானம் பெரிது!!! என்று பறை சாற்றாமல் சாற்றுகிறது! அரசே! கோட்டையிலே பறக்கிறது சிம்மக் கொடி! கண்ணுற் பார்த்தேன்! களிப்புக்குப் பதில் கடுகடுப்புத் தோன்றியது!

அரசன்: சுற்றி வளைக்காதே! சீக்கிரம் சொல்!! சீரழிப்போம் அவர்களை!!!

ஒற்றன்: சீரழிப்பது என்பது சிக்கலான செயல்! மன்னிக்க மன்னவா! வாட் போர் நடந்தது இளவரசன் தினகருக்கும் சேனாதிபதியின் மகன் சந்தருக்கும்! வாட்போரா அது! மன்னவா! கண்களைப் பறித்தது கத்திகளின் மின்னல்! காதுகளைத் துளைத்தது அவைகளிட்ட ஒலி.

அரசன்: கத்திக்கு மின்னொளி யேறும்படி செய்தால் என் மின்னாது! வெண்கலத்தாற் செய்தால் கத்திகளின் ஒலி காதைப்பிளக்காமல் என்ன செய்யுமாம்!

ஒற்றன்: அரசே! ஒன்று கூறுவேன்! கேளுங்கள்! என் சொல் தங்கள் காதுகளில் ஏறுமா என்பது என் ஐயம்.

அரசன்: ஒற்றரே! ஏன் சுற்றிவளைக்கிறீர்! என் காதென்ன செவிடா! உன் சொற்கள் ஏறாமலிருக்க!

ஒற்றன்: அரசே! அவர்களைத் தொலைக்க ஒரே வழி! குறுக்குவழி!! இதுவரை யாராலும் கைப்பற்றப் படாத வழி!!! நள்ளிரவில் முன்னறிவிப்பின்றித் தாக்குவது!

அரசன்: ஆ! என்ன சொன்னாய்!! நாட்டைப் பிடிக்க நல்ல சொல்! நல்ல வழி!! அறம் தவறுகிறதே! அவர்களைப் பிடிக்க கொள்ளைக்காரன் வேடம் போடுவதா? அவ்வளவு நன்றாக இல்லை!

அமைச்சர்: அரசே! நமக்கு அத்தனை அரசர்களும் அடங்கி வாழ வேண்டுமென்றால் நாமே மன்னர் மன்னன் என்று மக்களாற் பேசப்பட வேண்டுமென்றால் ஒற்றன் சொன்னதுதான் உற்றவழி இல்லையேல் அவர்களிடத்தில் நாட்டை ஒப்பித்துவிட்டு காட்டுக்கு செல்ல வேண்டியதுதான் இராமன்போல்!

ஒற்றன்: அரசே! அவர்கள் சாதாரணச் சிறுவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம!

அரசன்: ஆணையிடுகிறேன் தங்கள் ஆசைபோல்! வெற்றி கிட்டட்டும்! பற்றி எரியச் செய்வோம் இரத்தின புரியை!!

காட்சி 6.

இடம்: இரத்தினபுரி அரண்மனை. உறுப்பினர்: நிகும்பன்
நேரம்: நள்ளிரவு. அவனது படைகள், விக்கிரமன், மந்திரி.

[நிகும்பனது படைகள் இரத்தினபுரியை நோக்கிப் புறப்பட்டு விட்டன. நிகும்பன், மந்திரி, தளபதி மூவரும் குதிரையில் வந்து கொண்டிருக்கிறார்கள். படைகள் இரத்தினபுரிக்குள் நுழைந்து, அரண்மனைக் கோட்டையை அடைகின்றன. கோட்டையில் காவல் காக்காது தூங்கி நின்ற காவலாளிகளைக் கொன்று கோட்டைக்குள் நுழைகின்றன. உள்ளே இரத்தினபுரிப் படைக்கும், நிகும்பன் படைக்கும் சண்டை நடக்கிறது. கோட்டையின்மேல்

கட்டப்பட்டிருக்கும் அபாயமணியை அடிக்கிறான் இரத்தின புரி வீரன். இரத்தினபுரி வீரர்கள் வீட்டிலிருந்து எழும்பிக் கையில் கத்தியுமாக ஓடி வருகிறார்கள். யுத்தம் பலமாக நடைபெறுகிறது. சந்தர் அபாயமணியின் சத்தத்தைக் கேட்டதும் துள்ளிக் குதித்து உருவிய வாளுடன் குதிரைமீதேறி பறந்து வருகிறான். கோட்டைக்குள் புகுந்து கூட்டத்திற்குள் நுழைந்து, ஆட்டுக் கூட்டத்தில் நுழைந்த புலிபோல் சண்டை செய்கிறான். நிகும்பனும் சில வீரர்களும் தினகருடைய படுக்கையறைக்குள் செல்கின்றனர். மந்திரியும், சில வீரர்களும் விக்கிரமனை எழுப்புகின்றனர். விழிக்கிறான் விக்கிரமன்]

விக்கிரமன் யார் நீங்கள்? எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள்

வீரர்களில் ஒருவன்: அதுவா தங்களுக்குத் தங்கக் காப்பு மாட்டித் தனிமையாக வைக்கப்போகிறோம்.

2வதுவீரன் நீங்கள் தனிமையாக நாட்டையாண்டு நாட்கள் அதிகமாகி விட்டதல்லவா? கொஞ்ச நாளைக்கு ஓய் வெடுத்துக் கொள்ள வேண்டாமா?

விக்கிரமன் நீங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே!

மந்திரி: ஆமாம்! நாங்கள் சொல்வது மன்னராகிய தங்களுக்கு எப்படி விளங்கும். நிகும்பனது மாட்டுக் கொடி ஏறிவிட்டது உங்கள் கோட்டையின்மேல் சிம்மக் கொடி சிதைந்து விட்டது! இனி நீங்கள் ஆமைபோல் அடங்கிக்கிடக்க வேண்டியதுதான் சிறையிலே! தாங்கள் மட்டுமல்ல தங்கள் அருமைப் புதல்வன், ஆசைச் செல்வன் இளவரசுச் சிங்கம், எதிர்கால ஏகச் சக்கரவர்த்தியாக இருக்க வேண்டிய தினகரும் தான்.

விக்கிரமன் நடக்காத பேச்சு! நாசகார கூட்டமே! உங்களை நசுக்கி விடுவார்கள் என் வீரர்கள்!

மந்திரி: ஆம்! உங்களுடைய வீரர்கள் இந்நேரம் எமலோகத்தை எட்டிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள்! இழுத்துப் போங்கள் சிறைக்கு!

[தினகரின் படுக்கை அறை. தினகரின் மார்பில் கத்தியை வைத்தபடி எழுப்புகிறான் அரசன் நிகும்பன். தினகர் திடுக்கிட்டுப் பார்க்கிறான்.]

[இவை யெல்லாவற்றையும் தாதி கவனித்துக் கொண்டிருக்கிறாள்.]

நிகும்பன்: ம்....ம்... திமிராதே....திமிரினால் உன் மார்பின் இரத்தத்தை ருசிபார்த்துவிடும் என் வாள்.

தினகர்: யார்... நீங்கள்? எதற்காக இப்படி யெல்லாம்........

நிகும்பன்: உன் பகைவர்களிலே ஒருவன்........

தினகர்: எனக்குப் பகைவர்களா?... யாரும்.... இல்லையே

நிகும்பன்: மகேந்திரபுரி மன்னன் நிகும்பன் நான்.... கர்ஜித்து வந்த மன்னர்களெல்லாம் களத்திலே மடிந்து விட்டனர். சீறிவந்த அரசர்களெல்லாம் சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறார்கள். எதிர்த்து வந்த மன்னர்கள் எல்லாம் எலும்பு தெரிக்க ஓடி விட்டார்கள். உனக்கு வந்த பூனைக்குட்டி நீ இடி முழக்கம் செய்கிறாயாமே? பார்! கோட்டையின் மேலே மாட்டுக்கொடி. எங்கே உன் வீரம்? எங்கே உன் ஆணவம்?.... எங்கே உன் அகங்காரம் எங்கே உன் மமதை? ஹஹ் ஹஹ .. ஹ ...

தினகர்: ஹா! மாட்டுக்கொடி! நள்ளிரவிலே பார்ப்பவர்களுக்குத் தென்படாமல், தீவட்டி பிடித்துக் கொண்டு திடீரென்று பாயும் திருட்டுக் கூட்டமே நாட்டாசை பிடித்த நயவஞ்சக நரியே! நாடு பிடிக்கும் நாதாரிக் கூட்டமே! உன் வீரத்தைக்கண்டு நாட்டு மக்களும் மன்னர்களும் வாழ்த்துவார்கள் என்று எண்ணிக்கொள்ளாதே. ஒரு சிறுவனுக்காகப் பயந்து நடுநிசியில் நாட்டைக் கைப்பற்றிய கொள்ளைக்காரன் என்று நினைத்துக் கொள். நீ உண்மை வீரனாக இருந்தால்... உன் உடம்பிலே வீர இரத்தம் ஓடுமென்றால் உன் நெஞ்சிலே துணிவு இருந்தால்....என் மார்பில்

இருக்கும் வாளை எடு கற்பிக்கிறேன் உனக்குப் பாடம் ...

நிதும்பன்: பிடித்துக்கொண்டுபோய் தள்ளுங்கள் இவனைச் சிறையில....... ஹஹ ...... ஹஹ .. ....
(அட்டகாசச் சிரிப்புடன், மார்பின் மீதிருக்கும் கத்தியை எடுக்கிறான். வீரர்கள் ஓடிவந்து தினகரை சங்கிலியால் பிணைத்துக் கொண்டு இழுத்துச் செல்கின்றனர்.)

தினகர்: அலறும் ஆந்தையே! ஓலமிடும் நரியே!! உறுமும் குரங்கே!!! குரைக்கும் நாயே!!!! உன் கொட்டத்தை அடக்குகிறேன் பார்!

[அந்தப்புரம் இராணி (தினகரின் தாயார்) தெய்வ வழிபாட்டில் இருக்கிறாள் அப்பொழுது தாதி அங்கு வருகிறாள்.]

தாதி: அம்மா! அம்மா!!

இராணி: என்னடி?....என்ன விஷயம்?

தாதி: பெரிய ஆபத்தம்மா! நம்ப மகாராஜாவை சிறையிலே தள்ளிவிட்டாங்க அம்மா! நம்ம தினகரையும் சங்கிலியால் கட்டி இழுத்துக்கிட்டுப் போறாங்க.

இராணி: ஆ! அப்படியா! இதோ போகிறேன் என் கண்மணியைப் பார்க்க.

[இராணி தன் மகனைக் காண சிறைச்சாலையை நோக்கி ஓடிவருகிறாள். அந்தச் சமயத்தில் தினகரை இழுத்துச் செல்கிறார்கள் சில வீரர்கள். நிகும்பன் கையில் சாட்டையுடன் காணப்படுகிறான்.]

நிகும்பன்: கூண்டில் அடைபட்ட கிளியே! என் கத்துகிறாய்!! ....உம் [சாட்டையால் நிகும்பன் அடிக்கிறான்]

தினகர்: (வலி பொறுக்க முடியாமல்) ஐயோ! அம்மா!! ... அம்மா!!! ....

இராணி: வந்துவிட்டேனடா என் கண்ணே! தினகரா!! உனக்கா இந்தக்கதி வரவேண்டும். பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த என் மனம் துடிக்கிறதடா. (நிகும்பனைப் பார்த்து) ஐயா! உனக்குக் கண்கள் இல்லையா? என் மகன் என்னைய்யா குற்றம் செய்தான் இப்படிச் சவுக்கால் அடிக்க? மன்னன் என்று அவதரித்துவிட்டாயே இந்தப் புவியில் நீதி, நேர்மை தெரியாமல்! (தினகரைப் பார்த்து) தினகரா உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கவா ஆண்டவன் எனக்கு இந்த இரு கண்களை அளித்தார். (நிகும்பனின் காலைப் பிடித்துக்கொண்டு) ஐயா! என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். ஒரு குற்றமும் அறியாத என் மகனை விட்டு விடுங்கள் ஐயா! எங்களை நாடு வேண்டுமானாலும் கடத்துங்கள்! என் மகன் தினகரை மட்டும் விட்டு விடுங்கள். [நிகும்பனது காலைப் பிடித்துக் கேட்கிறாள்].

தினகர்: மண்டியிடாதீர்கள் அம்மா! மண்டியிடாதீர்கள்.

நிகும்பன்: உன் மகன் தினகரையா விட்டுவிடுவது ஹஹ்.. ஹஹ்.. தீர்ப்புக்கூற வந்துவிட்டது இந்தக் கழுதை! (காலினால் உதைக்கிறான் கீழே விழுகிறாள்).

தினகர்: ஏனம்மா மண்டியிட்டீர்கள் மண்டியிட்டதன் பலனைப் பார்த்தீர்களாம்மா! இரவிலே பூனைபோற் பதுங்கி கொள்ளை அடிக்கும் நயவஞ்சக நரியம்மா அவன்! அந்தச் சண்டாளனின் காலில் மண்டியிட்டதே பெரிய பாவம் அம்மா! அவ்வளவு மாசு உள்ளது அம்மா அவன் உடலின் ஒவ்வொரு அணுவிலும்! அம்மா கவலைப்படாதீர்கள்! விக்கிரமனின் வாழ்நாளிலே தோல்வி என்றதையே கேட்டிராதவர் என்பதை என் வாழ்நாளிலே உண்மை என்று நிரூபிப்பேன் தாயே!

நிகும்பன்: என்ன தம்பி! புலியிடம் சிக்கிக் கொண்டிருக்கிறதே இந்தப் பூனை என்று எண்ணுகிறாயா?

தினகர்: இல்லை! இல்லை!! புலித்தோலைப் போட்டு மூடிக் கொண்டு தானும் ஒரு புலி என்று முழங்குகிறதே அதைக் கண்டு வருந்துகிறேன் நான்.

நிரும்பன்: அதிகப் பிரசங்கி! இந்தப் புலி கொடுப்பதை வாங்கிக் கொள்! (சாட்டையால் அடிக்கிறான்).

தினகர்: அம்மா! அம்மா!!

இராணி: (மயக்க முற்ற நிலையில்) அப்பா.... தினகரா

தினகர்: அஞ்சவேண்டாம்! தாயே அஞ்சவேண்டாம்!! பெற்ற தாயை எத்தி உதைத்த கயவனுக்குக் கணக்கற்ற உதைகள் கொடுப்பேன்! அன்று தந்தை கூறியபடி ஒழுக்கம், உண்மை, கடமை இவைகளைக் கைக்கொள்வேன்! பொறுமை சூது, வஞ்சகம் இவை ஒவ்வொன்றும் என் உடம்பி லுள்ள ஒவ்வொரு அங்கத்திற்கும் எதிரிகள் தாயே! வெகு விரைவில் மகேந்திரபுரியை பிணக் காடாக்குவேன் இரத்தினபுரியை தென்றல்வீசும் சோலையாக்குவேன் தாயே இது உண்மை தாயே உண்மை! பெற்ற தாயான உங்கள் மீதும் தந்தை மீதும் ஆணையிட்டுச் சொல்கிறேன் தாயே....

[நிகும்பன் தினகர் கன்னத்தில் அறைகிறான்]

நிரும்பன்: பாதாளச் சிறையில் அடையுங்கள் இவனை.

தினகர்: அம்மா! அம்மா!!

[தினகரை இழுத்துச் செல்கிறார்கள் சிறைக் கூடத்திற்கு].

காட்சி 7.

நேரம்: அதே நள்ளிரவு. **உறுப்பினர்: சந்தர், வீரர்கள், நிகும்பன், தினகர்.**
இடம்: கோட்டை வாயில்.

[கோட்டையின் வாசலில் பெரும் படையுடன் யுத்தம் செய்து கொண்டிருக்கிறான் சந்தர். வீரர் கூட்டத்தில் புகுந்து கொன்று குவிக்கிறான். தினகரைப்பற்றி நினைக்கிறான் அங்கிருந்து அரண்மனைக்குள் போகப் பார்க்கிறான் கோட்

டையின் கதவு சாத்தப்பட்டிருக்கிறது. கோட்டையின் வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருக்கிறது. அதை அடிக்கும் கயிறு கீழே தொங்குகிறது. அதைப் பிடித்து மேலே ஏறுகிறான் சந்தர். சில வீரர்கள் அவனைப் பின்தொடர்ந்து மேலே ஏறுகிறார்கள். சந்தர் மேலே ஏறி கயிற்றை வெட்டி விடுகிறான். கயிற்றில் ஏறிவந்த வீரர்கள் கீழே விழுகின்றனர். கோட்டையின் மேலே இருந்த சந்தர் அரண்மனையினுள்ளே குதிக்கிறான். அங்கும் சில வீரர்கள் மறித்துச் சண்டை செய்கிறார்கள். அவர்களையும் கொன்று குவித்து விட்டு இரண்டு கையிலும் இரண்டு கத்திகளை எடுத்துக் கொண்டு அரண்மனை முழுதும் தேடுகின்றான்; ஓடுகின்றான் காணவில்லை. கத்துகின்றான் தினகர், தினகர் என்று சிறைச் சாலையின் பக்கமாக ஓடிவருகிறான்].

[தினகரைப் பிடித்துக்கொண்டு சிறைக்கு வருகிறார்கள் நிரும்பனும் சில வீரர்களும். தினகரைப் பார்த்து விடுகிறான் சந்தர்]

சந்தர்: தினகர்!.... தினகர்!

தினகர்: ஹா....... சந்தர்.........நல்லிசமயம்.... ...

நிரும்பன்: பிடியுங்கள் அந்தச் சுண்டைக்காயையும்

[வீரர்கள் ஓடிவந்து சந்தரை பிடிக்க வருகிறார்கள் இரண்டு கையிலும் இரண்டு கத்திகளை வைத்துக் கொண்டு இங்கும் அங்கும் சாடி வீரர்களைக் கொல்கிறான். அலறியபடி விழுகின்றனர் வீரர்கள். தினகர் பிடியிலிருந்து திமுறுகிறான் தப்பி விடுகிறான் தினகர். உடம்பிலுள்ள சங்கிலியைக் கழற்றித் தூக்கி யெறிகிறான் வீரர்களைத் தூக்கி கையினால் எறிகிறான். குத்துகிறான் உதைக்கிறான் சந்தர் ஒரு வாளை வீசுகிறான் தினகருக்கு உதவியாக தினகர் அந்த வாளைப் பிடித்துக் கொள்கிறான். சண்டை செய்கிறான் தினகர் யாரும் அவனை நெருங்கமுடியவில்லை. கடைசியில் தினகருக்கும் நிரும்பனுக்கும் சண்டை நடைபெறுகிறது. அங்குமிங்கும் தாவுகிறான் பந்துபோல் குதிக்கிறான்

வீரர்கள் எல்லாம் அலறியபடி கீழே விழுகின்றனர். மேலும் மேலும் வீரர்கள் வந்தவண்ணமிருக்கின்றனர் தனியாக சண்டை செய்த சந்தர் தினகருக்கு உதவியாக சண்டை செய்கிறான். இருவரும் அங்கும் இங்கும் தாவி கத்தியால் கதறவைக்கிறார்கள் வீரர்களை. சண்டை செய்யும் போதே ஒருவழியை அடைத்துத் தள்ளிவிட்டார்கள் தினகரும் சந்தரும். வீரர்கள் சுற்றி வருவதற்குள் இருவரும் அரண்மனையை விட்டு வெளியேறுகின்றனர்.]

சந்தர்: தினகர்! நாம் இங்கிருந்து தப்பி வெளியில் போக வேண்டும்! அரண்மனை முழுவதும் அவர்கள் ஆட்கள்! இங்கிருந்தால் ஆபத்தை விலைக்கு வாங்குவது போலாகும்.

தினகர்: அம்மாவும், அப்பாவும் என்ன கதி ஆனார்களோ? அவர்களையும் பார்க்காமலா........

சந்தர்: முதலில் நாம் தப்பித்தால், பிறகு உன் பெற்றோர்களைக் காக்கலாம் வா! பேசிக் கொண்டிருக்க நேரமில்லை.

[கோட்டையின் வாயிலை நோக்கி வருகிறார்கள். பூரண நிலவு தன்பால் வண்ணக்கதிர்களை பாரின் மீது பாய்ச்சி மகிழ்கிறது. நிலவில் வீரர்கள் பலர் மடிந்து கிடப்பது நன்கு தெரிகிறது மடிந்த வீரர்களுக்காக மனம் நொந்து கண்ணீர் விட்டவாறு வருகின்றனர் இருவரும். அங்கே பிணக் கூட்டத்தில் சந்தரின் தந்தை வாளைப் பிடித்தபடி இறந்து கிடப்பதைக் காண்கிறான் சந்தர்.]

சந்தர்: ஆ! அப்பா! அப்பா!! உங்கள் உயிருக்குமா உலை வைத்து விட்டார்கள் இந்த உளுத்தர்கள்! உங்கள் வீரமும், தீரமும் எங்கேயப்பா போய்விட்டது? அல்லது மறைந்து நின்று தாக்கினார்களா மாபாவிகள்? தங்கள் மகன் இவ்வளவு பெரிய தீரனாக இருந்தும் உங்களை ஆபத்தில் கூட காக்க முடி

யாமல் போனேனே! நீங்கள் என்னவெல்லாம் நினைத்திருப்பீர்கள் என்னைப்பற்றி உங்கள் ஆசையை அரை நொடியில் பாழாக்கிவிட்டார்களே இந்த அநியாயக்காரர்கள்! போரிலே சேனாதிபதி வருகிறார் என்றால் அந்தப்போர்களமே புறமுதுகு காட்டி ஓடுமே! அப்பேர்ப்பட்ட உங்களுக்கா இந்த மரணம். இனி இந்த உயிர் எதற்காக இருக்கிறது? பகைவர்களின் இரத்தத்தை ருசி பார்த்த தங்கள் வாள் என் இரத்தத்தையும் ருசி பார்க்கட்டும்.

[தன் தந்தையின் கையிலே உள்ள வாளை எடுத்துத் தன் மார்பில் குத்திக்கொள்ளப் போகிறான் தினகர் சந்தரின் கையைப் பிடித்து........]

தினகர்: நண்பா! உன் தந்தைக்காக உயிரை இழக்க விரும்பினால், முதலில் அந்த வாளை என் மார்பிலே பாய்ச்சிவிட்டு நீயும் மடிந்துகொள். அன்று என் தாயிடம் கூறிய வீர மொழிகளின் அடிப்படையா இந்தக் கோழைத்தனமான காரியம் செய்வது. "ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு" என்ற பழமொழிக்கு உகந்ததுபோல் அல்லவா இருக்கிறது உன் செய்கை. அதோ பார்! நாட்டிற்காக உயிர் துறந்த நற்பண்பாளர்களை! இதோ பார்! இந்தத் தொண்டு கிழவரை! இவருக்குக்கூட நாட்டுப் பற்று இருக்கிறது பார்த்தாயா! இவருடைய எண்ணத்தையாவது நிறைவேற்றுவோம் வா! கணவனை இழந்த மனைவிமார்கள் தந்தைகளை பறிகொடுத்த குழந்தைகள் எத்தனை பேர்!! அவர்களின் கண்ணீரைத் துடைப்போம் வா! கலங்காதே!

சந்தர்: நண்பா! ஏதோ மனதின் பாரம் தாங்கமுடியாமல் பிதற்றிவிட்டேன். என் மனது மாறிவிட்டது நண்பா! முதன் முதலில் இவர்களைக் கவனிப்போம் வா.

காட்சி 8.

நேரம்: மாலை. உறுப்பினர்: நிரும்பன், மந்திரி, தளபதி
இடம்: அரசவை.

[இரத்தினபுரி சிம்மாதனத்தில் நிரும்பன் அமர்ந்துள்ளான் சுற்றிலும் மந்திரிகளும், பிரதானிகளும் மற்றும் ஏனையோரும் அமர்ந்திருக்கின்றனர்.]

மந்திரி: *அரசே! நடனம் நடத்தலாமா?*

நிரும்பன்: *ஓ! தாராளமாய்........*

[நடனம் நடைபெறுகிறது]

பாட்டு.

கண்களுக்கு விருந்து என் ஆட்டம்
காதுகளுக்கு விருந்து என் பாட்டு (கண்களுக்கு)
எள்ளி நகையாடும் எத்தர்களுக்கும் நானே
அள்ளிக் கொடுப்பேனே அவர் உளம் மகிழத்தானே!
பள்ளியறைக்கழைத்துச் செல்லாமலே இப்பாவை
சொல்லிக் கொடுப்பேனே சுகக் கலைகள் (கண்களுக்கு)
பித்தம் பிடித்தோரெல்லாம் பிதற்றினுலும் எந்தன்
முத்தத்தால் மயங்கி விழச் செய்வேனே!
பத்தாம் பசலி என்று பேசப்படுவோரை யெல்லாம்
இத்தலத்தின் அரசனுக ஆக்கி மகிழ்வேனே!
(கண்களுக்கு)

[நடனம் முடிகிறது]

மந்திரி: *அரசே! நடனம் எப்படி! நன்கு இருந்ததா?*

நிரும்பன்: *ஐயோ! நடனமா இது!! இதுமாதிரி நடனத்தை நான் இதுவரை பார்த்ததேயில்லையே! அவ்வளவு பிரமாதம்!*

மந்திரி: *அவையோரே! படைத் தலைவரே!! மற்று முள்ளோரே!!! நினைத்தபடி வெற்றி நமதாகிவிட்டது நம் வாழ்க்கையிலே இன்று ஓர் திருநாள்! இதுவே நம் பொன்னுள் அதை அனுபவிக்கத்தான் நாம் கூடியிருக்கிறோம். இன்னென்று, பூரணவெற்றி*

நாம் அடைந்துவிட்டதாக நினைக்கிறோம். இல்லை இன்னுமில்லை தினகரையும் சந்தரையும் எந்தவழியிலும் பிடிக்கவேண்டும் அதுதான் நம் முழு வெற்றியின் முக்கியமான கட்டம்!

தளபதி: நிகும்ப மன்னர்……… வாழ்க!

நிகும்ப மன்னர்……… வாழ்க!

காட்சி 9.

நேரம்: மாலை. **உறுப்பினர்: தினகர், சந்தர், சிற்பி.**

இடம்: சாலை.

[தந்தையின் மரணத்தை நினைத்து சந்தர் தாங்கவொண்ணுத் துக்கத்துடன் தினகருடன் பிறந்த நாட்டை விட்டுப் புறப்படுகிறுன். எங்கே போகிறோம் என்று தெரியாமல் இருவரும் நடந்து செல்கின்றனர். கடைசியில் ஓர் ஊரை அடைகின்றனர்].

தினகர்: பகைவர்களின் கண்ணில் படாமல் நாம் இருவரும் தப்பித்துவிட்டோம்! இனிமேல் நாட்டை எப்படி அடைய முடியும் சந்தா!

சந்தர்: தினகர்! இனிமேல் தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். நீ ஒரு இளவரசன் என்று யாருக்கும் தெரியக்கூடாது. அடுத்த நாட்டு அரசனிடம் போய் நீ போர்வீரர் தலைவனென்றும் நான் ஒரு போர் வீரனென்றும் வேலைகேட்போம்! மற்றவைகளைப் பின்பு கவனிப்போம்.

[அவ்வழியே சென்ற ஒரு வழிப்போக்கனிடம்]

சந்தர்: ஐயா! அதோ தெரிகிறதே அந்த ஊரின் பெயர் என்ன?

வழிப்: அதுவா? அதுதான் மச்சநாடு! மாமல்லன் என்ற அரசர் ஆண்டு வருகிறுர்.

சந்தர்: அவர் எப்படிப்பட்டவர்?

வழிப்: அவர் மிகவும் நல்லவர் அடுத்தவரை ஆதரிக்கும் குணமுடையவர் ஏழைகள் மீது இரக்கம் உள்ளவர்.

சந்தர்: நாங்கள் இரத்தினபுரி! வேலைக்காக இங்கு வந்தோம்!

தினகர்: நண்பா! வா போவோம் (வழிப்போக்கரைப் பார்த்து) ஐயா! நாங்கள் வருகிறோம்!

வழிப்: சரிங்க.

சந்தர்: தினகர்! மாலை மங்கி இருள் சூழ்ந்துவிட்டது இரவு இங்கு தங்கிவிட்டுக் காலையில் அரண்மனை சென்று வேலை கேட்போம் [ஒரு வீடு தெரிகிறது]

தினகர்: இதோ! இந்த வீட்டுத் திண்ணையில் படுத்துக் கொள்ளலாம். [இருவரும் திண்ணையில் உட்கார்தல்]

தினகர்: பசியோ தாங்கமுடியவில்லை நண்பா! தண்ணீராவது குடிக்கவேண்டும்! கண்கள் இருளடைகிறது

சந்தர்: இந்த வீட்டில் நீர் கேட்போம் (கதவைத் தட்டி) ஐயா......... ... ஐயா......... ..

[வீட்டினுள்ளிருந்து ஒரு பெரியவர் வருகிறார்]

பெரி: யாரது? என்னப்பா.... நீங்க எந்த ஊர் எங்கே வந்தீங்க?

சந்தர்: ஐயா தாகமாயிருக்கிறது கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் பிறகு பேசலாம்!

[பெரியவர் தண்ணீர் கொடுக்கக் குடிக்கின்றனர்]

சந்தர்: இரத்தினபுரி எங்கள் நாடு! ஏதாவது வேலை செய்யலாம் என்ற நோக்கத்தோடு இங்கு வந்துள்ளோம். காலையில் தான் அரண்மனைக்குப் போய் வேலை கேட்கவேண்டும்.

பெரி: தம்பிகளே! நானும் அரண்மனையில்தான் வேலை செய்து வருகிறேன். நான் ஒரு சிற்பி! அரண்மனையில் சிற்பம், சித்திரம் செய்வதே என்வேலை அரசர் மாமல்லர் என் மேல் அளவுகடந்த அன்பு

வைத்திருக்கிறார். கொஞ்ச நாளைக்கு இங்கேயே தங்கியிருங்கள் உங்களுக்கு அரண்மனையில் வேலை வாங்கித்தருகின்றேன்.

தினகர்: தாங்கள் மட்டும் இங்கு தனியாகவா இருக்கிறீர்கள்?

பெரி: நான் ஒருவன்தான் இருக்கிறேன் நீங்களும் என் பேரன் மாதிரி இருக்கிறீர்கள் எனக்கு உறவினர் யாருமில்லை. நாம் எல்லோருமாக இங்கேயே இருக்கலாம் வாருங்கள் உள்ளே!

[இருவரும் உள்ளே போகின்றனர். உள்ளே சிலைகள், சித்திரங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. இருவரும் ஆவலாய்ப் பார்க்கின்றனர்

பெரி: அதோ, பார்த்தீர்களா அந்தச் சிலையை! இளவரசி பத்மாவுக்குக் கலை விழாவில் வைப்பதற்கு! இதோ பார்! இந்தச் சித்திரத்தை! இளவரசி பத்மாவுக்கு பக்கத்தில் இருப்பவர் அரசர் மாமல்லர்.

தினகர்: தாத்தா! இந்தச் சிலைக்குயிர்தான் இல்லை! பிரம்மாவினால் கூடப் படைக்க முடியாத அழகை நீங்கள் உண்டாக்கி யிருக்கிறீர்கள்!

சந்தர்: பிரம்மாவெல்லாம் தாத்தாகிட்டே பிச்சைவாங்கனும் அப்பா!

தினகர்: தாத்தா! ... தாத்தா!! எங்களுக்கும் இந்தக் கலையை கற்றுக்கொடுங்கள் தாத்தா!

பெரி: அப்படியே கற்றுத்தருகிறேன். இளமையில் வராதது எதுவும் இல்லை. வாருங்கள்! உணவு அருந்தச் செல்லலாம்!!

காட்சி 10.

நேரம்: மாலை. உறுப்பினர்: விக்கிரமன், நிகும்பன்
இடம்: சிறைச்சாலை. சிறைக்காவலர்.

[இரத்தினபுரியில் அரசன் விக்கிரமனை சங்கிலியாற் கட்டிச் சவுக்கால் அடிக்கின்றனர். நிகும்பன் இடுப்பிலே இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு சிறிக்கிருன்].

நிகும்பன்: ஹஹ்........ஹஹ்........ ஹா........ நன்ருக அடியுங்கள் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வரும் வரை அடியுங்கள்! [அடிக்கிருர்கள் விக்கிரமனே]

விக்கிரமன்: ஆ! (வலி பொறுக்காமல்) ஐயோ....அடியுங்கள் ....கொல்லுங்கள்........தயவு தாட்சண்யம், ஈவு இரக்கமற்ற பேய்க்கூட்டமே! நான் சாகும்வரை அடியுங்கள்! வீரமாகவே வாழ்ந்தேன்!! வீரமாகவே மடிவேன்!!! (அடி விழுகிறது) ஐயோ!....ஆ!

நிகும்பன்: நிறுத்துங்கள்! விக்கிரமா! இப்போதாவது சொல் தினகர் எங்கே? அவன் எங்கே போயிருக்கிருன்? இருக்குமிடத்தைச் சொல்!

விக்கிரமன்: பெற்ற பிள்ளையைக் காட்டிக் கொடுக்கும் பேயனல்ல நான்! நீ அவனேத் தேடவேண்டாம்! அவனுகவே வருவான் உன்னேத்தேடி....உன் அக்கிரமச் செயல்களே அழிக்க.... உன் ஆணவத்தை அடக்க........ உன் ஆசையை அரை நொடியில் பாழாக்க........ உன் திட்டத்தை சிதறடிக்க........ இரத்தினபுரியில் நீ வாழ்ந்து விடலாம் என்று மனப்பால் குடிக்காதே!

[நிகும்பன் கோபத்தால் விக்கிரமன் கன்னத்தில் அடிக்கிருன்]

நிகும்பன்: வீரர்களே! இந்த நண்டுப் பிடியிலிருந்து தப்பிய அந்த நத்தைப் பயலேப் பிடியுங்கள். அரண்மனே, கோட்டை, கொத்தளம், சத்திரம், சாவடி எல்லா இடங்களிலும். தேடிப்பிடியுங்கள்! அவனேக் கண்ட இடத்தில் கை, கால்களே வெட்டி எறியுங்கள்! (விக்கிரமனேச் சுட்டி) இவன் உடம்பிலே இரத்தம் வீரிட்டு ஓடும் வரை அடியுங்கள்!

விக்கிரமன்: நிகும்பா! நிலே தடுமாறிப் பேசாதே! என் அங்கங்களே அணு அணுவாகச் சிதைத்தாலும், அதில் விழும் ஒவ்வொரு மாமிசத் துண்டுகூட தினகரைப் பற்றிக் கூருது என்று திண்ணமாக வைத்துக் கொள்!

நிரும்பன்: இவனை நன்றாக அடித்துச் சிறையிலே அடைத்து வையுங்கள்! நான் வருகிறேன்.

காட்சி 11.

நேரம்: காலை. உறுப்பினர்: சிற்பி, தினகர், சந்தர்.
இடம்: சிற்பியின் வீடு.

[தினகர் மிகவும் பக்தியோடு ஒரு நடராஜர் சிலையைச் செதுக்கினான். அதற்குத் தினந்தோறும் பூசை செய்து வருகிறான். ஒரு பக்திப்பாடலைப் பாடிக்கொண்டிருக்கிறான்]

பாட்டு.

என்னைக் கண்டும் உன்மனம் இறங்காதா
மண்ணை இழந்து மனம் வாடுகின்ற (என்னைக்)
நாட்டாசை பிடித்த நயவஞ்சகனால்
வீட்டையிழந்து விம்முகின்றேனே
இழந்த நாட்டை நான் திரும்பப் பெறுவேனோ
குழந்தை எனை நீ பாராயோ! அழுகின்ற (என்னைக்)
தாயைக் காணாச் சேயாகினேனே
தந்தையன்பைக் காணாப் பாவயானேனே
நாயை ஒத்த பேயனாலே நாடுமிழந்தேனே
எந்தன் குரலைக் கேளாயோ! (என்னைக்)

[பாட்டு முடிந்ததும் சிற்பியும், சந்தரும் வருகின்றனர்]

சிற்பி: பார்த்தாயா சந்தர் தினகரை! எவ்வளவு பக்தியாற் பாடுகிறான்! தன்கையால் சிலை செதுக்கித் தானே மலர் சூட்டி வணங்குகிறான்.

சந்தர்: பெரிய பக்தர்களெல்லாம் இவன் பேரர்கள் போலிருக்கு!

[அப்போது தினகர் கையில் பழம், தேங்காய் இவைகளை எடுத்து வருகிறான்.]

தினகர்: இந்தாருங்கள் தாத்தா! பிரசாதம் பெற்றுக் கொள்ளுங்கள்! சந்தர்! சாமியைக் கும்பிடு! அவரால் தான் நாம் ஒரு குறைவுமில்லாமல் இருக்கிறோம்!

சந்தர்: நமது உள்ளக் குறையை நிறைவேற்றுவாராப்பா நமது தெய்வம்!

தினகர்: அதையுந்தான் பார்ப்போமே! பாடிப்பாடி, அவன் புகழ் பேசிப்பேசி வாடும் எனக்கு அவனுள்ளம் அவசியம் இரங்குமப்பா! இழந்த நாட்டைப் பெறுவோம்! வருந்தவேண்டாம்.

சிற்பி: நேரமாகிவிட்டது! வாருங்கள்! சாப்பிடப் போகலாம்.

காட்சி 12.

நேரம்: **மாலே.** உறுப்பினர்: **பத்மா, சாரதா.**

இடம்: **பூங்கா.**

[மாமல்லன் குமாரி பத்மா பூங்காவில் ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருக்கிருள்.]

பாட்டு.

மயிலும் மனமகிழ்வோடு ஆடுதே
குயிலும் குதூகலத்தோடு பாடுதே
பயிலும் எந்தன் உளம்தான் வாடுதே (மயிலும்)
முகிலேக் கண்டதால் தோகை விரித்ததே - மயில்
முகிலேக் கண்டதால் தோகை விரித்ததே
தென்றல் வந்ததால் தெம்மாங்குபாடியதே - குயில்
தென்றல் வந்ததால் தெம்மாக்குபாடியதே
இளமைக் கால எழிலால் ஏங்குதே - என்மனம்
இளமைக் கால எழிலால் ஏங்குதே (மயிலும்)
தலேவி எனக்குத் தலேவன் ஒருவன்
குலவிப் பேச வாராரோ! - மனம்
நவியுமெனக்கு மகிழும் விதத்தில் இன்பம்
பொழிய அவர்தான் வாராரோ (மயிலும்)

[இச்சமயத்தில் சாரதா ஆண் உடையை அணிந்து கொண்டு குரலே மாற்றி ஆண்போல் பாடுகிருள்]

சாரதா: வந்தேனே எந்தன் கண்ணே - நான்
சொந்தம் கொண்டாடிப் பெண்மானே
(வந்தேனே)

பத்மா: ஆ! யாரது!

சாரதா: (குரலை மாற்றிக்கொண்டு) ஏன் நிறுத்திவிட்டாய் பாடலை! ஏந்திழையே! பாடு கண்ணே! உன் பாட்டைக் கேட்கத்தானே பல நாட்கள் காத்துக் கிடந்தேன் பாடு! என் சிந்தை குளிரப் பாடு! என் இதயம் குளிர ரசிக்கிறேன்! .. உம் பாடு கண்ணே

பத்மா: (கோபத்தால்) கண்ணாவது மண்ணாவது என்னய்யா உளறல்!

[செடியின் மறைவிலிருந்து சாரதா ஆண் உடையில் வெளியில் வந்து]

சாரதா: என்னைத் தெரியவில்லையா? என் அன்பே! ஆருயிரே!! பல நாட்களாக உன் காதலுக்கு ஏங்கிக் கொண்டிருந்தேன் பொற் கொடியே! கெங்க நாட்டு இளவரசன் நான் என் பெயர் பற்குணன்

பத்மா: தாங்கள் என்னை எப்பொழுது எங்கே பார்த்திருக்கிறீர்கள்?

சாரதா: கனவிலே வந்தாய் நீ! கட்டியணைத்து முத்தமிட்டேன் நான்! என்னைப் பிரிந்தாய்! தேடினேன்! பலனில்லை உன் நினைவால் வாடினேன் வாட்டத்தைப் போக்க உன்பேல் நாட்டங்கொண்டு இத்தோட்டத்திற்கு வந்து உன் பாட்டைக்கேட்டு பரவசமடைந்தேன் குயிலினும் இனிய உன்குரல் என் சிந்தையை இன்ப வெள்ளத்தால் குளிப்பாட்டியது இன்பமாக ரசித்துக்கொண்டே மெய் மறந்து நின்றேன் இடையிலே நானும் பாடினேன் நீ பாட்டை ஏன் நிறுத்திவிட்டாய் பாடு!

[பத்மா சாரதாவை அடையாளம் தெரிந்து கொள்கிறாள்]

பத்மா: கனவிலே கண்டதும் நிஜமென நினைத்து என்னைக் காதலிக்க வந்த கண்ணாளா! தாங்கள் காதலுக்குதான் தகுதியற்றவளாயிற்றே! ஓ (கேலியாக) ஓ....

காதலுக்குத் தகுதி, யெல்லாம் இல்லையோ! மறந்துவிட்டேனே படித்த பாடத்தை! உள்ள மிரண்டு ஒன்றுபட்டால் அதுவே கள்ளமில்லாக் காதல்! அல்லவா? ஆனல் இப்பொழுது உடையால் மாறிவிட்டீரே தவிர உள்ளம் மாறவில்லையே தோழியர் சாரதவே!

[என்று பேசிக்கொண்டே அவள் தலைப்பாகையை எடுத்துவிடுகிருள் இருவரும் சிரிக்கின்றனர்]

பத்மா: என்னடி இதென்னடி வேடம்?

சாரதா: என் இளமைக்கால எழில் வீணுகிறது என்று ஏங்கிப் பாடினுயே, அதற்காக கண்ட என்னைக் கொண்டவனுக்க முயல்வாயா என்று பார்க்க இவ்வேடம் போட்டேன்

பத்மா: எப்படி என் நடிப்பு?

சாரதா: உன் இளமையின் துடிப்பல்லவா நடிக்கச் செய்கிறது! ஏன் என்னிடம் சொல்லாமல் இங்கு வந்தாய்?

பத்மா: உன் வரவுக்காக நின்றேன் வரவில்லை நீ! என் வழியை வந்தேன்! நேரமாகிவிட்டது போகலாம்! [அரசர் மாமல்லர் வருகிருர்]

சாரதா: அதோ அரசர் வருகிருர்கள் நான் வருகிறேன்! எனக்கு வெட்கமாக இருக்கிறது இந்த ஆண் உடையில் நிற்க
[போகிருள் அரசர் வருகிருர்]

பத்மா: அப்பா! அப்பா!!

அரசர்: என்னம்மா பத்மா! இங்கு என்ன செய்துகொண்டிருந்தாய்?

பத்மா: என் தோழியிடம் பேசிக்கொண்டிருந்தேன் அவள் ஆண் உடையில் நின்ருல் உங்களைப் பார்க்க வெட்கமாக இருக்கிறதென்று ஒடிவிட்டாளப்பா!

அரசர்: சாரதவா அவள்! நான் வேறு சந்தேகப்பட்டு விட்டேன்! எங்கே கணவனை என்னைக் கேட்காமலே தேடிக்கொண்டு விட்டாயோ என்று பயந்து விட்டேன்!

பத்மா: போங்கப்பா!

அரசர்: (பத்மாவினருகில் நெருங்கி, அவள்தலையைக் கோதியபடி) பத்மா! உன்னைக்கண்டால் தான் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது! எப்பொழுதும் உன் நினைவாகவேதான் இருக்கிறேன் நீயோ! தாயில்லாப்பெண் தாயைக்காணாதவள் உனக்குக் கூட ஒரு அத்தை இருக்கிறாள் இரத்தினபுரி இராணியாக! அவளுக்குக்கூட ஒருபையன்உண்டு அவனைச் சிறுவயதில் பார்த்தேன்! இப்போது உன்னைவிட உயரமாக இருப்பான் (**மணம்சோம்பி**) சிறுதகராறு அதற்காகத் தீராப்பகை மூண்டு விட்டது! இரத்தினபுரியைப் பற்றிப் பேசுவதே எனக்குப்பிடிக்காது! எனது ஒற்றர்களையும் அங்கு செல்லக்கூடாதுஎன்று கட்டளை இட்டுவிட்டேன்! அவர்களைப்பற்றிய செய்தியும் ஒற்றர்கள் என்னிடம் சொல்லப் பயப்படுவார்கள்! நானும் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை ஆனால்....... இன்று....... உன் நிலைமை ...... அவனுக்கு ஏற்றவள் நீ என்று என்மனம் எண்ணுகிறது........ பார்ப்போம்........ காலம் நம்மை என்னதான் செய்கிறதென்று சரி. சரி. பத்மா! போம்மா தோழியரிடம்! நான் என்னென்னமோ சொல்லி விட்டேன் உன்னிடம்!

பத்மா: அத்தானைப் பார்க்க முடியாதா அப்பா?

அரசர்: (கோபமாக) அத்தானா! அவன் அன்றே செத்து விட்டானே! முதலிலேயே சொன்னேனல்லவா நான் ஏதேதோ பேசிவிட்டேன் என்று பேசாமல் போ! பந்தத்தை நறுக்கிவிட்டேன். பகையை இனி இறுக்குவேன் அன்றைய நினைவை என்றுமே மாற்றுவதில்லை.

பத்மா: அப்படியென்றால், தாங்கள் ஏன் எனக்கு அவரை நினைவூட்டினீர்கள்? ஆசைவித்தை போட்டுவிட்டு நீர் பாய்ச்ச மறுக்கிறீர்களே திடீரென்று .... அப்பா

அரசர்: போம்மா! என்மனநிலை சரியில்லை ஏதேதோபேசி உன்னிடம் எக்கசக்கமாக மாட்டிக்கொண்டேன் போ [பத்மா போகிறாள். அரசன் எதையோ நினைத்தபடி நடக்கிறான் பழையகால நினைவுகள் ப்டுகின்றன அவன் உள்ளத்தில்]

மனம்: மாமல்லா! பெண்ணுக்காகப் பெருமிதத்தை விட்டுக் கொடுப்பதா?

அரசர்: கண்போல் வளர்த்த பெண்ணின் ஆவலைத்தூண்டி அதில் மண் போடுவதா?

மனம்: பெண்ணுக்காகத் தன் மதிப்பை இழக்காதே! மதித்தாரா உன் மைத்துனன்? உன்சகோதரிதான் தடுத்தாளா? பாசமாம் பாசம்!! பாசமுடையோர் ஏன் அவ்வளவு மோசமாக நடந்துகொண்டனர்? பிறந்தநாள் விழாவுக்குச் சென்றாயே! உன்னைச் சிறந்தமுறையில் வரவேற்க மறந்து விட்டனரா? இல்லை மமதை கண்ணை மறைத்ததா?

அரசன்: மமதையாவது மண்ணாங்கட்டியாவது? என்ன இருந்தாலும் பாசமும் நேசமும் விடுமா? மலை ஏறிச் சென்றாலும் மைத்துனர் துணை வேண்டு மல்லவா? பத்மாவிற்கேற்ற பதி அவனா? பாலனாக இருக்கும் போது பார்த்ததல்லவா? இப்போது பண்புடையாளனாக இருப்பானா? இல்லை, தந்தை போன்று தருக்குடையோனாயிருப்பானா?

மனம்: இருப்பான் இருப்பான் உன் குடிக்கே நெருப்பை வைப்பான்.

அரசன்: விருப்போடு பத்மாவை ஏற்றால்' அரசுப்பொறுப் பையெல்லாம் அவனிடமே ஒப்படைத்து விடு வேன் கண்மணி பத்மாவின் கதி என்ன ஆனாலும்

சரி அவள் அத்தானையே மணக்கட்டும் இதை மாற்ற வேண்டாம்.

காட்சி 13.

நேரம்: பகல். உறுப்பினர்: சிற்பி, சுந்தர், தினகர்,
இடம்: சிற்பியின் வீடு.

[மூவரும் சிலைசெதுக்கிக் கொண்டிருக்கின்றனர் தினகர், சுந்தர், இருவரும் சிற்பவேலைகளில் சிறந்தவராகி விட்டனர்]

தினகர்: தாத்தா! தாங்கள் இனி ஏன் வேலைசெய்யவேண்டும்? இனி நாங்கள் இருக்கும்வரை தங்களுக்கு ஏன் கவலை?

சுந்தர்: தினகர்! ஏது........? கலையென்றால் உலகத்தை மறந்து விடுவாயோ?

சிற்பி: ஆமாப்! நீங்கள் இருவரும் கலை உலகில் அழியாப் புகழைத் தேடிக் கொள்வீர்கள் கலையின் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்டீர்கள். சிற்பத்திற்கு நீங்கள் தான் ஜீவநாடிகள் நான் இனிமேல் உங்களிடம் தான் கற்றுக்கொள்ள வேண்டும் எனக்குக் கொஞ்சம் கற்றுக் கொடுப்பீர்களா குழந்தைகளே!

தினகர்: தாத்தா! தாங்கள் எங்களை இவ்வளவு போற்றிப் புகழ்கிறீர்களே! எல்லாம் தங்கள் உதவியால் தானே!

சுந்தர்: என்ன தாத்தா? ரொம்பநாளா ஏமாத்துறீங்களே!

சிற்பி: எதற்கு?

சுந்தர்: அரண்மனைக்கு அழைத்துப் போறேன்னுதான் ஏமாத்துறீங்களே!

சிற்பி: மறந்தே போய்விட்டேன்! நாளைக்கே உங்களை அரசரிடம் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்தி வைக்கிறேன்!

தினகர்:
சந்தர்: } (இருவரும் ஒன்ருய்) ரொம்ப சரி தாத்தா.

காட்சி 14.

நேரம்: **இரவு.** உறுப்பினர்: **அரசர் மாமல்லர், அமைச்சர்.**
இடம்: **ஆலோசனை மண்டபம்**

அரசன்: அமைச்சரே! இன்னும் மூன்று மாதத்தில் நம் இளவரசி பத்மாவுக்குப் பதினெட்டாவது பிறந்த தின விழா நடைபெறவேண்டும். இது உங்களுக்குத் தெரியுமா?

அமைச்சர்: ஆம்.... ஆம்.... நிச்சயம் நடைபெறவேண்டும்.

அரசன்: விழா முடிந்ததும் இளவரசி பத்மாவுக்குத் திருமணத்தையும் நடத்திவிடவேண்டும். இது வரை யாரும் பார்த்தும், கேட்டுமிராத அளவில் வெகு விமரிசையாக நடத்தவேண்டும். முதலில் எல்லா நாட்டரசர்களுக்கும் ஓலை எழுதி அனுப்பும்....இன்....றென்று .. (விம்முதல்)

அமைச்சர்: என்ன அரசே! மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய நேரத்தில்....... வருத்தப்படுகிறீர்களே!

அரசன்: மகிழ்வோடிருக்க வேண்டிய நேரம்தான் இது! ஆனல் இதை அனுபவிக்க உடன்பிறந்த சகோதரி இங்கு வரமாட்டாளே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. எதற்கும் இரத்தினபுரிக்கும் ஓலை அனுப்பும்! பாசம் துண்டிக்கப்பட்டதை இணைக்க விழைகிறேன் என்று எழுதும்! தூதுவனிடம் கொடுத்துப் பதில் வாங்கிவரச்சொல்லும்! வரும் போது என் மருமகனையும் அழைத்து வரச் சொல்லும்! எவ்வளவு நேசமாயிருந்தோம்! சிறு தகராறு! சீரழிந்துவிட்டது எங்கள் சிநேகம்! எல்லாம் அவன் செயல்!

அமைச்சர்: என்ன அரசே! எல்லாம் அவன்செயல் என்று கூறுகிறீர்கள், அவன் என்று ஒருவன் இருந்தால் நம்முடைய இந்த நிலையைப் பார்த்துக்

கொண்டிருப்பானு? நடக்கவேண்டியது நடந்து தானே தீரும்.

மாமல்லர்: (அரசர்) அப்படியொன்றுமில்லே! நாம் போன பிறப்பில் செய்த பாவத்தின் பலன்தான் இது.
(மன்னர் சொல்வதைக் கேட்ட மந்திரி தலையில் தானே தட்டிக்கொள்ளல்)

அரசர்: எல்லாம் விமரிசையாக நடக்கட்டும்! இரத்தின புரிக்கு முக்கியமாக ஓலே அனுப்பும்!

அமைச்சர்: ஒரு வேண்டுகோள் அரசே!

அரசர்: என்னது!

அமைச்சர்: இளவரசி அவர்களின் பிறந்ததின விழாவிற்கு அத்தனே அரசர்களும் இளவரசியைப் பார்க்க வேண்டும் அதனுல் இளவரசியைப்போல் ஒருசிலே செய்து, சிங்கார மண்டபத்தில் வைத்து, அங்கு நாட்டியம், நாடகம், கச்சேரிகள், வேடிக்கைகள் நடத்தலாமே!

அரசர்: அமைச்சரே! அதுவும் நல்லயோசனேதான்! பத்மாவைப் போல் சிலே செய்ய நல்லதொரு சிற்பி வேண்டுமே! எந்த ஊரில் இருக்கிறுன் நல்லசிற்பி?

அமைச்சர்: கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலேவானேன்? அரசாங்கச் சிற்பி, சிற்பம் செதுக்குவதிலும், சித்திரம் வரைவதிலும் பெயர் பெற்றவராயிற்றே! அவரையே செய்யச் சொல்லலாம். நம் நாட்டில் இத்தகையதொரு பெரிய சிற்பி இருக்கிறுன் என்றுல் அந்தப் பெயர் நமக்குத்தானே!

அரசர்: நாளேக் காலே அவனே அரண்மனேக்கு வரச்சொல் லும்! அங்கே பேசிக்கொள்ளலாம்.

அமைச்சர்: ஆகட்டும் அரசே! (வாசல் பக்கம் பார்த்து) ஏய்! யாரங்கே! (சேவகன் வருதல்) நாளேக் காலே அரண்மனேக்குச் சிற்பியை வரச்சொன்னதாகச் சொல்.

[திருப்புக் காட்சி]

சேவகன்: ஐயா! ஐயா! (சிற்பியின் வீட்டுக் கதவைத் தட்டு கிருன்.)

சிற்பி: (உள்ளேயிருந்து வந்துகொண்டே) யாரப்பா அது? என்னவேண்டும்?

சேவகன்: நாளைக் காலை அரண்மனைக்கு வரச்சொல்லித் தங்களுக்கு கட்டளையிடுகிருர் மன்னர்.

[சேவகன் போதல்]

தினகர்: குற்றமென்ன செய்தோம்? ஏன் சபைக்குப் போகவேண்டும்?

சிற்பி: ஒன்றுமிருக்காது தம்பி! அரண்மனையில் ஏதாவது வேலை இருக்கும். ஆணையிட்டிருக்கிருர்.

சந்தர்: அப்படி என்ருல் நாளை நாங்களும் வரலாமா தாத்தா?

சிற்பி: ஓ! தாராளமாக வரலாம். சரி நேரமாகிவிட்டது, உங்கள் வேலையைக் கவனியுங்கள்.

காட்சி 15.

இடம்: **அரசவை.** உறுப்பினர்: **அரசர், அமைச்சர், சிற்பி, சந்தர், தினகர்.**
நேரம்: **காலை.**

[அரசன் மாமல்லன், அமைச்சர் புடைசூழ அரியாசனத்தில் அமர்ந்திருக்கிருன். சிற்பி, தினகர், சந்தர் மூவரும் வருகின்றனர்.]

சிற்பி: அரசே! வணக்கம்! தாங்கள்....... என்னை........ அழைத்த........தன்........

அரசன்: சிற்பியே! இன்னும் மூன்று மாதத்தில் இளவரசி பத்மாவின் பதினெட்டாவது பிறந்தநின விழா நடைபெறவிருக்கிறது. அதில் இளவரசியைப் போன்றதொரு சிலையைச் செய்யவேண்டும். சிலையைப் பார்த்தோர் மலைக்கவேண்டும், இது சிலைதாஞ என்று. பத்மாவே உயிருடன் நிற்பது போல் இருக்கவேண்டும். வந்த அரசர் அனை

வரும் சிலையைக் கொண்டே அடையாளம் தெரிந்துகொள்ளவேண்டும் இளவரசியை!

சிற்பி: அரசே! சிற்பத்தில் சிறப்புற்று விளங்குபவன் இவன் சித்திரம் வரைவதில் இணையற்றவன் இவன் நான் கற்ற கலையை இவர்களுக்கு முற்றும் கற்பித்துவிட்டேன்! எல்லாவற்றிலும் என்னை மிஞ்சி விட்டார்கள் எனக்கும் வயதாகிவிட்டது பார்வையும் பாதியாகிவிட்டது; இன்று முதல் இவர்களை அரசாங்கச் சிற்பியாகவும், சித்திரக்காரனாகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். இது என் தாழ்மையான வேண்டுகோள்.

அரசன்: எமக்கு வேண்டியது இளவரசி பத்மாவின் உருவமுடைய சிலை. சித்திரமல்ல. ஆகவே சிலைசெய்ய இவனுக்குக் கட்டளையிடுகிறேன். தேவையான வசதியை தேவையுள்ளபோது கேட்டுப் பெற்றுக் கொள்க அமைச்சரிடம்!

தினகர்: அரசே! இளவரசி அவர்களை ஒருமுறை நேரில் பார்த்தால் ஒழியச் சிலைசெய்யமுடியாது.

தளபதி: இளவரசியைப் பார்க்காமல் சிலைசெய்ய முடியாதோ?

தினகர்: பார்க்காத ஒன்றை பார்த்தது போல் செதுக்க முடியுமா?

அரசர்: அமைச்சரே! அழைத்துவாரும் அவனை இளவரசியின் அந்தப்புரத்திற்கு!.......ம் ....வேண்டாம் ஆலோசனை மண்டபத்திற்கு டேய் (ஒரு சேவகன் வருகிறான்) இளவரசியை ஆலோசனை மண்டபத்திற்கு அலங்காரத்தோடு வரச்சொல் சீக்கிரம்!

[அரசர் மாமல்லரைத் தொடர்ந்து தினகர், அமைச்சர், தளபதியார் முதலியோர் செல்கின்றனர் ஆலோசனை மண்டபத்திற்கு! அரசர் அமர்கிறார்]

அரசர்: பருகப் பழரசம் கொண்டுவா!

[கொண்டுவருகிறான் எல்லோருக்கும் கொடுக்கிறான் இளவரசி வருகிறாள், இனிய முகத்துடன் மயில்போல் ஒயிலாக நடந்து]

பத்மா: அப்பா! எனப்பா அழைத்தீர்கள்? இது யார் அமைச்சரே புதிதாக இருக்கிறது?

[ஏளனமான நோக்கோடு கவனிக்கத் திரும்பியவள், தினகர் முகத்தைப் பார்த்ததும் திகிலடைந்தவளாய், கனிந்த பார்வையை வீசித் தலைகுனிந்து கொண்டாள்! தினகரும் தன்னை மறந்து தன்னெதிரில் நின்ற பெண்ணைப் பார்த்த விழி மாறாது பார்த்து நின்றான். கன்னி கண்ணொடு கண்ணோக்கி நின்றாள். கனியிதழ் மலர்ந்தது. அங்கமெல்லாம் அழகுற இருப்பதைக் கண்டு களிப்புற்றான். அரசன் சிற்பி சிலைசெய்யும் நோக்கோடு பார்க்கிறான் என்று பேசாது இருந்தான். தளபதி காதல் பார்வை கனிவதைக்கண்டு கடுஞ்சினம் கொண்டான். அமைச்சர், அழகு நங்கையை ஆடவனுக்குக் காட்டுவதே தப்பென்று நினைத்தவராய் நின்றார். தளபதி திடீரென்று ....]

தளபதி: என்ன பார்த்தாகிவிட்டதா?

[தளபதி கூறியது தினகர் காதில் விழவில்லை]

தளபதி: (மறுபடியும்) பார்த்தது போதும் பார்வை மங்கிவிடாமல்

தினகர்: முடிந்து விட்டது; மிகவும் பொருந்தும்.

தளபதி: எதற்கு .. ? (ஆத்திரத்துடன்)

தினகர்: எழில்மிக்க சிலையொன்று சமைக்க (அரசரிடம்) அரசே! வருகிறேன்....! வணக்கம்! (இளவரசியை பார்க்கிறான். இளவரசி இவனைப் பார்க்கிறாள் தினகர் திரும்பிச் செல்கிறான்)

பத்மா: எதற்கப்பா இவரை இங்கு அழைத்து வந்து, என்னையும் கூட்டிக் காண்பித்தீர்கள்?

அரசர்: பத்மா! கலைவிழாவிற்கும், உன் பிறந்ததின விழாவிற்கும் சிலைகளைப் பரிசாக்கித்தர விருக்கிறேன்

உனக்கு! அதற்கு உன் உருவைச் சிலையாக்க அந்தச் சிற்பியை இங்கு அழைத்து வந்தேன் உன் எழில்காண!

பத்மா: அவர் எங்கே யிருக்கிறாரப்பா? அவர் சிலைக்கூடத்திற்கு நான் போகலாமா?

அரசர்: கூடாது! சிலைதானே உன்னைத்தேடிவரும் போ! அந்தப்புரத்திற்கு!

காட்சி 16.

இடம்: **சிற்பியின் வீடு.** உறுப்பினர்: **தினகர், சந்தர்.**
நேரம்: **மாலை.**

[தினகர் பத்மாவின் சிலையைச் செதுக்கிக் கொண டிருக்கிறான். அவளை வர்ணித்துப் பாட்டொன்றைப் படிக்கிறான் சந்தர் கூட இருக்கிறான்.]

சந்தர்: தினகர்! தினகர்!! தின....கர்!!! என்னப்பா காதே கேட்கவில்லையா? (அவன் முகத்தைப் பார்த்து) ஏன் முகம் வாட்டமாயிருக்கிறாய்?

தினகர்: இல்லை! இல்லை!! ஏதோ ஞாபகம்

சந்தர்: அதுவும் இளவரசியின் ஞாபகம் என்று சொல்.

தினகர்: சரியாகச் சொல்லிவிட்டாயே! .. அவளுடைய அன்ன நடையும், மின்னலிடையும், வண்ண உடையும், பின்னற் சடையும் ......

சந்தர்: போதும்! போதும்!! பயப்படாதே தினகர்! உன்னுடைய வீர நடைக்கு அவளுடைய அன்ன நடை கால்தூசி பெறாது தோழா!

தினகர்: அப்படிச் சொல்லாதே! அவளுடைய சிலையைச் செதுக்கும் முன்பே என்னுடைய உள்ளக்கோயிலில் அவள் உருவத்தைச் சமைத்துவிட்டேன்!

சந்தர்: இப்பொழுது நீயா பேசுகிறாய்? இல்லை காதல் மயக்கம் பேசச் சொல்கிறது!

தினகர்: தோழா! இளவரசியைப் பார்த்ததிலிருந்து ஏற்பட்டுவிட்டது ஒரு புத்துணர்ச்சி என் உளத்தில்

சந்தர்: தினகர்! நாட்டின் நிலைமையும் பெற்ருேரின் இன்னலையும் மறந்துவிட்டாயா, இந்த க்கன்னல் மொழியாள் நினைவால்!

தினகர்: பத்மாவைப் பார்த்ததிலிருந்து எல்லாவற்றையுமே மறந்து விட்டேன்.

சந்தர்: மறப்பாய்! மறப்பாய்!! என் எல்லாவற்றையுங் கூடத் துறப்பாய்! யார் கண்டது! முற்றிவிட்டதே காதல்! இளமை வற்றி விடுமுன் அவளைப் பற்றி விடு. ஆனல் உன் பெற்ருேரை மறந்து விடாதே!

காட்சி 17.

இடம்: அந்தப்புரம். உறுப்பினர்: தோழி, பத்மா.
நேரம்: இரவு. (சாரதா)

[பத்மா இருக்கையில் இருக்கிருள் தோழி பக்கத்தில் நிற்கிருள் பழரசத்தட்டோடு]

பத்மா: பழரசம் வேண்டாமடி! பழகிப் பழகிக் கசந்து விட்டதடி!

தோழி: (சாரதா) என் பத்மா! புளிக்குதோ? கசக்காதே! நான் தந்தால் புளிக்கும்! கசக்கும்!! துவர்க்கும்!!!

பத்மா: ஏன்டி! அன்று வந்தாரே சிற்பி! அவர்....அவர்....

சாரதா: ....ம்....அவர் யார்? எங்கிருக்கிருர்? இதை நான் தங்களுக்குச் சொல்லவேண்டும் அப்படித்தானே!

பத்மா: போடி! கேட்டால் (நாணத்தோடு)

சாரதா: அவர் சிற்பி. பழைய சிற்பியின் சீடர். இளவரசி பத்மா அவர்களின் மனதைக் கவர்ந்தவர் இளவரசி பத்மாவிடம் மனதைப் பறிகொடுத்தவர்........

பத்மா: நிறுத்தடி! எனக்குத் தெரியும்!

சாரதா: தெரிந்துதான் கேட்டீர்களா? சரி நீ படுத்துக் கொள்! நான் போகிறேன்!

[படுக்கையில் படுக்கிருள் பத்மா! சாரதா செல்கிருள். பத்மாவின் உள்ளம் ஏழைச் சிற்பியை நினைத்து ஏங்குகிறது அயர்ந்து தூங்கிவிடுகிருள்]

கனவு.

[அரசர்க்குத் தெரியாமல் சிற்பியின் வீட்டிற்குச் செல்கிறாள் கூடத்தில் தினகர் பத்மாவின் சிலையை முடித்துவிட்டு, அதையே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறான். கையிலிருந்த மலர் மாலையை சிலைக்குப் போடுகிறான். திடீரென்று பின்னால் நின்ற பத்மா கையைத் தட்டுகிறாள். தினகர் பார்க்கிறான் திரும்பி. ஏங்கிய முகத்தோடு காதல் ததும்பப் பார்க்கிறாள். தினகர் எழுந்து பத்மா விடம் நெருங்குகின்றான்].

தினகர்: இளவரசியாரே! வருக! அமர்க!
[பத்மா தலைகுனிகிறாள் நாணத்தால்]

தினகர்: தங்கள் வரவால் ஏழைச் சிற்பியின் இல்லம் சிறப் படைந்தது.

பத்மா: சிற்பிதான்! என்னுள்ளத்தில் காதல் உருவைத் தீட்டிய சிற்பிதான்!

தினகர்: பத்மா!

பத்மா: அன்பே!

தினகர்: பத்மா! நான் பாக்கியம் பெற்றவனானேன்.

பத்மா: நானுந்தான் அன்பே!
[கையைப் பிடிக்கிறான் அணைக்கிறான். மகிழ்வோடு திடீரென்று தினகரின் உடை, அரச உடையாக மாறுகிறது]

பத்மா: (ஆச்சர்யத்தால்) அன்பே! அரச உடை அழகாய் தானிருக்கிறது.

தினகர்: நான் ஆண்டியல்லவே! நானும் அரசன் தான்.

பத்மா: ஆம்! நீர் அரசர்தான். என் உள்ளத்தை ஆளும் அரசர்தான்!

தினகர்: பத்மா! அன்பே!! [தன்னை மறந்து அவளைத் தன் மார்புறத் தழுவி ஆனந்தமுறுகிறான்]
இன்பமே! கணக்கிலா முத்தம் எனக்கீவாய் நித்தம்
பிணக்கேதுமின்றிக் களிப்பூட்டென் சித்தம்!

பத்மா: அன்பே! என்றுமே இன்றுபோலிருக்குமா?

தினகர்: என் ஐயம் கண்ணே! தென்றல் உலவும் வரை, பொன்கடல் கரையுடைக்கும்வரை, அன்புமாறாது இன்பம் குறையாது! துன்பம் தொடராது!

பத்மா: அன்பே! அன்று அரண்மனையில்........

தினகர்: என் விழிகட்கு விருந்தானாய்! என் காதல் வழிக்கு முதற்படி அமைத்தாய்!

பத்மா: எனக்கும் அதே நிலைதான் கண்ணாளா! அதோ பூரிக்கும் கடல்! சிரிக்கும் நிலவு! இதழ் விரிக்கும் அல்லி ஒன்றையொன்று இணைந்து இன்பம் காண்கிறதே!

தினகர்: சொல்லாமல் சொல்கிறாயே நம் நிலையை! பத்மா! எனக்கா நீ! என்றெண்ணும் பொழுது என்மனம் பயப்படுகிறது கண்ணே! அரசர் அனுமதிப்பாரா

பத்மா: ஆருயிரே! எனக்காக நீர்! உமக்காக நான்!! நமக்காக இவ்வையகம்!!! எதற்காகப் பயம்?

தினகர்: அன்பே! சிலையின் இதழ்களைச் சரி செய்ய வேண்டும் நான் வருகிறேன்.

பத்மா: என் இதழ்கள் இருக்கின்றனவே! வேண்டாமா?

தினகர்: வேண்டாம் என்பேனா வேல்விழியே!

பத்மா: இதழ்கள் காத்த தேனை வண்டு உண்ணத் துடிக்குமாமே!

தினகர்: வண்டல்ல நான் வனிதையே! மதுவுண்டபின் துண்டுபடும் நிலையுடைய பொன்வண்டு மனம் கொண்டோனல்ல நான்! (பாடல்)

[பாட்டு முடிந்ததும், தினகர் பத்மாவை இறுக அணைத்து ஊஞ்சலில் ஆடுகிறான். இருவரும் கயிறு அறுந்து கீழே விழுகின்றனர். திடீரென்று பத்மா அழறியபடி எழுகிறாள்.]

பத்மா: ஆ............அன்பே!

[சாரதா எழுந்தோடிவந்து]

சாரதா: 'அன்பா'! .. என்னது? என்ன? கனவு கண்டாயா?

பத்மா: ஆமாம்........ (பேச்சை மாற்றி) ஆம் என்மேல் யாரோ அம்பை எறிந்து செல்வதுபோல் கனவு கண்டேன். அதுதான் 'அப்பு' என்றேன்.

சாரதா: யார்? சிற்பியா அம்பை எய்தார்! என்ன அம்பு? காதலம்புதானே!

பத்மா: ச்சீ........ சும்மா....... போடி ....

[சாரதா செல்கிறாள் பத்மா எழுந்து கோயில் அறைக்குச் சென்று கண்ணனை வணங்குகிறாள்]

பத்மா: கண்ணா! என் எண்ணமெல்லாம் முடியுமா திண்ணமாக? பண்ணுவதறியேன் கனவு போல் ஆகுமா வாழ்வு? தொடராமலிருந்தால் நல்லேதே தாழ்வு! இலலை களிப்பு நிறைந்ததாய் காணுமா?

காட்சி 18.

நேரம்: பகல். உறுப்பினர்: காவலாட்கள்.

இடம்: வீதி. [இரத்தினபுரியில்]

1ம்: காவலாளி: என்னப்பா! பெருந் தொல்லையாக இருக்கிறது அந்த மகேந்திரபுரியைவிட்டு இந்த இரத்தின புரிக்கு எப்போது வந்தோமோ அன்றிலிருந்து வேலைகள் ஓயவில்லையே! தேடித்தேடி அலுத்து விட்டது எங்கேபோனுங்கன்னு தெரியவில்லையே?

2ம்: அது தெரிஞ்சா நாம் ஏன் இப்படிச் சுத்தனும்?

3ம்: டேய்! அப்பா சாமிகளே!என்னால் இனி ஒருஅடி கூட எடுத்துவைக்க முடியாது.

1ம்: ஏன்? அப்ப ஒரு பாடைகட்டி உன்னைத் தூக்கி வைத்து, அதை நாங்க தூக்கிட்டுப் போறோம்.

3ம்: போடா! கேலி செஞ்சியோ எனக்கு இருக்கிற வலிக்கு எலும்பை ஒடிச்சிடுவேன்.

1ம்: அட நீ! எலும்பைக் கிலும்பை ஒடிச்சிடாதப்பா.

2ம்: நீங்க இப்படி பேசிக்கிட்டுத் திரியத்தான் சரி வேறே காரியத்திற்கு........ஊம்.........ம்..........
சரியில்லே டேய் எனக்கு ஒரு யோசனை வருது....

1ம்: வருதா.........ம்........வரட்டும்.

2ம்: ஏன்டா அந்தத் தினகரும், சந்தரும்........

3ம்: ஆஹா பேர்களைப் பாருங்க பேரு பெத்தபேரு.... ஓடி ஒழியிற பயலுக....

2ம்: டேய்........டேய்....... நீங்க என்னடா........பெரிய வீரன்களோ? ஏன்டா........நடுநிசியிலே தானடா நாட்டைப் பிடிச்சிங்க ....அதிலேவேறே .... அவங்களைக் கொறை சொல்றியே ....அதுசரிடா இந்த ரெண்டுபேரும் ஏதாவது சாமியார் மாதிரி வேஷம் போட்டுத் திரிஞ்சாலும் திரியலாம்லடா எப்படி நம்ம புத்தி....

1ம்: ஆமாண்ணே! ஒம் புத்தியை ஏங் கத்தினுலே கொஞ்சம் குத்தி விடுறேன்........

2ம்: ஏன்டா?

1ம்: ....அப்பத்தான் வேலே செய்யும் நல்லா........

3ம்: ....அண்ணே அதோ ரெண்டுபேரு மோளம் அடிக்கிறுங்கண்ணே....... தாடி மீசை கூட்வைச்சிருக்காங்கண்ணே.

[மூவரும் அங்கு ஓடுகிறுர்கள். அங்கே இரண்டு பேர் தாடி மீசையுடன் விளையாட்டுகள் செய்து பணம் சம்பாதிக்கின்றனர் காவலாளிகள் மூவரும் கவனித்துக் கொண்டிருக்கின்றனர் சிறிது நேரம் கழித்து ஆட்டம் முடிகிறது கூட்டம் கலைகிறது காவலாளிகள் அந்த இரு வரையும் நெருங்குகின்றனர்]

1ம்: ஏப்பா! நீங்க எந்தஊரு?

பெரியவன்: எங்க ஊரு ....ம்...........சிறுநாடுங்க
[ஒரு காவலாளி அவர்களது தாடிமீசையை உற்று

உற்றுப் பார்க்கிறான். அவர்கள் இருவரும் விழிக்கின்றனர். உண்மையில் தாடி மீசையுள்ளதா என்று ஒருத்தன் தாடியையும் மீசையும் ஒரு காவலாளி இழுக்கிறான். அது உண்மைத் தாடி மீசையாக இருப்பதால், அவன் வலி பொறுக்க மாட்டாமல் ஆ என்று கத்துகிறான் மற்றொருவன் அடுத்தவனது தாடி மீசையைப் பிடித்திழுக்கிறான் அது கையோடு வந்துவிடுகிறது அவன் விழிக்கிறான்]

1ம் காவ: டேய்....... என்னது? யாரை ஏய்க்க? ஏண்டா நீதானே இளவரசன் தினகர்.

அவன்: இளவரசனாவது....தினகராவது.....நான் கடன்காரன் தொல்லை பொறுக்காமல் இப்படி ஓடி வந்து மறைஞ்சு திரியரேன் ....நீங்க ...... ஒன்று

2ம் காவ: ஏண்டா .... நமக்குத்தான் இளவரசன் எப்படி இருப்பான்னு தெரியாதே..... ஒருவேளை இவனாக இருந்தால் ......

3ம்: ஆமாண்ணே ....இருக்கும் ....இருக்கும்

பெரியவன்: என்னய்யா........இருக்கும்.... ? அவன் ஏங்கூட விளையாட்டுச் செய்ய இப்படி வந்தால்....

1ம் கா: டேய் ....இவனைப் பிடியுங்கடா........

சிறியவன்: ஐயா........ஐயா.........விட்டுடுங்கஐயா.........ஐயா

[திருப்புக் காட்சி]

நிதம்பன்: ச்சீ........இந்தப்பயலை.....யாரடா பிடித்துவந்தது இளவரசன் இவனா? ....நாய்கள் ....காலைப் பிடிக்கச் சொன்னால், தோளைப்பிடிப்பார்கள்.... இவனை வெளியேற்றுங்கள்.

1ம் கா: அரசே! மன்னிக்கவும்! இளவரசர் தினகர் எப்படியிருப்பார்னு தெரியல்லையே! .... நாங்கள் எப்படிப்பிடிப்பது........?

நிரும்பன்: இது வேறு தொல்லையா? இங்கு இளவரசனைப் பார்த்த காவலாளிகள் ஒருவருமே இல்லையா?

அமைச்சர்: இல்லை பார்த்தவர்கள் யாவரும் பரலோகம் சென்றுவிட்டார்கள் பார்க்காதவர்கள் தான் இங்கிருக்கிறார்கள்.

நிதும்பன்: சரி ....சரி........விட்டுத்தொலையுங்கள். அந்தப் பயலை இனித் தேடவேண்டாம். எப்போதாவது சிக்காமலா இருப்பான் அபபோது சிரழிக்கலாம் ....சரி .... அந்தக்கழுதைகள் விக்கிரமனும் அவன் மனைவியும் சிறையில் உயிரோடிருக்கிறார்களா? அல்லது அவர்களும்மடிந்து விட்டார்களா

[திருப்புக் காட்சி] [சிறை]

விக்கிரமன்: மடிய மாட்டோம் நிகும்பனின் ஆட்சிக்கு முடிவு கட்டும்வரை மடியமாட்டோம் இராணி! நீ சாப்பிடு ....நம் தினகர் என்றுவது வருவான் .... கொன்று தொலைப்பான் நிகும்பனை உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே (இராணி சாப்பிடுதல்)

காட்சி 19

இடம்: மலர்த்தோட்டம். உறுப்பினர்: பத்மா, சாரதா.
நேரம் மாலை:

[பத்மாவும் சாரதாவும் மலர் ஒன்றைக் கையில் வைத்து நுகர்ந்து கொண்டே வருகிறார்கள். பத்மா வாட்டத்துடன் இருக்கிறாள்.]

சாரதா: பத்மா! ஏன் இப்படி வாடிய முகத்துடனிருக்கிறாய்?

பத்மா: என் மனம் நிம்மதியில்லை! எதையோ தேடி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது.

சாரதா: எனக்குத் தெரியுமே! நான் சொல்லவா?

பத்மா: எங்கே சொல் பார்க்கலாம்!

சாரதா: (பத்மாவின் முகத்தைச் சுட்டிக் காண்பித்து) இந்த ரோர்ஜாவின் தேனைப் பருக வண்டைக் காண வில்லை என்ற கவலையுடன் இருக்கிறது உன்மனம்! அப்படித்தானே......! நாம் பார்த்த மலர் பறி போய் விட்டதோ என்று அங்கொரு வண்டு பதறிக் கொண்டிருக்கிறது. இந்த மலருக்காக அந்த வண்டு இங்கு வரவேண்டும்.

பத்மா: போடி ...குறும்புக்காரி உனக்குச் சேட்டை அதிக மாகி விட்டது அப்பாவிடம் சொல்லி ....

சாரதா: வேண்டாம்! வேண்டாம்!! அவரிடம் சொல்லி ... அழைத்து வருகிறேன்! நீ கவனமாக இரு.

[சாரதா செல்கிருள் சிற்பியின் கூடத்தைநோக்கி]

சாரதா: (கதவைத்தட்டி) ஐயா! .. ஐயா ... யாரது வீட்டில்

தினகர்: யார் கதவைத் தட்டுவது? (உள்ளே இருந்தபடி கேட்கிருன்)

சாரதா: நான் தான் ... இளவரசியின் தோழி ...

தினகர்: ஆ! இளவரசியின் தோழியா?....சந்தர் கதவைத் திற

[சாரதா கதவில் சாய்ந்துகொண்டு நிற்கிருள் சந்தர் கதவைத்திறக்கிருன். சாரதா அவன்மேல் விழுந்துவிடுகிருள் சந்தர் தள்ளிக் கொள்கிருன் சாரதா தரையில் மோதி விழுகிருள். சந்தர் குனிந்து அவளைப்பிடித்துத் தூக்கிக்கொண்டே....]

சந்தர்: கதவிலா சாய்ந்து நிற்பது...? நல்லவேளை காயம் ஒன்றுமில்லை அடி பலமாகப் பட்டுவிட்டதோ? (சாரதா அவன் பிடியிலிருந்து விலகிக் கொள்கி ருள் நாணத்தோடு....)

சாரதா: மன்னிக்கவும் தங்கள் மேல் விழுந்துவிட்டேன் தவறு நேர்ந்துவிட்டது

சந்தர்: மன்னித்தோம் கன்னியே! எதை உன்னி நீர் இங்கு வந்தீர்? (கேலி செய்கிருன். சாரதா வேண்டுமென்றே கோபமாக)

சாரதா: உன்னியாவது ...... மூட்டையாவது? இளவரசி சிற்பியை அழைத்துவரச் சொல்கிருள்.

சந்தர்: என்னைக் கூப்பிடவில்லையா ஒருவரும்

சாரதா: உன்னை எந்தப் பொண்ணையா கூப்பிடுவாள்?

சந்தர்: ஆமா 'பாட்டி'.... ஆமா
[தினகர் வருகிருன்...]

தினகர்: பாட்டி எங்கே இங்கே வந்தாள்?

சந்தர்: இல்லை இவள் என்னை ஐயா என்ருள். நான் அவளைப் பாட்டி என்றேன், அதுகிடக்கட்டும் இளவரசியார் உம்மை அழைத்துவரச் சொன்ஞர்களாம் சென்றுவா.

சாரதா: (சந்தரைக் காட்டி) உங்களையும் தான்

தினகர்: சந்தர்! அப்படியாஞல் புறப்படு!
[மூவரும் செல்கின்றனர்]
[பத்மா மலரின் மணத்தை நுகர்ந்தபடி இருக்கிருள் மூவரும் வருகிருர்கள். பத்மா எழுந்து நாணத்துடன் தலைகுனிந்து நிற்கிருள்.]

தினகர்: இளவரசியாரே! வணக்கம் எங்களை அழைத்ததின் நோக்கம்....?

பத்மா: தங்களின் வரவு எங்களை எல்லையற்ற மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. சிலையைப்பற்றி ஒன்று கேட்கலாம் என்றழைத்தேன். என் அழைப்பை ஏற்று வந்த தங்கள் நற்பண்புக்காக நான் பாராட்டுகிறேன். இந்தாருங்கள் இதை அதற்காகப் பெற்றுக்கொள்ளுங்கள் (மலரை நீட்டுகிருள். தினகர் வாங்குகிருன்).

தினகர்: சிலையைப் பற்றி ஒன்றென்ன ஓராயிரம் வேண்டுமாஞலும் கேளுங்கள் சொல்லத் தயார்.

பத்மா: இப்படி அமருங்கள் (சாரதாவைப் பார்க்கிருள் சாரதா சந்தரைப் பார்த்து)

சாரதா: தங்களை யாரோ கூப்பிடுகிறார்கள்.

சந்தர்: என்னையா கூப்பிடுகிறாங்க இருக்காது ஒருபோது மிருக்காது என்னைப் பிறர் கூப்பிடுமளவுக்கு நான் என்ன அவ்வளவு முக்கியம் பெற்றவனா?

சாரதா: தெரியாதவர்கள் கூப்பிடுவார்களா?

சந்தர்: இதோ வருகிறேன் ...

[இருவரும் மறைவான இடத்திற்குச் செல்கின்றனர். தினகரும், பத்மாவும் மண்டபத்திலுள்ள வாசற்படியில் அமர்கிறார்கள்.]

பத்மா: சிலையின் வேலை எவ்வளவு முடிந்திருக்கிறது?

தினகர்: முக்கால் பாகம் முடிந்துவிட்டது இன்னும் கால் பாகம் இருக்கிறது.

பத்மா: நான் சிலைக்காகத் தங்களுக்குத் தரப்போகும் பரிசைத் தடையின்றி ஏற்றுக்கொள்வீர்களா?

தினகர்: ஆபத்து இல்லாததாக இருந்தால் தடையின்றி ஏற்றுக்கொள்வேன்.

பத்மா: ஆபத்து இல்லாதது எதுவுமேயில்லை எல்லாம் ஆபத்துத்தானே. ரோஜா மலரைப் பறிப்பதற்கு முன், பறிப்பவன் கையில் எத்தனை முட்கள் குத்துகின்றன, தேனை எடுக்கும் போது தேனீக்கள் நம்மை விட்டா வைக்கின்றன....? இதைப் பார்த்தால் முடியுமா....?

தினகர்: இளவரசியாரே! ஆபத்து என்றால் இதெல்லாம் ஆபத்தாக இருக்க முடியுமா? எப்படியிருந்தாலும் சரி தாங்கள் தரும் பரிசு எதுவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வேன்.

[பத்மா தினகரைப் பார்க்கிறாள் தினகர் பத்மாவைப் பார்க்கிறான் பத்மா நாணத்தால் தலைகுனிகிறாள்]

பத்மா: தங்களுக்கு நான் எதைக் கொடுப்பதென்றே தெரியவில்லை.

தினகர்: (பத்மாவின் கையிலுள்ள மலரைப் பார்த்து) ஏன்? அந்த மலரைக் கொடுங்கள்........

பத்மா: இதோ தருகிறேன் (கொடுக்கிறாள். தினகர் வாங்கிக் கொண்டு)

தினகர்: நான் ஒரு பரிசு தரவா? தங்களுக்கு தடையேதுமில்லையே! பிறகு தடைசொல்லக்கூடாது.

பத்மா: சரி ....[அவனையே பார்த்துக்கொண்டிருக்கிறாள்] [தினகர் அவள் அருகில் சென்று அம்மலரை அவள் கூந்தலில் வைக்கிறான். அப்போது பத்மா அவன் மார்பில் சாய்ந்து தினகரின் கைகளைப் பற்றுகிறாள்]

தினகர்: அன்பே! சிலைக்காக எனக்கு விலைமதிக்கமுடியாத பொருள் கிடைத்துவிட்டது. இது நிலைக்குமா என்பதுதான் ஐயம்.

பத்மா: ஐயம் ஏன்? அன்பே! வையமே எதிர்த்தாலும் தாங்களே எனக்கு வரன்!

தினகர்: இளவரசியாரே! நான் ஏழைச் சிற்பி........

பத்மா: இளவரசி என்று கூப்பிடாதீர்கள், இன்பமே என்று சொல்லுங்கள். ஏழைச் சிற்பிதான் நீங்கள் கோழையல்லவே உலகை எதிர்ப்பதற்கு

தினகர்: உன் முன் கோழையாகிவிட்டேன்.

[தினகரும் பத்மாவும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்து பாடுகின்றனர்]

[அதே தோட்டத்தில் மற்றோர் புறத்தில்]

சந்தர்: யாரோ கூப்பிடுவதாகச் சொன்னாயே ஒருவரையும் காணவில்லையே!

சாரதா: (தன்னைக் காண்பித்து) இவர்தான் அவர்.

சந்தர்: அடடே! பரவாயில்லையே! பலே கைகாரியாக அல்லவா இருக்கிறாய்.

சாரதா: நான் ஒன்றும் அப்படி............

சந்தர்: அது சரி இப்போது எதற்காக என்னை அழைத்தாய்?

சாரதா சரியாபோச்சு மலர் இருக்குமிடத்தில் வண்டுக்கு என்ன வேலை இருக்கிறது என்று கேட்பதும்போல் இருக்கிறது தங்கள் கேள்வி.

சந்தர்: ஒகோ நீ மலர் நான் வண்டாக்கும்............

சாரதா: கதவைத்திறந்த என்னைக் கீழே விழச்செய்து தூக்கிவிட்டீர்களே அதைமறக்க முடியுமா?

சந்தர்: முடியாது சாரதா முடியாது. தடாகத்தை மீன் மறக்கலாம். தாமரையை வண்டு மறக்கலாம் வானத்தில் விண் மீன்கள் தோன்ற மறக்கலாம் ஆனல் நம் சந்திப்பை என்றென்றும் மறக்க முடியாது மறக்கவே முடியாது.

[சாரதா, சந்தரிடம் நெருங்குகிருள் சந்தர் விலகுகிருன்]

சந்தர்: மச்சநாட்டு மங்கைகளெல்லாம் ஆண்களை மயக்கும் ஆரணங்குகளாக அல்லவா இருக்கிருர்கள்.

சாரதா: ஏன் ஆண்கள் மட்டும் என்னவாம்.

[அவன் தோளைப் பிடித்துக் கிள்ளுகிருள். சந்தர் விரட்டுகிருன். சாரதா தினகர்-பத்மா இருக்கும் இடத்திற்கு வருகிருள் ஓடி]

தினகர்: சந்தர்! எங்கே சென்ருய்? வா. போகலாம் வீட்டிற்கு.

சந்தர்: எல்லோருமாகத்தானே........

தினகர்: இப்போது எல்லோரும் இல்லை நாம் மட்டுத்தான் பத்மா! வருகிறேன். (பத்மா தலையாட்டுகிருள்)

சந்தர்: சாரதா! வருகிறேன் [போகிருர்கள்]

[இங்கு நடந்ததை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தளபதி வேகமாக வெளியே சென்று

தோட்டத்து வாயிலில் நின்றுகொண்டிருக்கிறான் தினகரும் சந்தரும் வருகிறார்கள்]

தளபதி: இருவரும் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?

சந்தர்: [திமிரோடு] எங்கேயும் போவோம் வருவோம் அதை நீங்கள் யார் கேட்பதற்கு?

தளபதி: நான் யாரா? நான்தான் இந்நாட்டின் தளபதி

சந்தர்: ஓகோ! கேள்விப்பட்டிருக்கிறோம்! போரிலே புலி, வீட்டிலே பூனை என்று.

தளபதி: ஜாக்கிரதையாக இருங்கள்.

தினகர்: ஜாக்கிரதை என்ற வார்த்தையை எங்கள் வாழ்வின் அகராதி எட்டிலே காணமுடியாதே!

தளபதி: தோலை உறித்து விடுவேன்! முதுகெலும்பில்லாதவர்களே!

சந்தர்: ஆடு உறிப்பதில் தேர்ந்தவரோ? (சீறிப்பாய்ந்து) தோலை உறிக்காமலே உங்கள் விஷயத்தில் முதுகெலும்பை எண்ணமுடியுமா என்பதைக் காட்டவா............?

தளபதி: நேரம் சரியில்லை பிறகு சந்திக்கிறேன்.

தினகர்: நேரம்,காலம். குலம் கோத்திரம் முதலியவைகளைக் கையாலாகாத கபோதியான சோம்பேறியிடம் கூறவேண்டிய வார்த்தைகள் அவை

சந்தர்: சரி...சரி.... இவரோடு என்னபேச்சு வா போகலாம் நேரமாகிறது [இருவரும் போகின்றனர். தளபதி நெஞ்சைத் தூக்கியப்படி முறைத்துப் பார்த்துக்கொண்டு குதிரையில் செல்கிறான், குதிரையை அடித்தபடி.]

TAMIL NADU ARCHIVES LIBRARY MADRAS
L03766

காட்சி 20

நேரம்: இரவு. உறுப்பினர்: பத்மா, தளபதி.

இடம்: பத்மாவின் அந்தப்புரம்:

[பத்மா மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிருள் தளபதி வருகிருன்]

தளபதி: இளவரசி அவர்களே! வணக்கம்.

பத்மா: வணக்கம்! வந்தகாரணம் யாதோ?

தளபதி: காரணம் ஒன்றும் முக்கியமில்லை. என்ன இன்றைக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிருய் ஒரு நாளும் இல்லாத திருநாளா?

பத்மா: இனிமேல் என்றைக்கும் திருநாளாகத்தான் இருக்கும் தளபதியாரே!

தளபதி: தெரியும் தெரியும் இன்று மாலை பூங்காவனத்தில்

பத்மா: என்ன? (பதட்டத்துடன்) மாலையிலா...... ....என்னது?

தளபதி: (கேலியாக) என்ன இளவரசியாரே! பூனை கண்ணை மூடிக்கொண்டு பாலைக்குடித்தால், உலகமே இருண்டு விட்டது என்று நினைக்குமாம். அது போலல்லவா தாங்களும்........

பத்மா: அனுவசியமான பேச்சுத் தேவையில்லை இங்கு!

தளபதி: ஒஹோ! அவசியமான பேச்சுக்குத்தான் இடமா?

பத்மா: பேச்சுகள் பலயாக இருக்கின்றனவே! எந்தக் காதலியிடம் கற்றீர்?

தளபதி: காதலி............ஹஹ்............ஹா............ காதலி காதலி என்ற சொல் இன்பந்தரும் சொல் இதை இப்பொழுது உன்னிடமிருந்துதான் கற்றுக் கொண்டேன்.

பத்மா: அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டதா? இந்த உடலும் உயிரும் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டு

விட்டன முன்பே. இப்பொழுதாவது தெரிந்து கொள் தனிமையில் இருக்கும் ஒரு பெண்ணிடம் பேச்சுக் கூடாது என்று.

தளபதி: யாரது உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட நபவஞ்சகன்? ஆம்....ஆம்....இப்பொழு தல்லவா தெரிகிறது! பஞ்சப்பயல்! நாடோடியாகத் திரிந்த ஒருவன் சிற்பி என்று பெயர் சூட்டிக் கொண் டானும். இளவரசியைப் பார்க்கவேண்டும் என்று னும். உடனே அரசரும் அனுமதி அளித்து விட்டாராம். போதாதற்கு மனதைப் பறிகொடுத் தாளாம் இந்த இளவரசி! இளவரசியாரே இப்பொழுது பேசுவது நீங்களல்ல! அந்தபாதப் பயல் காதல் பைத்திய மாகிவிட்டது மன்றி பேசவும் கற்றுக் கொடுத்துவிட்டான் உனக்கு. காதலைப் பற்றி என்ன தெரியும், நேற்றுவந்த அந்த நாடோடிக்கு! நரிக்கு இடம் கொடுத்தால் கிடைக்கு இரண்டு ஆடுகேட்குமாம்! அதுபோல் தான் இருக்கிறது இந்த ஆண்டியின் செய்கை!

பத்மா: அளவுக்கு மீறிப் பேசவேண்டாம்! தளபதியாரே! என்னைப்பற்றிப் பேசலாம் தாங்கள் ஏனென்றால் உரிமை இருக்கிறது என்ற பொறுப்பிலே பங்குண்டல்லவா? என் காதலரைப் பற்றிப் பேச நீங்கள் யார்? நேற்றுவந்த நாடோடிதான் அவர் அறிவு ஆற்றல், பண்பு, எல்லாம் உடையவர்! அவரையும், உங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறீர் களே! அதுதான் வேடிக்கையாக இருக்கிறது! தளபதியாரே! நீங்களும் ஒருமனிதர் என்ற முறையில் பேசவந்து விட்டீர்களே! வெட்கமில்லை!

தளபதி: (நயந்து கொண்டு) பத்மா! அதிகமாகப் பேசி விட்டேன் கோபம் கொள்ளாதே. நான்யார்! சிந்தித்துப்பார்! இந்நாட்டின் தளபதி பிறருடைய நல் வாழ்வைக் கவனிப்பதில் எனக்கு அதிகப் பங்குண்டு. உன்னிலையைப் பற்றித்தான் மிகவும்

கவலைப்படுகிறேன். நேற்றுவந்த நாடோடி உன் காதலைப் பெற்றான் என்றால் உலகம் என்ன நினைக்கும்.

பத்மா: என்ன நினைக்கும்! அவருடைய திறமையைப் பற்றி உலக மெல்லாம் புகழும்!

தளபதி: ஏன் புகழாது! மறுகணம் இளவரசியைப் பற்றி என்ன நினைப்பார்கள்! இருந்து இருந்தும் இந்தப் பரதேசிப்பயல் தானா அவள் கண்களுக்கு அகப் பட்டான் என்று கேலி செய்வார்கள்! சிந்தித்துப் பார்! நான் அவனைவிட உயர்ந்தவன். மேலும் உயர்ந்த பொறுப்பில் இருப்பவன் நாடோடி ஒருவன் இளவரசியை மணந்து கொண்டான். என்பதைவிட தளபதியார் மணந்து கொண்டார் என்றால் மக்கள் எவ்வளவு போற்றுவார்கள் உன்னையும் ...... என்னையும்! நாட்டை ஆளப்போகும் இளவரசி நீ! நாட்டைக்காக்கும் தளபதி நான்! இதற்கிடையில் நாடோடி சிற்பி எப்படிப் பொருந்தும்! (ஆத்திரத்துடன் சிந்தித்துப்பாருங்கள் இளவரசியாரே! சிந்தித்துப்பாருங்கள்!

பத்மா: சிந்திப்பதற்கு இனி இடமில்லை! தளபதியாரே! இடமில்லை! என் உயிரையே ஒப்படைத்து விட்டேன் அவரிடம்! என்னை மறந்து விடுங்கள். இனி இவ்விடத்தில் வேலையில்லை உங்களுக்கு! வெளியே போகலாம்!!

தளபதி: வெளியே போவதா! போகிறேன்! வரும்போது உன் காதலர் தலையை உன் காலடியில் கிடக்க வைக்கிறேன். [தளபதி வேகமாகப் போகிறான்]

காட்சி 21

நேரம்: நடு நிசி.

இடம்: மச்சநாட்டுத் தெரு, உறுப்பினர் கொள்ளைக்கூட்டத்தினர்

[கொள்ளைக் கூட்டத்தினர் வீடுகளுக்குள் புகுந்து பொருள்களைக் கொள்ளையடிக்கின்றனர். பெட்டிகள்

மூட்டைகள் முதலியவைகளைத் தூக்கிக் கொண்டு வெளி யேறுகின்றனர். எதிர்த்தவர்களை ஈட்டிகொண்டு தாக்கி ஞர்கள் கொள்ளை யடித்து முடிந்ததும் ஓடிவிட்டனர். ஊர் மக்கள் அனைவரும் கூடுகினறனர் அழுது கொண்டே]

கூட்டத்தில் ஒருவன்: வாருங்கள்! வாருங்கள்! யாவரும் நமது அரசரிடம் போய் முறையிடுவோம். நாங்கள் இந்த ஊரில் இருக்கவா அல்லது இதைவிட்டுவெளியேறவா என்று அரசனிடம் கேட்போம். இந்தக் கொள்ளைக் கூட்டம் இருக்கும் வரை நாம் வாழ முடியாது. (எல்லோரும் போகின்றனர்)

காட்சி 22

நேரம்: காலை. **இடம்: அரச சபை**

(அரசர் மாமல்லரும், மந்திரிகளும், பிரதானிகளும் அமர்ந்திருக்கின்றனர், அரசர் சிம்மாதனத்தில் இருக்கிறுர் குடிமக்கள் வெளியில் கூச்சல் போடுகின்றனர்)

வாயில் காப்போன் (கூட்டத்தினரைப் பார்த்து) ஏன் எல்லோரும் திரண்டு வந்திருக்கிறீர்கள்?

கூட்டத்தில் ஒருவன்: நாங்கள் அரசரைப் பார்க்க வேணுமையா.

வா. காப்: இங்கேயே இருங்க. நான் போய் அரசரிடம் உத்திரவு கேட்டு வருகிறேன்.
(வாயில் காவலன் உள்ளே வந்து அரசனிடம் கூறுகிருன்)

வா. காப் போன்: மன்னர், மன்னு, வாழ்க. தங்கள் மலரடிகளைக் காண மக்கள் திரண்டு வந்துள்ளனர்

அர. மா: இருக்கட்டும் நான் மேல் மாடி வழியாகக் காட்சி யளிக்கிறேன் (மேல் மாடியில் வந்து குடிமக்களைப் பார்க்கிருர்)

அர. மா: மக்களே! தாங்களுக்கு ஏற்பட்ட குறைகள் யாது? கூறுக. (மக்கள் யாவரும் கத்துகின்றனர் தங்கள் இஷ்டப்படி)

அர. மா: மக்களே! அமைதியாயிருங்கள். தங்கள்குறையை தங்களில் ஒருவர் மட்டுமே சொல்லலாம் எல்லோ ரும் கத்தவேண்டாம்.

(கூட்டத்தில் ஒருவன் முன்னுல் வருகிருன்)

குடிமக்கள் மகராஜ! இன்று இரவு நம்மூரிலே கொள்ளையடிக் கப் பட்டது கொலை செய்யப்பட்டது எதிர்த்தவர் கள் ஈட்டியால் குத்தி வீழ்த்தப்பட்டனர் நகைகள் கொள்ளையடிக்கப் பட்டன வாழ இங்கு வழியேது மில்லை. வேறு எங்காவது போகவேண்டியதுதான் அரசே.

மாமல்லர்: குடிமக்களே கவலை சிறிதும் வேண்டாம். தங்கள் துயரக் கண்களைத் துடைப்பதே என் வேலை. அந்த துன்மார்க்கர்கள் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து அவர்கள் தலையை துண்டிப்பதே என் லட்சியம். அமைச்சரே! இவர்களுக்காக வேண்டிய உதவி யளித்து அனுப்பும். (பிறகு கோபமாக) பச்ச நாட்டு மாமல்லன் ஆட்சியிலே கொள்ளை.... கொலை ....அநியாயம்....... அவர்களின் அக்கிரமத்திற்கு எல்லையே இல்லையா? நெருப்புடன் விளையாடும் அநீசர்கள் யார்? அந்த ஆணவம் பிடித்தலையும் அயோக்கியர்களை எங்கிருந்தாலும் சரி, கண்டு பிடித்து அவர்கள் தலையைத் துண்டுபடுத்த வேண்டும்.... தளபதியாரே! நீர் செல்கிறீரா! அல் லது நானே செல்லட்டுமா.

தளபதி: மன்னவா! கொள்ளை என்ற பேச்சையே நாட்டில் இல்லை எனச் செய்கிறேன். தாங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். அவர்கள் எங்கிருந்தாலும் சரி அவர்கள் தலைகளை வெட்டி வீழ்த்துகிறேன்.

மந்திரி: (கள்ளப்பார்வையுடன்) அவசரப் பட்டு எதுவும் செய்யக்கூடாது, தளபதியாரே! எதற்கும் நிதா னம் வேண்டும்?

தளபதி: நிதானம்! நிதானம்! இதற்கு முடிவில்லையா! இவர்களை இத்துடன் விட்டுவைக்கக் கூடாது.

மூளையிலேயே கிள்ளி யெறிய வேண்டும்; இல்லாவிட்டால் பெரிய ஆபத்தில் வந்து முடியும்.

மாமல்லர்: இதற்கு ஆகவேண்டிய வேலைகளை முதலில் கவனியும்.

தளபதி: அபடியே! இதோ செல்லுகிறேன்.
(எல்லோரும் போனவுடன் மந்திரி ஒருவருக்கும் தெரியாமல் குகைக்கு வேகமாக குதிரையில் போகிறுன்)

காட்சி 23

நேரம்: மாலை.

[பாழடைந்த கோட்டை அங்கே கொள்ளைக்கூட்டத்தினர் யாவரும் கூட்டம் கூட்டமாக இருக்கின்றர் மந்திரி சோமநாதன் எழுந்து நின்று பேசுகிறுர்]

மந்திரி சோ: வருங்கால அரசின் அமைச்சர்களே! இன்றைய கொள்ளைக்கூட்ட வீரர்களே! நாம் அடிக்கும் கொள்ளையை இதுவரை எவரும் கண்டுபிடிக்காத வகையில் வெற்றியுடன் நடத்தி வருகிறீர்ப் நமது திட்டத்திற்கும், கொள்கைக்கும் யாராவது அட்டி சொன்னல் அவர்களை உடனே வெட்டியெறிய வேண்டும் நமது ரகசியங்கள் யாவும் தெரியாமலே இருக்கவேண்டும் ஊரில் உள்ள சோம்பேரிக் கும்பல்கள் அரசனிடம் முறையிட்டிருக்கின்றன கொள்ளைக்கூட்டத்தைப் பிடிக்கத் தளபதிக்குக் கட்டளையிட்டிருக்கிறுர் அரசர். கண்ணயர்ந்து விடாதீர்கள் வெற்றி நமக்கே நாளை வருவான் தளபதி படையுடன் நம்மைக் கைப்பற்ற ஆனல் நீங்கள் அந்த தளபதியின் தலையை மணல் மேட்டிலே புதைக்கவேண்டும். பிறகு வெற்றி மறுகணம் மன்னர் பாதாளச் சிறையிலே மந்திரி இந்தச் சோமநாதன் சிம்மாசனத்திலே நீங்கள் யாவரும் தகுதிக்குத் தக்க பதவியை அடையப் போகின்றீர்கள். நாளை மிகவும் ஜாக்கிரதையாக

இருக்க வேண்டும். நான் வருகிறேன்.

[மந்திரி போகிறார் கொள்ளைக்கூட்ட வீரர்கள் கும்மாளம் போடுகின்றனர்]

கூட்டத்தில் ஒருவன்: நம்ப எஜமான் என்ன ஒரே மகிழ்ச்சிக்கடலிலே திளைச்சுத் திரியிருரே! டேய்! சொக்கா! என்னடா முழிக்கிறே!

சொக்கன்: கூடிய சீக்கிரம் அரசராகப் போறார்ல்ல ... அது தான்.. அப்படின்னு நமக்கு மந்திரி பதவி கிடைக்கும்.

2ம் வீரன்: ஆமா உனக்கு 'மந்திப்' பதவிதான் கிடைக்கும்.

3ம் வீரன்: சொக்கா! நான் சொல்றதைக்கேளு! நமக்கு இந்த மந்திரிப் பதவியே வேண்டாம். அவங்க தொழில் லே நாம்ம இறங்கிட்டோம்னு பெரிய அயோக்கி யனாகிவிடுவோம் ஏழைகளைக் கஷ்டப்படுத்தி வரி, கிரி எல்லாம் வாங்கச் சொல்வாரு மன்னர் அப்பறம் நாம் உழைக்கனும் அதனுடைய பலனை மன்னன் அனுபவிக்கனும்.

2ம் வீரன்: என்னடா, பெரிய சீர்திருத்த வாதி மாதிரி பேசறே

3ம் வீரன்: இந்தக் காலத்திலே சீர்திருத்தவாதியாத்தான் இருக்கனும் அப்பறம் ஏழைகளின் உடலைவாட்டி இரத்தத்தை ருசி பார்க்கும் அயோக்யனாக மாறி விடவேண்டியது தான் பிறகு இந்த மந்திரிகளை ஆட்டிவைப்பாரு முடிசூடாத மன்னர்,

2ம் வீரன்: சரி, சரி, நேரமாச்சு போகலாம் வாங்கடா.

காட்சி 24

நேரம்: இரவு. உறுப்பினர், படைகள், தளபதி,
இடம்: குகை. மன்னன்.

[தளபதியின் படைகள் கொள்ளைக்கூட்டத்தை நோக்கி விரைகின்றனர் கொள்ளைக்கூட்டத்தினர் உருவிய வாளுடன்

காத்திருக்கின்றனர் அப்பொழுது தளபதி வருகிறன் கொள்ளைக்கூட்டத்தைப் பிடிக்க........ .. அவன் பின்னல் படைகள் வந்து கொண்டிருக்கின்றனர் கொள்ளைக்கூட்டத்தினருக்கும் தளபதியின் படைகளுக்கும் கடும் போர் நடக்கிறது ஒரு திருடன் தளபதியின் பின்புறமாக வந்து தளபதியின் தலையைத் தன் வாளால் வெட்டி விடுகிறன் தளபதி இறக்கிறன் அவனது படைகள் நகரை நோக்கி ஓடுகின்றனர் சில வீரர்கள் மன்னரிடம் செய்தியை அறிவிக்கின்றனர்

வீரன்: மன்னவா............

மன்னர்: யாரது? என்ன விஷயம்....

வீரன்: நம்ப தளபதி ஐயா தலையைக் கொள்ளைக் கூட்டத்தாங்க வெட்டிட்டாங்க....

மன்னர்: ஆ! அப்படியா! நம் தளபதியையா? யார்?

வீரன்: நம்ம தளபதி ஐயா சண்டை செய்துகிட்டு இருக்கிற சமயத்தில், கொள்ளைக்கூட்டத்தில் ஒருத்தன் பின்புறமாக வந்து தலையை வெட்டிட்டாங்க....

மன்னர்: இனி என்ன செய்வேன்! எனக்கு வலது கை போன்றிருந்தானே நாட்டிற்கு நல்லவனுகவும் எனக்குயிர்த் தோழனுகவும் இருந்தவனும் போய் விட்டானே அவன் இறந்ததற்குப் பதில் நான் இறந்திருக்கக் கூடாதா....... (அழுகிறர்)

வீரன்: மன்ன ...! கவலைப்படாதிங்க.
(மந்திரி வருகிறர்)

மன்னர்: மந்திரியாரே! நம்ம தளபதியைக் கொலை செய்திட்டாங்களாமே! இனி என்ன செய்வது?

மந்திரி: செய்வதற்கென்ன இருக்கிறது. வேருெரு தளபதியை நியமிக்கவேண்டும், அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுடுங்க ...

மன்னர்: சரி, சரி என் மனது சரியில்லை, நீங்கள் எல்லோரும் போகலாம்.

காட்சி 25.

[மறுநாள் ஊரெங்கும் ஒரே அமர்க்களம். பத்மாவின் பிறந்ததின விழா இன்னும் 15 தினங்கள் தான் இருக்கிறது. ஊரெங்கும் பந்தல் போடுவதும், அலங்காரம் செய்வதுமாக இருக்கின்றார்கள், எங்கே பார்த்தாலும் பத்மாவின் விழா பற்றிய பேச்சுத்தான் சிற்பிகள் இருவரும் (தினகர், சந்தர்) வருகிறார்கள் அரண்மனைக்கு மன்னனைப் பார்க்க]

தினகர்: வணக்கம் மன்னவா! சிலையின் வேலை முடிந்து விட்டது!

அரசன் மாமல்லர்: அப்படியா மிகவும் மகிழ்ச்சி. விழாவுக்கு இன்னும் 15 நாட்கள் தானிருக்கின்றன விழாவுக்குப் பின் தான் சிலைக்கேற்ற பரிசு தரலா மென்று இருக்கிறேன்.

தினகர்: தங்களிஷ்டம் மன்னவா!

குருதேவர்: அரசே! கொள்ளைக் கூட்டத்தினரின் தொந்தரவு நாட்டில் பொறுக்க முடியவில்லை என்று மக்கள் முறையிடுகிறார்கள். விழாவின் போது கொள்ளைக் கூட்டத்தினர் தொந்தரவு கொடுத்தால், விழாவுக்கு வரும் அரசர்கள் என்ன நினைப்பார்கள்? கொள்ளைக் கூட்டத்தினரை முதலில் அடக்க வேண்டும்.

அரசன்: ஆம் தளபதியையும் கொன்றுவிட்டார்கள் இனி நானே புறப்படுகிறேன்.

தினகர்: அரசே! தாங்கள் போகவேண்டாம் அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படையுங்கள் அந்தக் கயவர்களை உங்கள் காலடியில் கிடக்க வைக்கிறேன் (அரசன் சற்று ஆலோசித்தல்)

தினகர்: அரசே! முடியாது என்று எண்ணுகிறீர்களா? சில வீரர்களும், குதிரைகளும் கொடுங்கள் அந்தக் குள்ள நரிகளை உங்கள் காலடியில் விழச் செய்கிறேன். சிலை செய்பவன் தானே என்று சிந்தனை

செய்யவேண்டாம் தாங்கள் தலையசைத்தால் அந்தத் தறுதலைகள் தங்கள் காலடியில்! நிறைவேற்றட்டுமா.

அரசன்: மந்திரி! நாளை சிற்பியிடம் சில வீரர்களும், குதிரைகளும் கொடுத்து அவன் இஷ்டப்படியே விட்டுவிடுங்கள்!

மந்திரி: அப்படியே........!
(சிற்பி சென்றவுடன்)

மந்திரி: ஆள் பார்ப்பதற்கு பொடியன் மாதிரி இருக்கிறான் இவனால் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்க முடியுமா? உயிரைக் கொடுத்துவிட்டு வரப்போகிறான் வீராதிவீரர் நமது தளபதியே மாய்ந்துவிட்டார் இவன் எம்மாத்திரம்?

மன்னர்: முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் எதற்கும் முயற்சி செய்து பார்க்கட்டும்.

குருதேவர்: ஆம்! மன்னவா.

காட்சி 26.

[மந்திரி தன் கொள்ளைக் கூட்டத்தை நோக்கிச் செல்கிறான். கொள்ளைக் கூட்டத்தினர் கும்மாளம் போடுகின்றனர் தன் வீரர்களை யழைத்து]

மந்திரி: வீரர்களே! நண்பர்களே! இத்தனை நாள்வரை நாம் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் வெற்றியே கண்டு வருகிறோம். இதற்கு இடையூறாக வந்திருக்கிறான் நேற்று வந்த அந்த நாடோடிப் பயல் சிற்பி நாளை நம்மைப் பிடித்துவிடுவதாக அனுமதி பெற்றிருக்கிறான் மன்னரிடம்! அதற்குள் நாம் காரியத்தை முடித்துவிடவேண்டும். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்தச் சிற்பியைக் கட்டி இழுத்துவரவேண்டும். எதிர்ப்பவர்களைக் கண்ட துண்டமாக வெட்ட வேண்டும். நான் வருகிறேன்.

காட்சி 27.

[நடு நிசி புழுதியை வாரி யிறைத்துக்கொண்டு புறப் பட்டுப் போகிருர்கள் குதிரையில். வீடுகளில் நுழைந்து கொள்ளையடிக்கின்றனர். சிற்பியின் வீட்டை நோக்கிவிரை கின்றனர் கொள்ளையடித்து முடிந்ததும். மந்திரி சோமனுதன் முகமூடியணிந்து, சில வீரர்களுடன் சிற்பியின் வீட்டை நெருங்குகிருன் வீட்டின் முகப்பில் பெரியவர் உறங்கிக் கொண்டிருக்கிருர். சோமனுதன் வேல் கம்பால் தட்டி எழுப்புகிருன். பெரியவர் விழிக்கிருர்]

பெரி: யார் நீங்கள்?

மந்திரி: டேய் கிழட்டுப்பயலே! உடையைப் பார்த்தால் யார் என்று தெரியவில்லையா? இதுதானடா சிற்பி யின் வீடு! எங்கேயடா அந்தப் பசங்கள்?

பெரி: (கொள்ளைக்காரர்கள் என்பதைப் புரிந்துகொண்டு) நான்தான் சிற்பி வீட்டில் வேறு யாரும் இல்லீங்க

மந்திரி: என்னடா கதையளக்கிருய்? (கோபத்தால் தன் கையிலிருந்த ஈட்டியால் குத்திவிடுகிருன் பெரிய வர் மரணவலியையும் பொறுத்துக்கொண்டு)

பெரி: உள்ளே யாரும் போகக்கூடாது. (வாசற்படியில் படுத்து மறைக்கிருர்)

மந்திரி: இந்தக் கழுதையை இழுத்தெறியுங்கள் வீதியில் (வீதியில் இழுத்து எறிகின்றனர்) (உடனே உள்ளே நுழைந்து தினகரையும், சந்தரை யும் கயிற்றினல் கட்டுகின்றனர்)

தினகர்: நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? நீங்கள் யார்? (சந்தரைப் பார்த்து) தாத்தா எங்கே?

ஒருவீரன்: அவர் தாந்தாவா! இந்நேரம் எயலோகத்தை எட்டிப் பாப்பாரு.... ...

சந்தர்: (கோபத்துடன்) என்னடா சொன்னே! தாத்தா! (ஒரு வீரனின் வயிற்றில் மிதிக்கிருன் அதற்குள் சில வீரர்கள் வெளியே இழுத்து வருகின்றனர்

இருவரையும். பெரியவர் இறக்கும் தருவாயில் இருக்கிறார்)

பெரி: அப்பா! என் கண்மணிகளே! தினகர்! சந்தர்!! (இறக்கிறார் பெரியவர்)

தினகர்: உங்களை என்ன செய்தார்கள் தாத்தா இந்த ஓநாய்கள்! எங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வந்தீர்களே அதற்குக் கிடைத்த பலன் இதுதானா! உங்கள் ஆத்மா சாந்தியடைய கொன்றவர்களை உங்களுக்கு அடிமை வேலை செய்ய அங்கே அனுப்பிவைக்கிறேன் பொறுத்திருங்கள். (இருவரும் அழுகின்றனர்)

மந்திரி: உங்களுடைய அழுகை முடியவில்லையே! டேய்! இவர்கள் இருவரையும் குதிரையில் கட்டி வந்து குகையில் அடையுங்கள்! உம்...
[இருவரையும் குதிரையில் கட்டி இழுத்துச் செல்கின்றனர்]

காட்சி 28.

[மச்சநாட்டு அரணமனை அந்தப்புரத்தில் பத்மா கவலை தோய்ந்த முகத்துடன் இருக்கிறாள். அப்பொழுது அவளது தோழி சாரதா அங்கு வருகிறாள்]

பத்மா: சாரதா! நான் ஒன்று சொல்வேன்! அதன்படி செய்கிறாயா! நீ தயவுசெய்து அவரை............ அழைத்து வருகிறாயா!

சாரதா: ஓ! தாராளமாக! அழைத்து வருகிறேன்.
[சிற்பியின் வீட்டிற்கு வருகிறாள் வீடு கன்னா பின்னாவர்கக் காட்சியளிக்கிறது]

சாரதா: சிற்பியாரே! ஓ! சிற்பியாரே!! கூப்பிடுறேன் காது கேக்கலே. காது என்ன செவிடா?

[அம்மா....மோவ்....என்ற சப்தம் கொல்லைப் பக்கத்திலிருந்து கேட்கிறது. அங்கு இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையுடன் போகிறாள். பசு ஒன்று

தலையை ஆட்டிக்கொண்டு அவளை வரவேற்கிறது இல்லையென்ற முடிவுடன் வெளியில் வருகிருள்; பக்கத்து வீட்டுத் திண்ணையில் ஒருவன் இருக்கிருன்]

சாரதா: ஐயா....ஐயா!....

ஆள்: என்னம்மா? என்ன வேண்டும்?

சாரதா: ஒன்றுமில்லை; பக்கத்து வீட்டிலே இருந்தாருல்ல சிற்பி; அவர் எங்கே காணவில்லை? வீடெல்லாம் கன்னு பின்னுவாக இருக்கிறதே!

ஆள்: பாவம்! நேற்றுக் கொள்ளைக்காரங்க வந்து கொள்ளையடிச்சிட்டாங்க! அவங்க வீட்டிலே அவங்களையும் அடித்து இழுத்துக்கிட்டுப் போயிட்டாங்கம்மா!

சாரதா: ஆ! அப்படியா!
(போகிருள்)

காட்சி 29

[சாரதா வருகிருள். பத்மா பஞ்சணையில் அமர்ந்திருக்கிருள்.]

சாரதா: பத்மா! ... பத்மா!!

பத்மா: (பதட்டத்துடன்) என்ன சாரதா? என்ன நடந்தது

சாரதா: (நீர்மல்க) சொல்ல மனம் இடங் கொடுக்கவில்லை! .... பத்மா.... கொள்ளைக்காரங்க........அவங்க........ ரெண்டு.... பேரையும்....கட்டி இழுத்துக்கிட்டுப் போயிட்டாங்கம்மா........

பத்மா: ஆ! (அலறியபடி தான் தெய்வமாக வணங்கும் கண்ணபிரான் இருக்குமிடத்தை நோக்கி ஓடுகிருள் கண்ணபிரான் சிலையைக் கையில் எடுத்துக் கொண்டு) ஏ! தெய்வமே! கண்ணபிரானே!! உனக்குக் கண் இல்லையா! நானும் காதலரும் சந்தோஷமாக இருப்பது பிடிக்கவில்லையா உனக்கு!

கொள்ளைக்காரன் கையில் சிக்கிவிட்டாரே காதலர் தினமும் உனக்குப் பாலும் பழமும் படைத்து வணங்கினேனே! அதன் பலனா இது? உன்னைத் தெய்வமாக மதித்து வணங்கினேனே! அபலையின் கண்ணீரைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருப்பது தான் உன் செயலா? நாட்டிலே நடமாடிக்கொண்டிருக்கிறாயே! கண்ணிலே கருத்தைக் கவருவது போல் இருக்கிறாயே! அந்தக் கண்ணால் அல்லவா பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கிறாய்; என் உள்ளத்திலே கவலையாக இருக்கும் போது, உன் உதட்டிலே சிரிப்பாகவா இருக்கவேண்டும். நீ பெண்களின் சேலையைக் களவாடிய கள்வனல்லவா? என் காதலனையும் நீதான் திருடியிருப்பாய்! சொல் எங்கே என் காதலர்?....சொல்....சொல்லாவிட்டால் இப்பொழுதே உன்னைத் தூள் தூளாக்குகிறேன் பார்!

(சிலையைத் தூக்கியெறிய ஓங்குகிறாள். சாரதா தடுக்கிறாள்)

பத்மா: நீ பேசாமல் இரு சாரதா! எல்லாம் எனக்குத் தெரியும்.

சாரதா: எல்லாம் தெரிந்த நீங்களா இப்படிச் செய்கிறீர்கள்; இந்த அறிவு அப்பொழுது இருந்திருக்க வேண்டும். நீங்கள் படும் அவஸ்தை என்னம்மா தெரியும் அந்தக் கல்லின் உருவிலே உள்ள சிலைக்கு பழங்காலத்தில் இந்தத் தெய்வங்களை எவனோ ஒரு சோம்பேறி படைத்தான் அதுவும் ஒன்றுக்கு பலநாமங்கள்! அப்படிப்பட்ட சோம்பேறிகளுக்கு இடம் கொடுத்துவிட்டார்கள் இந்தக் காலத்திலும் சோம்பேறிகள் வாழ்வதற்கெனவே உற்பத்தியாகியிருக்கும் இந்தச் சிலைக்கு என்னம்மா தெரியும்! அதைப்போய்த் திட்டுறீங்களே! அது என்னம்மா பதில் கூறும்!

பத்மா: சரி, சரி தனிமையில் நான் இருக்க விரும்புகிறேன் நீ போ.

காட்சி 30

நேரம்: மாலை. உறுப்பினர்: சந்தர், தினகர்

இடம்: குகை.

தினகர்: நண்பா! பட்ட புண்ணிலே படும் கெட்ட குடியே கெடும் என்று பழமொழி சொல்லுவார்கள் அதே போல் நாம் காலம் எல்லாம் இந்தக் கயவர்களிடம் சிக்கிக் கொண்டால் நம் நாட்டை எப்படி அடைய முடியும்? பெற்றோர்கள் என்னபாடு படுகின்றார்களோ?

சந்தர்: ஏன் சிறுபிள்ளை மாதிரி கவலை கொள்கிறாய்? எப்படியும் இங்கிருந்து தப்பிவிடுவோம்.
(எதிரேயுள்ள நடராஜர் சிலையைப் பார்த்து ஆத்திரங் கொள்கிறான் தினகர்)

தினகர்: எப்படி முடியும்? இந்தச் சதிகாரத் தெய்வங்களெல்லாம் கொள்ளையடிப்பவன் பக்கம் இருந்து கொக்கரிக்கும் போது....? (நடராஜர் சிலையைப் பார்த்து) உன்னையே கண்கண்ட தெய்வமாக வைத்து வணங்கினேன்.... நீ பக்தனுக்கு அளிக்கும் பரிசு இதுதானா? தான் பெற்ற பிள்ளை தன் தகப்பனை அடிப்பதுபோல் அல்லவா இருக்கிறது உன் செய்கை. எனது கைகளைப் பார் உளி பிடித்து, உளி பிடித்து என்ன நிலையில் இருக்கிறதென்பதைப் பார்! எப்படிப் பார்க்க முடியும் உன்னால்! கண்ணிருந்தும் குருடன் போல் அல்லவா இருக்கிறாய்! ஏன் மௌனமாக இருக்கிறாய்?

சந்தர்: அது எப்படியப்பா பேசும்!.... அது பேசாது! வெறும் சிலைதான்!....அதுவும் கற்சிலை....!

தினகர்: சிலை! சிலை!! உங்களை எல்லாம் சாமி என்று உருவாக்கிப் பெயர் வைத்துப் பெருமையுடன் மக்கள் கொண்டாடும்படி செய்த எங்களுக்கா தண்டனை! சீ சீ.... இவைகளை யெல்லாம் சுக்கு நூறாக உடைத்தெறிய வேண்டும்! இவைகள் இருக்கும் இடத்

தையே நல்ல வேலைக்குப் பயன்படுத்தவேண்டும்! ஏழையின் வீட்டிலே பால் இல்லை என்று சிசு கதறுகிறது. இந்தக் கற்சிலைக்குப் பாலும், பழமும், பஞ்சாமிர்தமும், பன்னீரும், அஹ்....ஹா.. இன்னும் எத்தனையோ வகையான அமிர்தங்கள்! தேங்காயாம்! பழமாம்!! தட்சிணையாம்!!! சூடமாம்!!!! இன்னும் எத்தனையோ வகைகளைக் கண்டுபிடிக்காமற் போனார்களே அவர்கட்கு நம் நன்றி! ஹஹ்.. ஹஹ்... ஹா. ஆடும் தெய்வமாம் அதற்குப் பெயர் நடராஜனும்!! வேல் பிடிக்கும் சாமியாம்! அவன் பெயர் முருகனும்! இது மட்டுமல்ல இன்னும் எத்தனையோ! இப்படிப்பட்ட தெய்வங்களெல்லாம் உண்டாக்கியிருக்கிறார்களே அந்தக் கபோதிகள்! அவர்களைச் சொல்ல வேண்டும். உம்....எத்தனை நாளைக்குத்தான் உங்கள் அட்டகாசமோ!

சந்தர்: தினகர்! ஏன் வீணாகப் பிதற்றுகின்றாய்! எந்த மடையன் இந்தக் கற்சிலைக்குச் சாமி என்று பெயர் வைத்தானோ! அவனே இன்று அதை மறந்து விடுகிறான்! அப்படியிருக்கச் சாமி என்ற வார்த்தையை உன் வாயால் சொல்லாதே! அபச்சாரம்! அபச்சாரம்!! ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி யானைக்குட்டிபோல் படுத்து ஏழடுக்கு மாளிகைகளிலே வசிக்கின்றானே!! அவன் வைத்த பெயர்தானப்பா இந்தக் கல்லுக்குச் சாமி என்று ....எது கடவுள்! சிந்தித்துப்பார் நண்பா! சிந்தித்துப்பார்! சிந்தித்துச் செவ்வனே சீர்தூக்கிப்பார்! உளுத்தர்கள் வைத்தபெயர் தானப்பா.......சாமி என்று! வளுத்தனை விரட்டியடிக்கப் பாடுபடுகின்றார்களே நமது தோழர்கள்! அவர்கள் வைத்தபெயர் என்ன பெயர்தெரியுமா கடவுளல்ல கல்லில்! அறிவுக் கடவுள்! நமது அறிவு தானப்பா கடவுள்! அறிவு! அறிவு!! அறிவு!!! நமக்குவேண்டியது அறிவு என்னும் கடவுளப்பா! உளுத்தனின்

கடவுள் உபயோகப்படாது அன்பரே! அதன் மூளைக்குக் கூர்-மழுங்கிவிட்டது! நாம் முயற்சி செய்தால் அந்த மழுங்கலை சாணை என்னும் நம் அறிவுக் கடவுள் மூலம் தீட்டலாம்! எப்பொழுதாவது தெரிந்துகொண்டாயா எது கடவுளென்று!

தினகர்: தெரிந்து கொண்டேன் நண்பரே! தெரிந்து கொண்டேன் எது கடவுளென்று!

சந்தர்: சரி! காலம் கடந்துவிட்டது நாம் இனிச் சிற்பியின் உருவிலே இருக்கவேண்டாம்! சிங்கமெனச் சீறி எழுந்திடுவோம்!

தினகர்: நயவஞ்சகத்தால் நாடுபிடிக்கும் துரோகிகளையும், கொள்ளை அடித்துத்திரியும் இந்தக் கொள்ளி வாய்ப்பேய்களின் கொட்டத்தையும் ஒடுக்காவிடில் நம் போன்ற இளம் வாலிபர்கள் நாட்டிலே இருந்து பலன் இல்லை. சரி இதனின்றும் தப்புவதற்கு வழி! (இருவரும் சிந்திக்கின்றனர்.)

சந்தர்: நான் ஒரு யோசனை சொல்லட்டுமா!
(மெதுவாகத் தினகரிடம் சொல்லல்)
(தினகரின் கையிலே கட்டப்பட்டிருக்கும் கயிற்றை சந்தர் தன் வாயால் அவிழ்க்கிறான். சந்தரின் கட்டை தினகர் அவிழ்த்து விடுகிறான். இருவரும் சேர்ந்து தப்பிக்கும் வழியைப் பார்க்கின்றனர். எங்கும் வெடித்ததும், மரம் முளைத்ததுமான சுவர்களாகவே தென்படுகின்றன. தொட்டால் விழுந்துவிடும் நிலையில் இருக்கிறது. யாரும் இருக்கின்றனரா என்று பார்த்துக்கொண்டே இருவரும் வெளிவாசலருகே வந்து விடுகின்றனர். வெளியிலிருந்த வீரர்கள் இவர்களைக் கண்டதும் ஓடிவருகின்றனர். காவலாளிகளைக் கால் இடறி விழச் செய்கின்றனர். காவலாளிகள் கீழே விழுந்ததும் சந்தரும், தினகரும் காவலாளிகளின் ஈட்டிகளை எடுத்துக்கொள்கின்றனர். இருவரும் வெகு வேகமாகச் சண்டை செய்து வீரர்களைக் கொன்று

குவிக்கின்றனர். சந்தர் சில வீரர்களுடன் சண்டை செய்து கொண்டிருக்கிறன். அவனுடைய ஈட்டி கீழே விழுந்துவிடுகிறது. எல்லோரும் சேர்ந்து சந்தரைப் பிடித்துவிடுகின்றனர். தினகர் சந்தரைக் காப்பாற்றுகிறன். வெளியே இருவரும் வந்து குதிரையில் ஏறிக்கொண்டு சென்று விடுகின்றனர்.)

(அப்பொழுது வேறுபக்கமாகத் தன் குகைக்கு வருகிறன் மந்திரி சோமனதன். அங்கிருந்த வீரர்கள் ஒருவருக்கொருவர் சண்டை செய்து கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிடுகிறன்.

மந்திரி: டேய்! ஏன் சண்டை செய்கிறீர்கள்?

அனைவரும்: அந்த இரண்டு சிற்பிகளும் தப்பி ஓடிவிட்டார்கள்.

மந்திரி: ஆ! தப்பிவிட்டார்களா! போங்கடா சோம்பேறி பசங்களா! தடிப் பிண்டங்கள் மாதிரி இருக்கீங்க வெட்கமில்லை சொல்வதற்கு! எந்தப்பக்கம் போய் இருக்கிறர்கள் தெரியுமா!

ஒருவன்: இந்தப்பக்கம் தாங்க!

மந்திரி: எங்கிருந்தாலும் பிடித்திழுத்து வாருங்கள். சரி! உடனே புறப்படுங்கள்; நானும் வருகிறேன்........ உம்........ (மந்திரி உட்பட எல்லோரும் விரைகின்றனர்).

[தினகரும், சந்தரும் வெகு தொலைவில் சென்று கொண்டிருக்கின்றனர். மௌனமாகச் செல்கின்றனர். அப்போது பின்னல் குதிரைகளின் குளம்படிகள் கேட்கிறது. இருவரும் பக்கத்திலிருந்த புதருக்குள் குதிரைகளை ஓட்டி நிறுத்திவிட்டு, மரத்தின்மேல் ஏறிக்கொள்கின்றனர். நிறுத்தப் பட்ட குதிரைகள், குதிரைகளின் சத்தம் கேட்டு ஓடுகின்றன. இரவு ஆகையால் மந்திரி அந்தக் குதிரைகளைப் பின் தொடர்ந்து, ஆளைக் காணுது ஏமாறுகிறன்.

மந்திரி: தப்பிவிட்டார்கள்! அந்தப் பொடியர்கள்! எங்கிருந்தாலும் சரி, நான்கு திக்குகளிலும் சென்று தேடுங்கள்.

[யாவரும் போகின்றனர். தினகர், சந்சர் மரத்தினின்றும் இறங்கித் தப்பித்துச் செல்கின்றனர்].

காட்சி 31.

[அந்தப்புரம்]

[நடுநிசி. பத்மா தூக்கம் வராமல் வருத்தத்துடன் இருக்கிருள். சாரதா அவளைத் தேற்றுகிருள்.]

பத்மா: சாரதா! அவர் இல்லாததிலிருந்து எல்லாமே சூன்யமாகிவிட்டது. எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை.

சாரதா: உங்களுக்கு மட்டுமா? எனக்கும் தான்!

பத்மா: இத்தனை நாள் நம்மைச் சந்திக்க முடியாமல் அவர்கள் மனம் என்ன பாடு படுகிறதோ? எந்தச் சண்டாளப் பாவிகளோ நம் காதலர்களை நம்மிடமிருந்து பிரித்து விட்டார்கள்! சாரதா! உம்........ எனக்கொரு யோசனை தோனறுகிறதடி.....

சாரதா: என்னம்மா! அந்த யோசனை?

பத்மா: அந்தச் சண்டாளப்பாவி தளபதின்னுதான் நினைக்கிறேன். வேறு யாரும் இந்த மாதிரி செய்ய மாட்டார்கள். நான் என் காதலரிடம் அன்பாயிருப்பது அந்தச் சண்டாளப் பாவி தளபதிக்குப் பிடிக்கவில்லை. அன்று வந்து என்னிடம் என்னைக் கல்யாணம் செய்துகொள்! இல்லாவிடில் உன் காதலன் தலையைக் கண்ட துண்டமாக வெட்டிவிடுவேன் என்று பயமுறித்தினுன். நீ என்ன நினைக்கிருய்.

சாரதா: அப்படி இருக்காதம்மா! தளபதி கொள்ளைக் கூட்டத்தாரைப் பிடிக்கப் போயிருக்கார். அதுக்கப்புறம் என்ன ஆச்சுன்னு தெரியலெ.... நான்தான்

அந்தப்புரத்தை விட்டு வெளியே எங்கும் போற தில்லையே!

[கதவைத் தட்டும் ஒலி கேட்கிறது]

ஒருகுரல்:- அம்மா!......................அம்மா!

பத்மா: யாரடி!.......................என்ன செய்தி?

ஒருகுரல்: கதவைத் திறங்கள். ஒரு முக்கியசெய்தி!

பத்மா: சாரதா! கதவைத் திற!
(கதவைத்திறக்க, தோழி வருகிருள்)

தோழி: அம்மா! நம்ம தளபதி ஐயாவை கொள்ளைக் காரங்க கொன்னுட்டாங்களாம்

பத்மா: தொலைஞ்சது சனியன்! ......

சாரதா: என்னம்மா............... !

பத்மா: அன்னிக்கு என் காதலர் தலையைக் கொண்டு வரேன்னு சொல்லிட்டுப் போனுனே. இன்னிக்கு அவன தலையே போச்சு. தன்வினை தன்னைச்சுடும்

பத்மா: நான் ஒன்னு சொல்கிறேன்!,...கேட்கிறியா....

சாரதா: என்றைக்குத்தான் நீங்கள் சொல்வதைத் தட்டி யிருக்கிறேன் காதலரைக் கண்டுபிடிக்க வேண்டும் அவ்வளவுதானே....இது என்ன பிரமாதமான வேலையோ.......... ?

பத்மா: நான் நினைத்ததைச் சொல்லிவிட்டாயே! சரி நாளைக்காலையில் அவர்கள் வீட்டுக்கு வந்து விட்டார்களா? என்பதைப் பார்த்துவிட்டு வா.

சாரதா: உம்........சரி........பத்மா........

[இருவரும் படுத்துறங்கப் போகிருர்கள். சாரதா வுக்குத் தூக்கம் வரவில்லை.... சந்தரின் எண்ணம் அவளை வாட்டியது. சந்தரைப் பார்க்க ஆண் உடை அணிந்து கொள்கிருள் பத்மாவுக்குத் தெரி யாமல்.

காட்சி 32.

[தப்பிச்சென்ற சந்தர், தினகர் இருவரும் தங்கள் வீட்டை யடைகின்றனர். களைப்பு மேலிட்டபடியால இருவரும் படுத்துக்கொள்கின்றனர்.]

தினகர்: (படுத்தபடியே) ஒருவழியாகத் தப்பிவிட்டோம்.

சந்தர்: மற்றவைகளைப் பின்பு கவனிக்கலாம், முதலில் தூங்கப்பா.

[சந்தர், சாரதாவை நினைத்தபடியே தூங்கிவிட்டான் தினகர் கண்முன் பத்மாவின் உருவம் தோன்றியது. அவளைக்காண்பதற்கு ஆர்வம் கொண்டவனாய், திருடன் உடையில் புறப்படுகிறான்.]

[நடுநிசி. வெண்ணிலவு காய்ந்து கொண்டிருக்கிறது. ஒருவிதப் புத்துணர்ச்சியால் தூண்டப்பட்டவன் போல் நடந்து கொண்டே அரண்மனையை அடைந்தான் தினகர். அரண்மனை மதிற்சுவற்றை ஒரு மரத்தினுதவியால் கடந்து அந்தப்புரத்தில் பத்மாவின் அறையில் குதித்தான் பத்மாவிடம் நெருங்கி அவள் போர்த்தியிருந்த போர்வையை அகற்றுகிறான். பத்மா திடுக்கிட்டு ....]

தினகர்: சத்தம் போடாதே! போட்டால்....................

பத்மா: ஆ! திருடன்! திருடன்!!

[தினகர் பத்மாவின் வாயைப் பொத்துகிறான்; பத்மா தினகர் கையைக் கடித்துவிடுகிறாள் தினகர் சிரித்தபடியே ....]

தினகர்: ஆம் பத்மா! திருடன் தான்! உன் பவளவாயால் கடியுண்ட திருடன் தான்! உன் சிவந்த மேனியிலே விருப்பங்கொண்ட திருடன் தான்! உன் புன்னகையிலே புதையுண்ட திருடன் தான்! கொள்ளைக்காரர்கள் கைக்குள் அகப்பட்டும் கொடியவர் களிடமிருந்து தப்பித்து உன் இதயச்

சிறையிலே அடைபட ஓடிவந்த நிருடன் தான்! இதோபார் (முகமூடியைக் கழட்டுகிருன்)

பத்மா: ஆ! அத்தான்! நீங்களா!

தினகர்: ஆம்! அன்பே! ஆம் நான்தான்! உன் உள்ளத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் உன் காதலன் தான்!

பத்மா: என் அத்தான்! இது என்ன வேடம்? நான் பயந்தே போய்விட்டேன்.

தினகர்: உன்னைக் கான நேரிடையாக அந்தப்புரத்திற்கு வரமுடியுமா? அதனுல் தான் இந்த வேடத்தில் வந்தேன்.

பத்மா: மேல் மாடிக்குப் போகலாம்! வாருங்கள் அத்தான்! [மேல் மாடிக்குச் சென்று இருவரும் ஒரு மேடையின் மீது அமர்கின்றனர். பத்மா தினகரின் மார்பில் சாய்ந்து கொண்டே.......]

பத்மா: அத்தான்! அதோ! பார்த்தீர்களா நிலவை; நமது காதல் விழாவில் கலந்துகொள்ள முன் வந்திருக்கிறது.

தினகர்: ஆம் பத்மா! இல்லை!........ இல்லை............ அதோ மறைந்து விட்டது.

பத்மா: ஏன் அத்தான்?

தினகர்: (பத்மாவின் முகத்தைப் பிடித்து) மண்ணிலே தவழும் இந்த முழுமதிக்குதான் ஈடு இல்லை என்று நாணி மேகத்தில் மறைந்து கொண்டது அதோ பார்! அந்த நட்சத்திரத்தை! உன் கண்களின் ஒளிக்கு நாங்கள் ஈடு இல்லை என்று கூறுகின்றது இதோ பார்! ரோஜாவை! (அவள் கூந்தலிலிருந்து வாடிய ரோஜாவை எடுத்து) உன்னழகால் இது வாடிவிட்டது. நீ மட்டும் சிரித்தால் போதும்!....

பத்மா: நீங்கள் மட்டும் சாதாரண மனிதரல்ல அத்தான்! நிலவைத்தழுவும் வானம் நட்சத்திரத்தை மறைத்

துக்கொள்ளும் கார்மேகம். இந்த ரோஜாவின் தேனைப்பருகும் வண்டு.

தினகர்: பத்மா! உண்மையிலேயே உன்னைக் கண்டதுமுதல் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன் நான் பார்க்கும் இடமெல்லாம் உனது திருஉருவம்தான் எனக்குக் காட்சியளிக்கின்றது. என்னை மறந்துவிட மாட்டாயே நீ!

பத்மா: அத்தான் உங்களை மறப்பதா! என் இதயத்தையே தங்களிடம் ஒப்படைத்து விட்டேனே.

தினகர்: பத்மா நான் ஏழைச் சிற்பி.

பத்மா: இல்லை என் இதய ரோஜா........

தினகர்: சரி நேரமாகிவிட்டது........

பத்மா: அதுசரி. உங்கள் அன்புவெள்ளத்தில் ஒன்று மறந்தேபோய்விட்டேன். இத்தனை நாளாக எங்கே போயிருந்தீர்கள்?

தினகர்: அதையேன் கேட்கிறாய் பத்மா! நாம் அன்புடன் வாழ்வது விதிக்குப் பொறுக்கவில்லை. சதிசெய்து விட்டது. பிரிந்தோம். நீ ஓரிடத்திலே! நான் வேறிடத்திலே! ஆனால் ஒன்றுபட்ட உள்ளத்துடன் வண்டு உன்னைத்தேடி வந்தது. ஆனால் மலர் எனைத்தேடிக்கொண்டேயிருந்தது. புத்துணர்ச்சி பெற்றேன். எனது நண்பரால் தேடி வந்தேன். இந்த தேவியின் அருள் கிட்டுமோ, கிட்டாதோ என்ற நோக்கத்துடன். வெற்றிபெற்றேன் என் இதயராணியே! சென்றுவரட்டுமா! எனது நண்பர் என்னைக் காணாமல் ஏங்கிக்கொண்டிருப்பார். உனக்கு அடுத்தபடியாக....

பத்மா: உம்........நாளை

தினகர்: ...பூங்காவிலே........

பத்மா: ஆம் அத்தான்........

(இருவரும் பிரிகின்றனர்)

காட்சி 33

[அந்தப்புரத்திலிருந்து ஆண் உடையில் புறப்பட்ட சாரதா, சிற்பியின் வீட்டுப் புழக்கடைப் புறமாக உள்ளே நுழைகிருள். ஆனல் அங்கிருந்த படுக்கைகளில் ஒன்று விரித்தபடியிருக்க அதில் படுத்துக்கொண்டு தன் காதலன் தன்னைப் பார்க்கவேண்டுமென்பதற்காகப் பக்கத்திலிருந்த கூஜாவைத் தட்டிவிட்டுச் செருமுகிருள். சந்தர் எழுந்து விளக்கை யேற்றுகிருன். தன் நண்பன் தினகர் படுத்திருப்பதாக நினைத்து, தட்டி எழுப்புகிருன்.]

சந்தர்: தினகர் ஏன் அடிக்கடி இருமுகிருய்? இடம் ஒத்துக் கொள்ளவில்லையா? எழுந்திருப்பா.

[எழுப்புகிருன். சந்தர் கைபட்டதும் சாரதா துள்ளி யெழுகிருள்.]

சந்தர்: ஆ! நீயாரடா? எதையாவது சுருட்டிக்கிட்டுப் போகலாம்னு வந்தியா? சொல் (அதட்டுகிருன்)

சாரதா: ஆமா! ஆமா! முன்னலேயே சுருட்டியாச்சு. [என்று கீழே குனிகிருள் தலைப்பாகை கீழே விழுகிறது.]

சந்தர்: ஆ! நீயா! அர்த்த இராத்திரியில்........

சாரதா: ஆம்! உங்களைக் காணத்தான்........ [பேசிக்கொண்டே இருவரும் தோட்டத்திற்குச் செல்கின்றனர்.]

சந்தர்: ஆமா! நீ எப்படி வந்தே?

சாரதா: மீன் குஞ்சுக்கு நீந்தவா கற்றுக்கொடுக்கனும்?

சந்தர்: சரி! உன்னை நண்பன் என்று நினைத்து எழுப்பும்போது ஏன் துள்ளிக் குதித்தாய்?

சாரதா: நீங்கள் எழுப்புவீர்கள் என்ற எண்ணத்துடன் தான் நான் சத்தம்போடாமல் இருந்தேன். நான் தான் அந்தக்கூஜாவைத் தட்டிவிட்டேன் உடனே நீங்கள் எழுந்துவிட்டீர்கள்....

சந்தர்: பெரிய குறும்புக்காரியல்லவா நீ!

சாரதா: உங்களைவிடவா.........அதுசரி! உங்களை யாரோ கட்டி இழுத்துக்கிட்டுப் போனுங்களாமே. உண்மையா.......?

சந்தர்: ஆம் சாரதா! விதி சதிசெய்துவிட்டது. மதி என்னும் கருவியைக்கொண்டு தப்பினேன். சரி நேரமாகி விட்டது.

சாரதா: ஆம்! நேரமாகிவிட்டது. வருகிறேன்.

[இருவரும் பிரிந்தனர் சந்தர் தன் நண்பனைக் காணுமல் படுத்துக்கொள்கிருன் தூக்கம் வர மறுக்கிறது]

காட்சி 34

[வீட்டிற்கு வரும் வழியில் தினகரும் சாரதாவும் எதிர் பாராத விதமாக முட்டிக்கொள்கின்றனர் ஒருவரையொருவர் பார்த்துப் பயப்படுகின்றனர். தினகர் உணர்ந்துகொண்டு]

தினகர்: யாரடா நீ! எங்கே வந்தே?

சாரதா: (பயத்தால்) நான்.........நான்...சிற்பியின் வீட்டிலிருந்து.........வருகிறேன்.

தினகர்: அங்கே என்னடா வேலே உனக்கு?

சாரதா: சிற்பியின் நண்பரைச் சந்திக்கவந்தேன்.

[பயத்தினுல் சாரதாவின் ஒட்டு மீசை கீழே விழுகின்றது அவள் சாரதா என்பதை உணர்ந்து தலைப்பாகையைத் தட்டிவிடுகிருன்]

தினகர்: (தனக்குள்) நண்பனின் காதலியா!........
(அவளிடம்) எங்கே அந்தச் சிற்பி? உண்மையை சொல் .....உம் ....

சாரதா: ஊஹூம் ....நான் சொல்லமுடியாது. என்னை என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள்........

தினகர்: பேஷ்! உன்னைப்போன்ற நல்லவர்களைப் பார்ப்பது கஷ்டம்........நான் யார் தெரியுமா? நான்தான்.....
(முகமூடியை எடுக்கிருன்)

சாரதா: ஆ! நீங்களா! அண்ணா! இப்பொழுதல்லவா தெரிகிறது. எங்கிருந்து வருகிறீர்கள் தங்கள் நண்பரை தனியே விட்டுவிட்டு?

தினகர்: போகவேண்டிய இடத்திற்குத்தான்....உம் நேரமாகிவிட்டது. அரண்மனைக்குப் போய்விடுவாயா தனிமையில்? அல்லது துணைக்கு வரட்டுமா?

சாரதா: வேண்டாம். இந்த ஆண் உடையில் இருக்கும் போது என்ன பயம்! போய் வருகிறேன்!

[போகிறாள். அவளுடைய வீரத்தைச் சோதனை செய்வதற்காக ஒரு பயங்கர ஒலி யெழுப்புகிறான் தினகர். ஒலியைக் கேட்ட சாரதா பயந்து 'அண்ணா' 'அண்ணா' என்று கூவிக்கொண்டு தினகரிடம் வருகிறாள்.]

தினகர்: பயப்படாதே சாரதா! நான் உன்னைச் சோதனை செய்வதற்காகவே இந்தமாதிரி பயங்கரச் சத்தமிட்டேன் சூரப்புலி என்று சொன்னாய் சிறிது நேரத்திற்குமுன் பயந்துவிட்டாயே இப்பொழுது.

சாரதா: என்ன இருந்தாலும் நான் பெண்தானே. உங்கள் விளையாட்டுப் போகவில்லை 'அண்ணா'

தினகர்: சரி! சரி!! போய்வா! நான் போகிறேன்.

[இருவரும் போகின்றனர்]

காட்சி 35.

[சிற்பியின் வீட்டில் தூங்குவதுபோல் சந்தர் பாசாங்கு செய்கிறான். தினகர் முகமூடியுடன் வருகிறான். கதவைத் தட்டுகிறான்.]

சந்தர்: என்னடா இது? மூட்டைப்பூச்சி வேறு 'நறுக்' நறுக்னு கடிக்குது இதுகளுக்கு விருந்து வைக்க நம் உடம்பிலுள்ள இரத்தம் போருது போலிருக்கே இங்கே என்னடான்னா கதவைத் தடதடன்னு தட்டுராங்க சரி திறந்து தொலைப்போம்.

[கதவைத் திறக்கிறான். தினகர் முகமூடியுடன் வருகிறான். சந்தர் திடுக்கிடல்]

தினகர்: நில் அப்படியே!

சந்தர்: இதோ வருகிறேன் நில்! உனக்கு இப்பொழுதே தண்டனை தருகிறேன்! அன்று நள்ளிரவில் பிடித்துக்கொண்டு போனீர்களே அதுமாதிரி இன்றும் பிடித்துவிடலாம் என்ற எண்ணமோ? விழித்துவிட்டான்டா இந்தச் சந்தர்!

தினகர்: என்னடா உளறுகிறாய்! வீரமாகப் பேசினால் இத் திருடன் ஓடிவிடுவான் என்று நினைக்கிறாயா? ஓட மாட்டேன் பயப்படாதே!

சந்தர்: (வாளை எடுத்துககொண்டு வந்து) இதோ பார் கண்ட துண்ட மாக்குகிறேன். (வாளை வீசுதல்)

தினகர்: அவ்வளவு சிரமம் உனக்கு வைக்கமாட்டேன் நண்பா!

சந்தர்: (திகைத்து) என்னப்பா! இந்த வேடம் எதற்கு?

தினகர்: இளவரசியைப் பார்க்க நாமெல்லாம் இப்படித் தானே போயாகவேண்டும். வேறு வழி எது? அதுசரி உன் காதலியைப் பார்த்தாயா?

சந்தர்: ஒருவரையும் பார்க்கவில்லையப்பா! தூங்கிவிழித்து முதலில் உன்னைத்தான் பார்க்கிறேன்!

தினகர்: யார் கிட்டே கதையளக்கிறாய்! எல்லாவற்றையும் உன் இராணி என்னிடம் சொல்லிவிட்டாள்.

சந்தர்: அடிபாவி! பெரிய கள்ளியாயிருப்பாள் போல் இருக்கு; சரி தூங்கப்பா.
[தூங்குகிறார்கள் இருவரும்]

காட்சி 36.

[தினகரும் சந்தரும் அரண்மனை நோக்கி விரைகின்றனர், தாங்கள் கொள்ளைக் கூட்டத்தைப் பிடித்துவிட்டோம் என்ற நோக்கத்துடன்.]

[அரண்மனையில்]

மன்னர்: கொள்ளைக் கூட்டத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையே ஒருவனல் கூட, சிற்பியும் சென்றுன். இன்னும் அவனைக் காணேம்!

மந்திரி: தளபதியினுல் சாதிக்க முடியாததை இச் சிறுவனு கண்டுபிடிக்க முடியும்?

[தினகர், சந்தர் வருதல்]

தினகர்: கண்டுபிடித்துவிட்டேன் மன்னு! கண்டுபிடித்து விட்டேன்! இரண்டுநாட்களுக்குமுன் நான் வீட்டிலிருக்கும் பொழுது எல்லோரும் சூழ்ந்து பிடித்துக்கொண்டுபோய் குகையில் கட்டிப்போட்டு விட்டார்கள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விட்டேன்.

மந்திரி: ஆ! அப்படியா!

மன்னர்: சரி! இன்றிரவே நம் படைகளைத் திரட்டிக் கொண்டுபோய் அந்தக் கயவர்களை இழுத்து வாருங்கள்.

தினகர்: உத்திரவு மன்னு! (போகிருர்கள்)

காட்சி 37.

[பாழடைந்த கோட்டை. ஒவ்வொரு வீரர்களும் சிற்பியிடம் தோல்வியுற்றதை நினைத்து ஈட்டிகளையும் வாட்களையும் தீட்டிக்கொண்டிருக்கின்றனர்.]

1ம் வீரன்: (ஈட்டியையும் எலுமிச்சம் பழத்தையும் காட்டி) இன்றைக்குமட்டும் அந்தச் சிற்பி கிடைத்தால் ஒரே குத்தில் எலுமிச்சையைக் குததுவதுபோல் குத்திக் கொன்றுவிடுவேன். (எலும்பிச்சையைக்) குத்துதல்)

2ம் வீரன்: பார் வாளின் கூர்மையை! அந்தப் பயல் அகப்பட்டால், வாழைக்காயைச் சீவுவதுபோல் சீவி விடுவேன் (வாழைக்காயைச் சீவுதல்)

3ம் வீரன்: (ஒரு கண் பொட்டையன்) என் கண்ணில் அந்தப் பொடியன் அகப்பட்டால் அவன் இருகண்களையும் குத்திவிடுவேன் (ஒரு பொம்மையைக் காண்பித்து இரு கண்களையும் குத்தி விடுதல்)

நொண்டி: அந்தத் தடியன் அகப்பட்டால் அவன் இரண்டு கால்களையும் வெட்டி எறிவேன் (இரண்டு கால்களையும் தூக்கும் பொழுது கீழே விழுகிறான் எல்லோரும் கொல்லென்று சிரிக்கிறார்கள்)

[மந்திரி சோமனாதன் முகமூடி அணிந்துகொண்டு அங்கு வருகிறான். தன்னுடைய உடையை ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு முகமூடியை எடுத்து அணிந்துகொண்டு உள்ளே நுழைகிறான்]

மந்திரி: எல்லோரும் தயார்தானா? அந்தப் பயல் எங்கிருந்தாலும் சரி; கட்டி இழுத்துவாருங்கள்.

[இச்சமயத்தில் சிற்பி தினகர் அவனது வீரர்களை குகையைச் சுற்றியிருக்கச் சொல்லிவிட்டுத் தான் மட்டும் உள்ளே நுழைகிறான்]

தினகர்: எங்கேயும் இல்லை. இங்கேதானிருக்கிறேன்.

மந்திரி: தப்பித்தோடிய தான்தோன்றிப் பயலே! என்கையில் சிக்கிவிட்டாய்! இனித்தப்ப முடியாது! பூனை புலித்தோல் போர்த்திக்கொண்டு வந்தால் பயந்துவிடமாட்டோமடா!

தினகர்: புலி பூனையாக இருந்த காலம் மாறி, உண்மையில் பதினாறு அடி பாயும் வேங்கைபோல் தாவி நிற்கிறது; என்று எண்ணிக்கொள்ளடா மடையா!

[தினகர் கத்தியை உருவிக்கொண்டு தனது வீரர்களை அழைக்கிறான், விசிலை ஊதி]

[வீரர்கள் உள்ளே நுழைகின்றனர் பெரும் போர் நடக்கிறது]

தினகர்: யாரும் ஓடாதீர்கள். நில்லுங்கள் அப்படியே. பிடித்துக்கட்டுங்கள் இவனை (மந்திரி சோமனாதனை பிடித்து இரு வீரர்கள் கட்டுகின்றனர். கத்தியின்

நுனியால் தலைவனின் முகமூடியை எடுக்கிறான் தினகர். திடுக்கிடுகிறான் சுதாரித்துக்கொண்டு)

தினகர்: ஓ! மச்ச நாட்டு மாமல்லரின் அந்தரங்க அமைச்சர் சோமனாதர் அவர்களா? ஓய் மந்திரியாரே!.... எத்தனை நாளாக இந்த உத்தியோகம் பார்க்கிறீர்கள்? ஒருவேளை மந்திரி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டீர்களோ? (மந்திரி திமுறுதல்)

சந்தர்: மந்திரி பதவியை ராஜினாமாச் செய்வதா? ஒரு போதும் மாட்டாரப்பா...! உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் மந்திரியாரே! ஏன் பதில் பேசவில்லை. உன்னுடைய சுய உருவம் தெரிந்து விட்டதே என்று மனக்குழப்பமோ. ! அஞ்சாதே! மந்திரியாரே! அஞ்சாதே!! கூடியசீக்கிரம் அரண்மனையில் தங்கக்காப்புடன் விருந்தாளியாக இருக்கவேண்டாமா? வேலியே பயிரை மேய்ந்து விட்டது தினகர்! சமய சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருக்கும் மந்திரியாரே! காலம் உங்களை வஞ்சித்து விட்டதோ!

தினகர்: இந்தத் தேசத் துரோகியை இழுத்துச் செல்லுங்கள் அரசவைக்கு.

(அரண்மனைக்கு இழுத்துச் செல்லுதல்)

காட்சி 38

[மச்ச நாட்டு அரசவை. அரசர், அமைச்சர்கள், பிரதானிகள் கூடியிருக்கின்றனர். கொள்ளைக்கூட்டத்தின் தலைவனை முகமூடியுடன் இழுத்துவந்து குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகிறான் தினகர்].

தினகர்: மன்னா! நாட்டிலே கொள்ளையடித்தும், கொலை செய்தும், குடிசைகளில் தீவைத்தும், கொண்டாட்டம் போட்ட கொடும்பாவி இதோ இருக்கின்றானே இவன்தான்! நாட்டிலே நடமாடும் நச்சுப்புழு. வேலியே பயிரை மேய்ந்துவிட்டது

என்ற பழமொழிக்குகந்தாற்போல் இருக்கிறது இவரது செய்கை. நாட்டைக் காக்கும் நல்லவனும் கொள்ளைக்கூட்டத்தின் தலைவனும், ஒரு சிற்பியை ஒழிக்கத் திட்டம்போட்டுக் காரியம் நடத்திச் சதி செய்கின்றார்கள். அந்தச் சிற்பி வேறு யாரு மல்ல நான்தான்! என்னைக் கொல்வதற்குச் சதித் திட்டமிட்டான் இந்தச் சண்டாளன். இவன் வேறு யாருமல்ல; முகமூடியணிந்துசொண்டு இதோ நிற்கின்றானே! நாட்டைக் காக்கும் மந்திரி சோமனாதனே! பாருங்கள் இவர் திருமுகத்தை! (கையினால் முகமூடியைக் கிழித்தல்)

எல்லோரும்: ஆ! மந்திரி! ஆச்சர்யமாக இருக்கிறதே!

தினகர்: ஏன் ஆச்சர்யப்படுகிறீர்கள்?........மந்திரி என்ற பெயர் சூட்டிக்கொண்டு நாட்டிலே நடமாட வந்து விட்டானே! பேசுகிறதெல்லாம் ஒழுக்கம் உண்மை பற்றி! செய்கிறதெல்லாம் கொள்ளையடித்தல்! உண்ண உணவில்லை, பொருளில்லை என்று ஏங்கித் தவிக்கிறார்கள் மக்கள் இவர்களால்! ஆனால் குகையிலே இங்கேயிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைக் குவிக்கிறார்கள் மலைபோல் அங்கே! ஏழைகளின் கூக்குரல் இங்கே.......! கொள்ளையர்களின் கும்மாளம் அங்கே.......!

மந்திரி: நான் கொள்ளைக்கூட்டத்தின் தலைவன் என்று நீ சொன்னால், மன்னரும் மற்றவர்களும் நம்பி விட என்ன ஆதாரம்? நிரபராதியான என்னைப் பிடித்துக் குற்றத்தைச் சாற்றுகிறாயே? இவைகளுக்குத் தகுந்த ஆதாரம் தேவை? இல்லையானால் (கோபமாக) ....

தினகர்: நிறுத்து இதோ ஆதாரங்கள் முதலாவது ஆதாரம் நீ அணிந்திருக்கும் உடைகள். தெரிகிறதா....!

மந்திரி: வேறொரு காரணத்திற்காக இதை உடுத்தேன். உனக்கென்ன தெரியும் எலிக்குஞ்சு!

[சந்தர் வருகிறான்.]

சந்தர்: அந்தக் காரணம்தான் தேவை எங்களுக்கு.

மந்திரி: அது என் சொந்த விஷயம்....! அதில் தலையிடுவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை. நியாயமான ஆதாரம்தான் தேவை எனக்கு!

தினகர்: நியாயம் அநியாயம் இவற்றில் கரைகண்ட அப்பனே! ஆதாரம் தேவையா? இதோ தருகிறேன். குத்துண்டு மாண்ட வீரர்கள், குடிசைகளில் வைத்த தீ இவைகள்தான் ஆதாரம்.

அரசர்: எனது உப்பைத்தின்று, குடிகளுக்குத் துரோகம் செய்த கொடும்பாவியே! நீ செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை விதித்தாலும் தகும்.

மந்திரி: மன்னர் அவர்களே! கொஞ்சம் பொறுத்தருள வேண்டும்! (தினகரைப் பார்த்து) நீ கூறுவது நம்பமுடியாத ஆதாரங்கள்; தெரிகிறதா....?

தினகர்: தெரியவைக்கிறேன். நானே உன்னைப்பிடித்திருக்கிறேன். இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்....?

மந்திரி: நீ என்ன அரிச்சந்திரனுக்கு அண்ணனோ? நீ சொல்வதை நான் நம்பிவிட.... அவ்வளவு ஏமாந்தவன் அல்ல நான் கேளுங்கள் சபையோர்களே! கேளுங்கள்! கேட்டறிந்து தீர்ப்புக்கூறுங்கள்! கொள்ளைக்கூட்டத்தைப் பிடித்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த உடையில் குகைக்குள் சென்று, கொள்ளைக்கூட்டத்தைப் பிடிக்க நினைத்த என்னை, திடீரென்று சூழ்ந்து பிடித்துக் கொண்டு குற்றத்தைச் சாற்றுகிறாயே....உன்னைத்தான் கேட்கிறேன்....! என்னை வாளேந்திப் போர் செய்து பிடித்தாயா! அல்லது வேல் கொண்டு தாக்கி விரட்டிப் பிடித்தாயா....?

தினகர்: எதிர்க் கேள்விகள் பலமாக இருக்கின்றனவே? தருகிறேன் பதில் கூட்டத்தின் நடுவிலே என்னைப்

பிடிக்கச் சதிசெய்துகொண்டிருக்கும் பொழுது பிடித்தேனடா உன்னை... (மன்னரிடம்) மன்னா! நம்புங்கள் என்னை! இவன்தான் கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் தப்புவதற்கு நாடகம் நடிக்கிறான்

மந்திரி: மன்னா! நான் கொள்ளைக்கூட்டத்துத் தலைவன் என்று, என்னைப் பிடித்திருந்தான் என்றால் என்னுடன் வாட்போர் செய்யட்டும்.

அரசர்: என்ன சொல்கிறாய் .. சிற்பியே!

தினகர்: கொக்கரிக்கும் கோழியே! சொல்கிறேன் கேள். கொட்டும் மழையிலும், குமுறிவரும் இடியிலும், சீறிவரும் புயலிலும் போர்க்களத்திலே புறமுதுகு காட்டாமல் எதிர்த்துவரும் ஈட்டியுடனும், சுழன்று வரும் வாளுடனும், பறந்து வரும் குதிரைகளுடனும், இரும்புக் கவச மணிந்த எத்தனையோ வீரர்களுடனும், எதிர்த்துப் போர் செய்து வெற்றிக்கொடி நாட்டிய வீரப்பரம்பரையில் உதித்தவன் என்று நினைத்துக்கொள். (வாளைத் தூக்கியெறிதல்) உயிர்மேல் ஆசை இருக்குமானால் தடுத்துக்கொள். தருகிறேன் நானே தண்டனை.

[கூண்டிலிருந்த மந்திரி சோமனாதன் கோரச் சிரிப்பு சிரித்தபடி கூண்டைவிட்டுத் தாவி தினகரிடம் வாளை வீசினான், இருவரும் வாளை வீசினர் சபையிலிருந்த அத்தனை பேரும் ஆச்சர்யத்துடன் மெய்மறந்து நிற்கின்றனர். இருவருடைய வாள் வீச்சும் சபையோரை நடுங்கச் செய்கிறது. அரசர் தினகரையே பார்த்துக்கொண்டிருக்கிறார். தினகர் அங்கும் இங்கும் தாவி மந்திரியைச் சோர்வடையச் செய்கிறான். தினகர், சோமனாதனின் கழுத்தைக் குறிபார்த்தபடி வாளை வீசினான் சோமனாதன் தலையைச் சாய்த்தான். தலைமயிரை நறுக்கிவிட்டது. தினகரை அனைவரும் பார்க்கின்றனர். தினகர் மறுபடியும் வாளை வீசுகிறான். சோமனாதன் கையில் காயம் ஏற்பட்டது. மீண்

டும் இருவரும் கோபமாக மோதினர். இருவரும் சபையைச் சுற்றி வந்தனர். சோமனுதனின் முகத்திலே கீறல் ஏற்பட்டது. தள்ளாடி சோர் வடைந்தபடியே தினகர், சுழற்றிய வாளை மறித் தான். சோமனுதனின் வாள் கீழே விழுந்தது. தினகர் தன் வாளின் நுனியை அவன் மார்பில் வைத்தபடி நிற்கிறுன். சோமனுதன் அரசனையும் அவனையும் மாறி மாறிப் பார்க்கிறுன்].

தினகர்: குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துங்கள் இவனை.

அரசர்: இப்பொழுதாவது குற்றத்தை ஒப்புக்கொள்கி றுயா....?

மந்திரி: ஆதாரம் தான் தேவை....எனக்கு!

சந்தர்: ஆதாரம், ஆதாரம் என்று கூறி தப்பிப்பதற்கு வழி கண்டுபிடிக்கும் பேயனே! இதோ தருகி றேன்! இறுதி ஆதாரங்கள்! இதோ மந்திரியார் ஆடை; மன்னர் மன்னு! இதைக் குகையிலிருந்து கைப்பற்றினேன். மேலும் ஆதாரம் தருகிறேண். [கொள்ளைக்கூட்டத்தினரை வெளியே இருந்து அழைத்தல்]

சந்தர்: (கொள்ளைக்கூட்டத்தாரை நோக்கி, மந்திரியைச் சுட்டிக் காட்டி) இவன் யார் தெரியுமா?

ஒருவன்: தெரியுமுங்க! எங்க எஜமானுங்க இவரு. நான் பிள்ளைக்குட்டிக்காரங்க. என்னை விட்டுடுங்க.

சந்தர்: இது யாருடைய உடை....?

2ம் வீரன்: இதுவும் மந்திரி எஜமான் உடைதானுங்க இது எப்படீங்க கிடைச்சது. பெட்டியிலே வைச்சு நல்லா பூட்டியில்ல இருந்தாரு........!

சந்தர்: (தினகரைச் சுட்டிக்காட்டி) இவர் யார் தெரியுமா?

3ம் வீரன்: கொஞ்சம் தெரியுமுங்க. நேறறு ஊருக்குள்ளே கொள்ளையடித்துவிட்டு எங்க கோட்டைக்கு வந்த முங்க எங்க எஜமான் எங்களைப்பார்த்து அந்தச்

சிற்பியை எங்கிருந்தாலும் பிடிச்சிழுத்துக்கிட்டு வாங்கடா என்று சொன்னாரு அதுக்குள்ளா இவரு வந்து (தினகரைக்காட்டி) எங்க எஜமானைப் பிடிச்சிக்கிட்டாங்க

சந்தர்: மன்னர் மன்னா! இப்பொழுதாவது குற்றவாளி யார் என்று தெரிந்து கொண்டீர்களா?

அரசன்: மந்திரியாரே! இப்பொழுது என்ன சொல்கிறீர்? ஏழைகளின் பாவம் பொல்லாதது. ஏழைகளின் இரத்தத்தை உரிஞ்சி கொள்ளையடித்துத் தன் புறுத்திய கொடியவனே! நீ இன்னும் மந்திரி என்ற பெயரிலே நடமாடிக் கொண்டிருக்கிறாய். நீ செய்த அக்ரமங்களுக்கு உன்னை அணு அணுவாகக் கொல்லவேண்டும் நீ என்னிடத்தில் மந்திரியாக இருந்த காரணத்தால் உனக்கு ஆயுள் தண்டனை அளித்திருக்கிறேன். மனம் உருகி உருகிச் சாகட்டும். இவர்கள் எல்லோரையும் பாதாளச் சிறையில் அடையுங்கள். மந்திரி இல்லாமல் நாடு இருக்கக்கூடாது என்பதற்காக அரசாங்கக்கவியை மந்திரியாக ஏற்றுக்கொள்ளுகிறேன்

தினகர்: சந்தர்: } மன்னர் மன்னா! நாங்கள் வருகிறோம் நாளை. (போகிறார்கள்)

காட்சி 39.

[மச்சநாடு மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருக்கிறது. கலை விழா. அதோடு பத்மாவின் பிறந்ததின விழா. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வந்த மன்னர்கள் சிலையைப் பார்த்துப் புகழ்கின்றனர். இளவரசி பத்மா பல்லக்கில் வருகிறாள். மக்கள் மகிழ்ச்சியுடன் மலர்களை வாரி யிறைக்கிறார்கள். தினகரும், சந்தரும் இவைகளை யெல்லாம் பார்த்துப் பூரிக்கின்றனர்].

(அரசரும் புது மந்திரியும் சிலையைப் பார்வையிடுகின்றனர்).

அரசர்: மந்திரி! சிலையைப் பார்த்தீர்களா? பத்மாவைப் போல் இருக்கிறது. பத்மாவுக்கும் சிலைக்கும் எந்த வித வித்தியாசமும் இல்லை. சிற்பியைப் பார்த்ததி லிருந்து அவனிடத்தில் ஒருவித அன்பு ஏற்பட் டிருக்கிறது. என்னையறியாமல். அவனிடத்தில் பற்றுதல் உண்டாகிறது. உண்மையிலேயே அவன் சிற்பியாக இருக்கமுடியாது. ராஜபரம்பரையிலே உதித்தவனாக இருக்கவேண்டும்.

மந்திரி: ஆமாம் அரசே! அவர் அன்று சபையிலே மந்திரி யுடன் சண்டை செய்ததிலிருந்து எனக்கும் அப் படித்தான் தோன்றுகிறது.

அரசர்: சிலைக்கு என்ன பரிசு கொடுக்கலாம்?

மந்திரி: நன்றாக யோசித்துச் செய்யவேண்டிய காரியம்.

அரசர்: யோசனை என்ன! பத்மாவையே பரிசாகக் கொடுக்க விரும்புகிறேன்!

மந்திரி: தாங்கள் அரசபரம்பரை! அவரோ சிற்பி! இருந்த போதிலும் சிற்பியை மணம் செய்து கொள்ள பத்மா சம்மதிப்பார்களா? [பத்மா வருகிறாள்]

பத்மா: அப்பா! அப்பா!! சிலை எவ்வளவு நன்றாக இருக் கிறது பார்த்தீர்களா அப்பா!

அரசர்: சிலை நன்றாகத்தான் இருக்கிறது. இதற்கு என் னம்மா பரிசு கொடுக்கலாம்...?

மந்திரி: நீதானம்மா ஒரு பரிசைச் சொல்லவேண்டும்!

பத்மா: அவருக்குப் பரிசு கொடுப்பதற்குரிய பொருள் உலகத்திலே ஒன்றுமே கிடையாதப்பா. அவர் செதுக்கிய சிலையும், அவர் நாட்டுக்குச் செய்த சேவையும் அரிது! அரிது!!

அரசர்: என்ன பத்மா! இவ்வளவு புகழ்கிறாய்! கொடுக்கக் கூடிய பரிசைச் சொல்லம்மா!

பத்மா: நான் சொல்லக்கூடிய பரிசை நீங்கள் கொடுக்க மாட்டீர்களே அப்பா?

அரசர்: என்ன பத்மா? நான் கொடுக்கமாட்டேனு! என் உயிரல்லவா நீ!....சரி என்ன சொல்லம்மா?

பத்மா: நீங்கள் உயிருக்குயிராக விரும்பும் பொருளைக் கொடுப்பீர்களாப்பா?

அரசர்: அவர் செய்த சேவைக்கு என் உயிரைக் கொடுத்தாலும் தகும் அம்மா!

பத்மா: நான் சொல்வதை நிச்சயம் கொடுப்பீர்களா அப்பா?

அரசர்: நீ சொல்லியதை எதையம்மா தட்டியிருக்கிறேன்? உனது தாய் இறந்ததிலிருந்து என் உயிருக்கு மேலாக அல்லவா உன்னைக் கருதுகிறேன்.

பத்மா: அப்படி என்ருல் என்னையே அவருக்குப் பரிசாக கொடுங்களேன்!

மந்திரி: அவனே சிற்பி. நாமோ ராஜகுலம். நமக்கும் அவனுக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அம்மா.

அரசர்: சபாஷ் பத்மா! நான் நினைத்ததையே நீ சொல்லிவிட்டாயே! நீ சந்தோஷமாக இருந்தால்தானே அம்மா நான் சந்தோஷமாக இருக்கலாம் (மந்திரியைப் பார்த்து) அந்தச் சிற்பிக்கே பத்மாவைப் பரிசாக அளிக்கப்போகிறேன். ராஜபரம்பரையிலே இல்லாத புதிய முறையைக் கையாண்டான் மச்ச நாட்டு மன்னன் மாமல்லன், என்ற பெயர் கிடைக்கட்டுமே. நாளைச் சபையிலே எல்லோர் முன்னிலையிலும் ஏற்பாடு செய்கிறேன்.

காட்சி 40.

[அரசவை. அரசனும், மற்றும் மந்திரியும், குடிகளும் எல்லோரும் கூடியிருக்கிருர்கள் தினகர், சந்தர் வருகிருர்கள்]

அரசர்: இங்கு கூடியுள்ள பெரியோர்களே! பிரியமுள்ள ராஜப்பற்றுள்ள மச்சநாட்டுக் குடிகளே! பத்மாவின் பிறந்தநாள் விழாவை இவ்வளவு பெருமை

யடையச் செய்தவர் சிற்பி. நிற்க நாட்டிலே கொள்ளையடித்துக் கொட்டமடித்துத் திரிந்த கொடியவன் மந்திரி சோமனுதனைப் பிடித்தவரும் இவர்தான். நம் நாட்டையே ஒரு கொடியவனிட மிருந்து காப்பாற்றியுள்ளார். மச்சநாடு கலையில் அழியாப்புகழை அடையச் செய்ததற்காக அவ ருக்கு என்ன பரிசு கொடுப்பது என்பதை முடிவு கட்டியுள்ளேன். நான் கொடுக்கப்போகும் பரி சுக்கு நீங்கள் ஆதரவு தருவீர்கள் என்று நினைக் கிறேன். சிற்பிக்கு இளவரசி பத்மாவையே பரி சாகக் கொடுக்கப்போகிறேன். உங்கள் விருப்பத் தை நாடுகின்றேன்.

குடிகள்: கூடாது! கூடாது!! அவர் அரசகுலம் இல்லை.

சந்தர்: மன்னர் மன்னு! இவர் சிற்பி அல்ல. இவர் ஒரு இளவரசன் இரத்தினபுரி நாட்டு மன்னன் விக்கிரம மன்னனின் மகன். பெயர் தினகர்.

அரசர்: ஊ! அப்படியா! என் சகோதரி மகனு!

தினகர்: என்ன நீங்கள் என் மாமாவா! இதுநாள்வரை எனக்குத் தெரியாதே! (ஒருவரோடு ஒருவர் கட் டிக் கொள்ளுதல்)

அரசர்: இவர் உன் அத்தை மகன் பத்மா! இப்பொழுது தெரிந்து கொண்டாயா!

பத்மா: நீங்கள் எனக்கு அத்தை மகன் இருப்பதாகச் சொன்னீர்களே (தினகரைப் பார்த்தாள்).

அரசர்: ஏனப்பா இப்படி சிற்பியாகிவிட்டீர்கள்?

சந்தர்: மன்னவா! நாங்கள் சிற்பியின் உருவிலே வந்தோம் காரணம் நாட்டாசை பிடித்த நயவஞ்சகர்கள் எங்கள் நாட்டைக் கைப்பற்றியதால். அவர் சீறிப் பாயும் சிங்கமென்று தெரிந்து கொண்டீர்கள் அல்லவா இப்பொழுது....?

[எல்லோரும் தினகரைப் பார்க்கின்றனர்].

தினகர்: மாமா! இவன் தான் என் நண்பன்! சேனாதிபதியின் மகன். பெயர் சந்தர்.

அரசர்: திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடக்கட்டும். உனக்குச் சம்மதந்தானே தினகர்?

தினகர்: எனக்கு வேண்டியது படைகள்தான். எங்கள் நாட்டை திருப்பிப் பெறாமல் திருமணம் இல்லை, இந்த உதவியைச் செய்வீர்களா?

[இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பத்மா, திருமணத்தைத் தினகர் தள்ளிப்போட்டதை எண்ணி அழுது கொண்டே தன் அறைக்குச் செல்கிறாள். இவற்றைக் கவனிக்கிறான் தினகர்]

அரசர்: தினகர்! நானும் வருகிறேன் போருக்கு! நாம் எல்லோரும் போய் நியாயமான முறையில் நாட்டை விட்டுப் போகச் சொல்லுவோம். மறுத்தால் புறமுதுகு காட்டி ஓடச்செய்வோம்.

தினகர்: அப்படியானால் நாளைக்குப் புறப்படவேண்டிய ஏற்பாடு செய்வோம்.

காட்சி 41.

[தினகரும், சந்தரும் கோட்டைக்கு வெளியே நிற்கிறார்கள்].

தினகர்: சந்தர்! நான் பத்மாவைப் பார்த்துவிட்டு வருகிறேன். எங்கள் நாட்டை அடையாமல் திருமணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொன்னவுடன் அவளுடைய முகமே மாறிவிட்டது. நான் போய்ப் பார்க்காவிடில் மிகவும் கவலைப்படுவாள்.

சந்தர்: சரி தினகர் ! உடனே புறப்படு !!

[தினகர் சென்றவுடன் அவனைப்பின் தொடர்கிறான்.]

[தினகர் அரண்மனை அந்தப்புரத்திற்கு வருகிறான் அங்கே தன்னைப் பறறிய பேச்சு நடப்பதைக் கவனிகிறான்.]

சாரதா: ஏன் அம்மா நீங்கள் கவலைப் படவேண்டும். உங்களைத் தவிர வேறு யாரையும் மணம் செய்து கொள்ளமாட்டார்.

பத்மா: அது சரி! ஏன் இப்பொழுது மறுத்துவிட்டார்?

சாரதா: தன் நாட்டைக் கைப்பற்றுமல் எப்படியம்மா திருமணம் செய்து கொள்வது? அப்படிச் செய்தால் அவரை சுயநலக்காரன் என்றல்லவா ஏசுவார்கள்

பத்மா: இப்பொழுது அவர் எங்கிருப்பார்? அழைத்து வருகிருயா பார்க்க?

சாரதா: இதோ...... உடனே........

[தினகரை அழைத்து வரச் செல்கிருள். எதிர் பாராத விதமாகத் தினகர் வருகிருன். தினகரை கண்டதும்...........].

சாரதா: உங்களை இளவரசியம்மா அழைத்துவரச் சொன்னுர்கள்.

தினகர்: அதற்குத்தானே நானும் வருகிறேன்.

[இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சந்தர், தினகர் சென்றதும்; சாரதாவை அழைக்கிருன். சந்தரும் சாரதாவும் வேறுபக்கம் செல்கின்றனர்]

[பத்மா மலர்த்தோட்டத்தில் உட்கார்ந்துகொண்டு இருக்கிருள். அப்பொழுது தினகர் வருகிருன். தினகரைக் கண்டதும் பத்மா மிகவும் வருத்தப் படுபவள்போல் காணப்படுகிருள்.]

தினகர்: பத்மா! பத்மா! ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிருய்? என்ன நேர்ந்தது சொல் பத்மா?

பத்மா: என்மேல் பிரியமில்லைபோலிருக்கிறது உங்களுக்கு இல்லாவிட்டால் அன்று அப்படிச்சொல்வீர்களா?

தினகர்: என்னைப்பார் பத்மா! உன்மேல் பிரியமில்லை என்று சொன்னேன்?

பத்மா: நான் எதற்காக இருக்கிறேன் அத்தான்? (கண்ணீர் விடுகிறாள்.)

தினகர்: அதுஎன்ன பத்மா! அப்படிச் சொல்கிறாய்? என்உடல், பொருள், ஆவிஎல்லாம் உனக்குத் தானே!

பத்மா: அன்று என்தந்தை திருமணத்திற்கு ஏற்பாடு செய்யச்சொல்லும் பொழுது தடுத்துவிட்டீர்களே

தினகர்: பத்மா! உன்மேல் பிரியமில்லாமல் நான் சொன்னேன் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய் அப்படி நினைக்காதே. எனது வாழ்க்கைச் சரிதத்தைக் கேள்விப்பட்டிருக்கவும் மாட்டாய்! என் நிலைமையை உணரவில்லை நீ! அதனால்தான் அவ்வாறு பேசுகிறாய்.

பத்மா: கேள்விப்பட்டேன்; அன்று அரசசபையில் உங்கள் நண்பர் கூறியதை இத்தனைநாள் வரை என்னிடம் ஏன் கூறாமலிருந்தீர்கள்?

தினகர்: காரணமின்றிக் கூறாமலிருக்கமாட்டேன் பத்மா! எனது விரோதி நிகும்பனை ஒழித்து தாயகத்தை பெற்ற பிறகு நம் திருமணத்தை முடித்துக் கொள்வோம். சரிதானே பத்மா!

பத்மா: சரி அத்தான்! முதலில் தாயகத்தை மீட்டி வாருங்கள்.

தினகர்: சரி. சென்றுவருகிறேன்!

[சந்தரும் சாரதாவும் தோட்டத்தின் மற்றொரு மூலையில்]

சந்தர்: சாரதா! நாம் சந்தித்து வெகுநாட்களாகிவிட்டது கண்ணே! உன்னைப் பார்க்காமல் ஒருவினாடிகூட

இருக்கமுடியவில்லே. சாரதா! ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! நாளே நம் படைகளுடன் எங்களேச் சீரழித்த அந்த நயவஞ்சக நரியைக் கொன்று நாட்டை மீட்கச் செல்லுகிறேம். வெற்றிக்குப் பின் நம் திருமணம்.

சாரதா: என்னங்க அத்தான் காதல் கீதம்....பாடவேண்டிய நேரத்தில்........

சந்தர்: கடமைகீதம் பாடுகிருனே என்று நினேக்கின்ருயா! அஞ்சாதே என் இதய இராணியே! விரைவில் வருகிறேன். சென்று வரட்டுமா. [சாரதாவின் முகம் வாட்டமடைகிறது.]

சாரதா: அதற்குள்ளாகவா நீங்கள் போகவேண்டும்.

சந்தர்: (அவள் கண்ணீரைத் துடைத்து) அழலாமா சிறு குழந்தை மாதிரி! சிரி பார்க்கலாம். (சிரிக்கிருள்) சென்று வருகிறேன் சாரதா!

சாரதா: ....உம்........ [போகிருன்]

காட்சி 42

[மச்சநாட்டிலிருந்து தினகர் தலேமையில் படைகள் இரத்தினபுரியை நோக்கி விரைகின்றன. அரசர் மாமல்லர், புதுமந்திரி, தினகர், சந்தர், மற்ற வீரர்கள் யாவரும் செல்கின்றனர். எல்லேயை அடைந்ததும்........]

தினகர்: சந்தர் நீ மட்டும் ஒற்றன்போல் நடித்து இரத்தினபுரி சென்று நாட்டைத் தரமுடியுமா அல்லது போருக்குத் தயாரா என்று வினவிவா.

சந்தர்: சரி சென்று வருகிறேன்.

[இரத்தினபுரி அரண்மனைக்கு சந்தர் வருகிறான். மன்னன் முன்........]

சந்தர்: மாண்புமிக்க மாசற்ற மாவீரர் பரம்பரையிலே உதித்து, ராஜ பரம்பரைக்கே அழியாத இழுக்கைத்தேடிக்கொண்டு ஆட்சி நடத்தி அட்டகாசம் செய்துகொண்டிருக்கும் ஆட்டுக் கூட்டத்தின் தலைவரான நிகும்ப மன்னவரே....! வணக்கம்!

நிகும்பன்: அனாவசியமான பேச்சுக்கள் தேவையில்லை இங்கு வந்த காரணம்........?

சந்தர்: சொல்லுகிறேன்! கேளுங்கள். வற்றாத ஓடைகளும் வாய்த்த சோலைகளும் பெற்று விளங்கும் எங்கள் நாட்டைவிட்டுப்போய் வெகு நாட்கள் ஆகியும், உன் கொடுமைக்கு முடிவுகட்டி, உன் கொட்டத்தை அடக்க வந்துள்ளான் தினகர். சேனாதிபதியின் குமாரன் சந்தர் நான்! எங்கள் தந்தையையும் எங்கள் நாட்டு மக்களையும் கொடுமைக்குள்ளாக்கிய உன்னைப் பழிக்குப்பழி வாங்கவே இங்கு வந்துள்ளோம். உயிர் மேல் ஆசையிருந்தால் பேசாமல் நாட்டை எங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போய்விடு. இல்லையேல் உன் தலை தரையில் உருளும்.

நிகும்பன்: என்னடா உளறுகிறாய்! உன் அரட்டலுக்கும், மிரட்டலுக்கும் அசந்துவிடுவான் இந்த நிகும்பன் என்றெண்ணாதே! பிடியுங்கள் இவனை!

சந்தர்: நெருங்காதீர்கள்! நெருங்கினால் உங்கள் உயிர் உங்களுக்குச் சொந்தம் இல்லை!
[தப்பித்து மேல்மாடிக்கு விளக்குக் கம்பி மூலம் சென்றுவிடுகிறான்.]

சந்தர்: (நிகும்பனைப் பார்த்து) நாளைக்குப் போருக்குத் தயாராகுங்கள். இந்த வாள் உன்னை நாளைச் சந்திக்கும் போர்க்களத்தில். அப்பொழுது பதில் கூறும். [தப்பிவிடுகிறான்].

காட்சி 43

[மறுநாள் தினகரின் படைக்கும், நிகும்பனின் படைக்கும் போர் நடக்கிறது. கோட்டையின்மேல் நின்ற நிகும்பனைச் சந்தர் பார்க்கிருன். சந்தரும், தினகரும் கோட்டை மீது ஏறுகிருர்கள். எதிரில் வந்த வீரர்களை வெட்டி எறிகின்றனர். தினகருக்கும், நிகும்பனுக்கும் போர் நடக்கிறது. சந்தர் கோட்டையின் மேலிருந்த மாட்டுக் கொடியை இறக்கிவிட்டு சிம்மக் கொடியை ஏற்றுகிருன். நிகும்பனின் படைகள் புறமுதுகு காட்டி ஓடுகின்றன. நிகும்பன் இறக்கிருன். தினகர் சிறைச்சாலைக்குச் சென்று பெற்ருேர்களை விடுவிக்கிருன்.]

தினகர்: அப்பா (தழுவிக்கொள்ளல்)

[அந்தச்சமயத்தில் மன்னர் மாமல்லர் வருகிருர்]

மாமல்லர்: ஆ! விக்கிரமஞ? என் மைத்துனரா? (இருவரும் கட்டித்தழுவிக்கொள்ளல்)

இராணி: அண்ணு! அண்ணு!

மாமல்லர்: சகோதரி! சரி எல்லோரும் புறப்படுங்கள் எமது நாட்டிற்கு! முதலில் திருமணம் பிறகு பேச்சு.

காட்சி 44.

[பத்மாவுக்கும் தினகருக்கும், சாரதாவுக்கும் சந்தருக்கும் ஒரே நேரத்தில் மணம் நடக்கிறது. மன்னர்கள் மகிழ்கின்றனர். சிறபியின் சிலை திருமண மண்டபத்தில் இருந்து சிரித்துக் கொண்டிருக்கிறது]

வணக்கம்!

TAMIL NADU ARCHIVES

எதிர்பாருங்கள்!

விரைவில் உருவாகிறது

அன்பின் ஜோதியாய் அலைமோதிய இருஉள்ளம் ஒன்று சேரும் ஒரு ஓவிய கதையாக மாறி மிளிர்கின்றது,

"ஆசைக் காதலி"

★

நாள் தோறும் தவராது நெருங்கிப் பழகி நட்பின் சிகரத்தை எட்டிப் பிடிக்குங்கால் நண்பன் என்று பாராமல் சிநேகிதபாசத்தை சிதறி அடிக்கத் துணிந்து சிறுத்தை போன்று சீறி எழுந்த ஒரு துரோகியின் வரலாறுதான்,

"நண்பனின் துரோகம்"

★

மானிடப்பிறவியிலிருந்து மாறிப் பிறந்த ஒரு மானிடப் பிண்டம்தான் உருவாகிக்கொண்டிருக்கிருன்,

"மடாதிபதி"

உமையாள் பிரிண்டர்ஸ், சிவவங்கை—57.

அழகான அச்சு வேலைகளுக்கும்,

உறுதியான பைண்டிங் வேலைகளுக்கும்,

சிறந்த இடம்.

உமையாள் பிரிண்டர்ஸ்,

சிவகங்கை.